
கல்கி
KALKI 24.8.2003 ரூ.6.00
இரகசிய
நிலவு!


PARLE
அவனுக்கு
இது நல்லது.
தேங்காய் மற்றும் ஏலக்காயின்
சுவைமிக்க ஜோடி
இப்போது பார்லே-ஜீ மேஜிக்ஸ்
கோகோனட்-ஏலாய்ச்சி
பிஸ்கட்டில்.
இன்னும் வேணும், வேணும்
என்று கேட்டுக் கொண்டே
இருப்பான் அவன்.
உங்களுக்கும்
இது நல்லது.
பால், அயர்ன் மற்றும்
கால்சியத்தின்
நற்குணங்களோடு 7
விட்டமின்களாலும்
வளப்படுத்தப்பட்டுள்ளது.
தேங்காய் மற்றும்
ஏலக்காயின் சுவைகொண்டது
இந்த பார்லே-ஜீ மேஜிக்ஸ்
கோகோனட்-ஏலாய்ச்சி
பிஸ்கட்.
இதன் விலை ரூ.5 என்றால்
நீங்கள் யோசிக்கவே
வேண்டாம்.
PARLE
Parle-G
Magix
புதிய பார்லே-ஜீ மேஜிக்ஸ் கோகோனட்-எலாய்ச்சி

சிரிச்சுக்கிட்டே உள்ளே போங்க...



''கூல்டிரிங்ஸ்ல பூச்சி மருந்து இருக்கலாம். அதுக்காக இப்படியா?''

''என்னாச்சு?''

''வயலுக்கு அடிக்க எந்த கூல்டிரிங்ஸ் நல்லதுனு கேட்டுட்டுப் போறார்.''

- அ. பொன்முருகன்

24-27 அப்துல் கலாம் - சிவசங்கரி சந்திப்பு



81-82 ஸ்ரீரமணி ஸ்ரீவகாரம்:

வாசகர் விமர்சனம்

72-73 ட்ராக் மாறியது ஏன்?

-அஜீத்



52-54 'ஜெயலலிதாயிஸம்' என்பது என்ன?

-தராசு பதில்!

நடக்குமென்பார்; நடக்கும்!




மேஷம் : இந்த வாரம் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எடுத்த காரியங்களில் வெற்றியுண்டு. பணவசதிக்குப் பஞ்சமில்லை. இன்னொரு பக்கம் செலவு பர்ஸைப் பதம் பார்க்கும். அலுவலகத்திலிருந்து வந்த பிரச்னைகள், குழப்பங்கள், படிப்படியாகக் குறையும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவை கிடைக்கும்.



ரிஷபம் : இந்த வாரம் எதிர்பாராத வெளியூர்ப் பயணம் உண்டு. புதியவங்க அறிமுகம், தெய்வீக ஈடுபாடு ஏற்படும். இதுவரை இருந்து வந்த மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் யாவும் விலகும். அலுவலகத்தில் சுமுகமான சூழல் நிலவும். பேச்சில் நிதானம் அவசியம். வராமல் இழுத்தடிச்சுட்டிருந்த பணம் வந்து சேரும்.




மிதுனம் : எந்தக் காரியத்தையும் தலைகீழா நின்னாவது முடிச்சிடுவீங்க. அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை உருவாகும். புதிய முயற்சிகள்ல இறங்கறவங்களுக்கு நிச்சயம் வெற்றி உண்டு. எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். சினிமா, நாடகம் போன்ற கலைத் துறையினருக்கு முன்னேற்றம் உண்டு.




கடகம் : இந்த வாரம் எதிர்ப்புகள் மறையும். பண வசதி தாராளமா இருக்கும். முக்கியமானவங்க ஆதரவு கிடைக்கும். சின்னச் சின்னப் பிரச்னைகள், தடைகள் வந்தாலும் அதுபற்றி பெரிசா கவலைப்படத் தேவையில்லை. சக ஊழியர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரிடம் சுமுகமாகப் பேசுவது நல்லது. சுய தொழில், வியாபாரத்தில் அனுகூலமான திருப்பம் உண்டு. எதிர்பார்த்திட்டிருந்த பண உதவி கிடைக்கும்.




சிம்மம் : இந்த வாரம் மகிழ்ச்சி மழையில நனையப் போறீங்க. இதுவரை இருந்துவந்த குழப்பங்கள், சண்டை சச்சரவு எல்லாம் ஓயும். எதிலும் கவனமா செயல்படுவது அவசியம். 'எடுத்தோம் கவிழ்த்தோம்'னு செயல்படறதை நிறுத்துங்க. முக்கியமான முடிவுகளை இப்போ எடுக்க வேண்டாம். புதிய முயற்சிகளில் இறங்க நினைக்கிறவங்க கொஞ்சம் ஒத்திப் போடுவது நல்லது.



கன்னி : இந்த வாரம் உங்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது. எல்லா விஷயத்திலும் உங்களுக்கு நன்மை கிடைக்கும். இதுவரை இருந்த பிரச்னைகள், குறுக்கீடுகள் எல்லாம் மாயமாகும். புதிய வேலை முயற்சிகளில் வெற்றி உண்டு. வேலை விஷயமாகச் சிலர் வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை அபிவிருத்தி அடையும். சிலர் புதுசா வீடு, மனை, வாங்க வாய்ப்பிருக்கு.



துலாம் : எந்தக் காரியத்தை எடுத்தாலும் இந்த வாரம் வெற்றிகரமா செய்து முடிப்பீங்க. திடீர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடலாம். அந்தப் பயணத்தால நன்மை உண்டு. அலுவலகத்தில் மேலதிகாரிங்க பாராட்டுக் கிடைக்கும். புதிய வேலை முயற்சிகள் கைகூடும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். மருத்துவம், கெமிக்கல்ஸ், எலக்ட்ரிகல்ஸ் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு எதிர்பாராத முன்னேற்றம் உண்டு. பெண்களுக்கு எதிர்ப்புகள் மறையும். நினைத்ததை முடிப்பீங்க.



விருச்சிகம் : கிரக சஞ்சாரம் உங்கள் ராசிநாதன் செவ்வாய் நான்கில் அமர்ந்து குரு பார்வை பெற்று சஞ்சாரம் என்பதால் சிறு சிறு குழப்பங்கள் குறுக்கீடுகள் வரும். இதுக்காகக் கவலைப்படத் தேவையில்லை. அதுவாகவே மறையும். அலுவலகத்தில் மறைமுக, நேர்முக எதிர்ப்புகளைச்



நடிகை ரம்யா கிருஷ்ணனுக்கு (மகரம்) முன்னேற்றம் உண்டாம்.

சமாளித்து வெற்றி காண்பீர்கள். இதுவரை இழுபறியாக இருந்து வந்த பதவி உயர்வு இப்போது வந்து சேரும். கொடுக்கல், வாங்கல் அனுகூலம் தரும். புதிய தொழிலில் ஈடுபட சூழ்நிலை உருவாகும். வரவேண்டிய தொகை வந்து சேரும். குடும்பத்துல மகிழ்ச்சி, ஒற்றுமை நிலவும். கல்யாண மாகாதவங்களுக்கு அதுக்கான முயற்சி நடக்கும்.



தனுசு : உங்கள் ராசிநாதன் குரு ஒன்பதாம் இடத்தில் பலம் பெற்று ஆட்சி பெற்ற சூரியன் மற்றும் சுக்ரனுடன் சஞ்சாரம் என்பதால் தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு, பயணங்களில் அனுகூலம், குடும்பத்துல ஒற்றுமை உண்டாகும். குடும்பத்துல கணவன் மனைவி உறவு நிலை இனிமையா இருக்கும். கல்யாணம் போன்ற விசேஷங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் நண்பர்கள், உறவினர்கள் வருகை நிகழும்.



மகரம் : இந்த வாரம் எதிர்ப்புகள் மறையும். அதிகமா டென்ஷன் பண்ணிட்டிருந்த எதிரிகள் விலகிப் போவாங்க. மனகல தன்னம்பிக்கையும், துணிச்சலும் பிறக்கும். சுய தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. இதுவரை இருந்து வந்த பணப் பிரச்னை விலகும். கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். உணவுப் பொருட்கள், ஜவுளி, ரெடிமேடு, மருத்துவம், கெமிக்கல்ஸ், எலக்ட்ரானிக்ஸ் வகையில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மறைந்து சுமுகமான உறவு ஏற்படும். பெண்களுக்கு எதிர்ப்புகள் மறையும்.



கும்பம் : இந்த வாரம் குடும்பத்துல அமைதி நிலவும். பணப் பிரச்னைக்கு வழியில்லை. பண நடமாட்டம் தாராளமா இருக்கும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு இப்போ அதுக்கான வாய்ப்பு அமையும். எழுத்து, புத்தகம், பத்திரிகை, அச்சகம் போன்ற துறைகள் ஆதாயம் தரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்னைகள், குழப்பங்கள் எதிர்ப்புகள் மறையும். எதிர்பார்த்த பண உதவி வந்துசேரும். பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.



மீனம் : உங்க ராசிநாதன் குருபகவான் ஆறாமிடத்தில் மறைந்து ஆட்சி பெற்ற சூரியன் மற்றும் சூரியனுடன் கூடி சஞ்சாரங்கறதால தடைகள், குறுக்கீடுகள் யாவும் விலகும். புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அவங்களால நன்மை உண்டு. வியாபாரம், வர்த்தகம், சுய தொழில் ஆகிய வகையில் எதிர்பாராத நன்மை உண்டு. புதிய தொழிலில் ஈடுபட சந்தர்ப்பம் வரும். சொத்து பிரச்னைகள் சுமுகமா முடியும்.

அக்னிசர்மா பக்கம்

ஆகஸ்ட் 20 முதல் 26 வரை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

நீலன்! 'இரகசியமாய்' படத்தில் காதும் காதும் வைத்த மாதிரி நாயகியாய் நடித்துக் கொண்டிருக்கும் மும்பை நிலவு! எதிரும் புதிருமான கேள்விகளுக்குக் கூட சிந்தாமல் சிதறாமல் தந்த பதில்கள் இதோ!



அதிக சந்தோஷம் : பள்ளிக்கூட மாணவியா இருந்தப்போ கல்கத்தா போயிருந்தேன். அப்போ மதர்தெரஸாவைப் பார்த்து அவங்களைக் கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுத்திருக்கேன். அப்போ ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

கொஞ்சம் கவலை : கொஞ்சமில்லே! என்னோட அரியர்ஸை நினைச்சு நிறையவே கவலை வாட்டுது! மாடலிங் பண்ண வந்தப்புறம் என்னோட சயின்ஸ் ஆனர்ஸ் டிகிரி கோர்ஸ் அந்தரத்துலே தொங்குது!

தவிச்ச பிரச்னை : நாற்பது வருஷத்துக்கு அப்புறம், காஷ்மீரில் 'இரகசியமாய்' படத்தை எடுத்துருக்காங்க!

ஸ்ரீநகர், குல்மார்க் போன்ற ரொம்பவே பதற்றமான இடங்கள்லே கேம்ப் அடிச்சு, இரண்டு பாடல் காட்சிகளை ஷூட் பண்ணினோம். இராணுவ உயர் அதிகாரிகள் வந்து பாதுகாப்பு கொடுத்தாங்க. எங்க படக் குழுவைப் பாராட்டவும் செஞ்சாங்க. மக்கள் ஆர்வமா வந்து படப்பிடிப்பைப் பார்த்தாலும், அதையும் மீறி, அவங்க முகத்தில் பய ரேகைகள் தெரிஞ்சது. காஷ்மீரிலேருந்து கிளம்பற வரைக்கும் நான் ரொம்ப தவிச்சுப் போயிட்டேன்.



ரசிச்ச கற்பனை : 'இரகசியமாய்' படத்துலே எனக்கும், பிரசன்னாவுக்கும் காதல் உருவாகக் காரணமான விஷயத்தை இயக்குனர் சொன்னப்போ, ரொம்ப ரசிச்சேன்! ஏழாயிரத்துலேர்ந்து, எழுபதாயிரம் வரைக்கும் விலை கொடுத்து, வீடு முழுக்க போன்சாய் மரங்களை வாங்கி வைச்சு வளர்கிற காஸ்ட்லி பொழுது போக்கு எனக்கு! இதைப் பார்க்குற பிரசன்னா "விதையா பூமியிலே விழுந்து, அது விண்ணை முட்டுகிற மாதிரி பெரிய மரமா வளர்ந்து, நிழல் கொடுத்து, பல தலைமுறைக்குக் கனி கொடுத்து, பல ஆயிரம் பறவைகள் தங்க இடம் கொடுத்து... பட்டுப்போன பிறகும், கதவா, கட்டிலா மரம் இருக்கு... அப்படிப்பட்ட மரத்தை, ஒரு கட்டத்துக்கு அப்புறம் வளர விடாமல் அது தலையிலே குட்டிக்குட்டி கூண்டுக்குளே அடைக்கிறது சாடிஸம். இதை எப்படி நல்ல ரசனைன்னு ஒத்துக்க முடியும்னு?" என்னைக் கேட்பார். அங்கேயிருந்துதான் எங்க லவ் ஆரம்பிக்குது. இதுலே டைரக்டர் அமுதனோட கற்பனை எனக்கு ரொம்ப பிடிச்சுது.





இரகசிய நிலவு!

கலைந்த கனவு : எனக்குக் கனவு காணப் பிடிக்கும். 'குலாம்' படம் வந்தப்போ ராணி முகர்ஜியா அதுலே என்னைப் பொருத்தி கனவு கண்டேன். அதுக்கு முன்னாடி '1942 லவ் ஸ்டோரி'யிலே மனிஷா அறிமுகமானப்போ, அதுலே நான் நடிச்சதா கனவு கண்டேன்! 'லகான்'லே கிரேசி சிங்கா நானே இருந்திருக்ககூடாதான்னு ஏக்கம். சமீபத்துலே பகல்லே கண்ட கனவு : 'தேவதாஸ்'லே ஐஸுக்கு பதிலா நடிச்சு கென்ஸ் பட விழாவுக்குப் போறேன்!

கைகூடிய கனவு : பிரபல ஜெம்ஸ் ஷோருமுக்கு நான் மாடலிங் பண்ணினேன்! அதிலிருந்து அசத்தலான ஒரு படத்தை மெகா ஹோர்டிங் பலகையா, ஜிகு ஜிகு லைட்டிங்கோட, மும்பை ஏர்போர்ட் எதிர்லே வைச்சிருந்தாங்க! "நீ வேணா பாரு! தென்னிந்தியாவிலிருந்து ஹீரோயினைத் தேடி மும்பை வந்து இறங்குற இயக்குனர், தயாரிப்பாளர் கண்ணுலே இந்த ஹோர்டிங் பட்டு, உன் வீட்டுக் கதவைத் தட்டப் போறாங்கன்னு" என் தோழி சொன்னா. பெரிய ஆச்சர்யம்! மும்பைக்கு வேறு பெண்ணைப் பார்க்க வந்த படத்தோட இயக்குனர் அமுதனும், தயாரிப்பாளர் ஜானும், ஏர்போர்ட் ஹோர்டிங்கைப் பார்த்துட்டு என்னை வந்து செலக்ட் பண்ணிட்டாங்க.



"ராஜ்ய சபா, லோக் சபாவெல்லாம் தலைவருக்கு போரடிச்சுப் போச்சாம்!"

"அதனால என்னவாம்?"

"'அடுத்த தடவை ஐ.நா. சபைக்கு போட்டியிடப்போறேன்'னு சொல்றார்!"

- வசந்தி வள்ளுவன்

"இந்த தெருவில கட்சித் தலைவர்கள் அதிகமா?"

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"'பழைய அரிக்கைக்கு சேமியானு' ஒருத்தன் கூவிக்கிட்டே போனான்."

- அஜித் லால்



"கட்சி ஆபீசுக்கு வரவங்களுக்கெல்லாம் சாக்லெட் குடுங்க..."

"ஏன் தலைவா?"

"புது கோஷ்டி பிறந்திருக்குதே!"

- பம்மல் நாகராஜன்



பார்த்தாலே பரவசம் : காஷ்மீரில் உள்ள ஷாலிமார் கார்டனை மணிக்கணக்குலே ரசிக்கலாம். நான் இதுவரைக்கும் குளிர்கால காஷ்மீரைத்தான் சினிமாவில் பார்த்திருக்கேன். 'இரகசியமாய்' படத்துலே கோடை காஷ்மீர்தான் முழுக்க முழுக்க. ஷாலிமார் கார்டன் பசுமையை நீங்கள் பார்த்தாலே பரவசப்படுவீங்க.

கேட்டாலே தனி சுகம் : தமிழ் மொழியோட உச்சரிப்பும், ரீங்காரிப்பும் கேட்கக் கேட்க ரொம்ப சுகம். தென்னிந்திய மொழியிலே தமிழ்தான் இனிமையான மொழி! வணக்கம். பிடிச்சிருக்கு. நல்லா இருக்கீங்களா? பருவாயில்லை! சாப்ட்டீங்களா? இது மாதிரி பத்து தமிழ் வார்த்தைகள் இப்போ கத்து வைச்சிருக்கேன்.

பிடிச்ச ஹீரோ : பிரசன்னா! இவர் நடிச்ச தமிழ்லே ஒரே ஒரு படம்தான் வந்திருக்குன்னு சொன்னாங்க! அதனாலேதான் அடக்கமா இருக்காரோ என்னவோ! எப்படியிருந்தாலும் அலட்டல் இல்லாத யங், ஸ்வீட், ஸ்மார்ட் மேன்.

பிடிக்காத வில்லன் : ஜூனியர் புஷ்! இப்படிச் சொன்னதுக்காக அவர் என்மேலே வழக்குப் போட்டாலும் பரவாயில்லை. ஈராக்கை சுடுகாடு ஆக்கியது போதாதுன்னு, சதாம் மகன்களைச் சுட்டுக் கொன்னுட்டு, அதை உறுதிப்படுத்திக்க தில்லா டி.என்.ஏ. டெஸ்ட் பண்ற திமிர், ரொம்ப டூ மச்!

மறைக்கும் ரகசியம் : நான் ஏற்கெனவே தெலுங்கில் இரண்டு படங்கள் நடிச்சு முடிச்சுட்டேன்கிற இரகசியத்தை, 'இரகசியமாய்' படத் தயாரிப்பாளர் ஜான்கிட்டேயிருந்து மறைச்சுட்டேன். இனிமே படத்துலேருந்து என்னைத் தூக்க முடியாதுங்கறதுனாலே சொல்றேன்.

மறக்காத விஷயம் : 'இரகசியமாய்' படக்ளைமாக்ஸ் எடுக்கிறதுக்காக குஜராத்திலே, காந்திதாம் மாவட்டத்துலே இருக்கிற 'அதோய்' கிராமத்துக்குப் போனோம். படம் எடுத்துக்கிட்டு இருக்கும்போது ஒரு குட்டி பூகம்பம் வந்துருச்சு. நாங்க எண்பத்து மூன்று பேரும் அலறியடிச்சுப் போயிட்டோம். குஜராத்துக்கு குவேக்ராத்னு பெயர் மாத்திடலாம். இன்னும் அந்த பூமிக்குக் கோபம் அடங்கலே!

- ஜேஜோ

அட்டை, படங்கள் :

'இரகசியமாய்' படத்திலிருந்து


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்களின்
ஆசியால் எழுதப்பட்டு, ஸ்ரீமுகத்துடன் வெளிவரும் நூல்கள்



தேவார வைப்புத் தலங்கள்

464 பக்கங்கள் – விலை ரூ. 180/–

147 வைப்புத் தலங்களைப் பற்றி விளக்கமாக எழுதப்பட்டு வெளிவரும் முதல் நூல்.



திருமுறைத்தலங்கள்

944 பக்கங்கள் – விலை ரூ. 375/–

275 தேவாரத் திருமுறைத் தலங்களுடன் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுத் தலங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர் : காஞ்சி ஸ்ரீ சங்கர மடத்து ஆஸ்தானத் தமிழ்ப் புலவர் **பு.மா. ஜயசெந்தில்நாதன்,** எம்.ஏ.,

நாயன்மார்கள் அறுபத்து மூவராயினும், சமயக் குரவர்களாகப் போற்றப்படும் நால்வரும், அடியார் கூட்டத்துடன் பாத யாத்திரையாகச் சென்று, தொழுது, சிவபெருமானைப் போற்றிப் பாடியுள்ள தலங்களே **'திருமுறைத் தலங்கள்'**

இத்தலங்களுக்கு சென்று தொழுது அவர்கள் பாடும்போது, அத்தலப் பதிகங்களின் அருகிலிருந்த தலங்களையும் கேள்வியுற்று அவற்றையும் மனதில் வைத்துப் பாடல் பெற்ற தலங்கள் **"வைப்புத் தலங்கள்"** ஆகும்.

இந்நூல்களில் தலங்கள்; அங்கு நடைபெற்ற அற்புதச் செயல்கள்; வழங்கும் செவிவழிச் செய்திகள்; பேருந்து வழிகள்; அஞ்சல் முகவரி; திருக்கோயில்களைப் பராமரிக்கும் ஆதினங்களில் பெயர்கள்; கல்வெட்டுச் செய்திகள்; தலபுராணப் பாடல்கள்; தனிப் பாடல்கள்; தலங்களுக்கு இன்றுள்ள பெயர்கள் ஆகியவற்றோடு கோயில்கள் தோறும் கோபுரவாயில் விநாயகரிலிருந்து சண்டேசுரர் வரை சிவாலய வழிபாட்டு முறைப்படி நெறிப்படுத்தி விளக்கியிருப்பது, நேரில் சென்று வழிபடுவோர்க்கு உண்டாகும் உள்ளக் கிளர்ச்சியை, இதனைப் படிக்கும்போதே இந்நூல்கள் உருவாக்குகின்றன.

<u>ஜகத்குருவின் ஆசியுரையிலிருந்து.....</u>

"இவ் வைப்புத் தலங்களைப் பற்றி விளக்கமான நூல் இதுவரையில் வெளியாகவில்லை. இக் குறையைப் போக்கும் வகையில், நம் ஆக்ஞைப்படி, ஸ்ரீமடத்துப் புலவர் பு.மா. ஜயசெந்தில் நாதன், இவ்வைப்புத் தலங்களுக்கெல்லாம் நேரில் சென்று, கண்டு, தரிசித்து, சிவத்தல யாத்திரை செல்வோருக்கு உதவும் வகையில் அனைத்து விவரங்களையும் சேகரித்து 'தேவார வைப்புத் தலங்கள்' என்னும் நூலை எழுதியிருப்பதைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைகின்றோம்"

இந்நூல்கள் உயர்ந்த மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டு, சர்வதேச தரம் வாய்ந்த கட்டமைப்பில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தபாலில் பெற கடிதம் எழுதுக. V.P.P. யில் அனுப்புகிறோம். விலையுடன், தபால் மற்றும் கட்டுச் செலவு (ரூ.25/- ஒரு நூலிற்கு; ரூ. 45/- இரு நூலிற்கும் சேர்த்து) மொத்த தொகையினைத் தபால்காரரிடம் கொடுத்து நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். கடிதம் எழுத வேண்டிய முகவரி : வர்த்தமானன் பதிப்பகம், 40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017. (உஸ்மான் சாலை - கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

நேரில், <u>சென்னை</u> : வர்த்தமானன் பதிப்பகம், <u>கோவை :</u> விஜயா (✆ : 2382614 / 2394614) <u>சேலம் :</u> சந்திரா (✆ : 2265635) <u>தருமபுரி :</u> திருவள்ளுவர் (✆ : 268769) <u>திருச்சி :</u> திருச்சி புக் ஹவுஸ் (✆ : 2751298, 2764198) <u>மதுரை :</u> செல்வி (✆ : 2343510 / 2345169) <u>நெல்லை :</u> அருள் நந்தி சிவம் (✆ : 2339692 / 3100710) ஆகிய இடங்களில் விலையினை மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உடனே பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை (உணவு இடைவேளையின்றி) ஞாயிறு விடுமுறை

ஆஹா! ரூ.50,000 பரிசு!

பாண்டிச்சேரி வாசகர்களே! போன வாரம் (17.8.03) கல்கி இதழில் இடம் பெற்ற இரண்டாவது கூப்பனைப் பூர்த்தி செய்து வைத்துக் கொண்டிருக்கிறீர்களா...?

இதோ மூன்றாவது கூப்பன். இதில் உள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 31 ஆகஸ்டு மற்றும், 7, 14 செப்டெம்பர் இதழ்களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய பாண்டிச்சேரி வாசகர் ஒருவருக்கு ரூ. 50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக வானதி பதிப்பகம் வழங்கும் ரூபாய் பத்தாயிரம் பெறுமானமுள்ள புத்தகங்கள் நூறுபேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! 50,000 (பாண்டி)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி பாண்டிச்சேரி யூனியன் பிரதேச கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.



பாண்டிச்சேரி யூனியன் பிரதேச வாசகர்களுக்காக மட்டுமே

கல்கி

வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி



ஆஹா! ரூ.50,000 பரிசு! குவிஸ் போட்டி கூப்பன் - 3

1. பாண்டிச்சேரியின் அருகிலுள்ள மண்டகப்பட்டிலுள்ள குகைக் கோவில்களை அமைத்த மன்னன் பெயர் ....

2. பாண்டிச்சேரியின் நிறுவனரின் (Founder) பெயர் (க்ளூ – அவர் பெயரில் அங்கு ஒரு தெரு இருக்கிறது) ....

3. வேற்று நாட்டில் பிறந்தவராயினும் பாண்டிச்சேரிக்குப் புகழ் சேர்த்த 'ஸ்ரீ அன்னை'யின் இயற்பெயர் ....

4. மணக்குள விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான யானையின் பெயர் ....

5. பாண்டிச்சேரி - விழுப்புரம் பாதையில் பாண்டியிலிருந்து 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பிரபல ஏரியின் பெயர் ....


6. புதுவையின் தற்போதைய முதல்வரின் பெயர் ....



ரிமோட்

பூரணத் திருப்தி!





• கோவை கே.ஆர்.எஸ்.

'சுதந்திர தினக் கொண்டாட்டம்' என்ற பெயரில், டி.வி. சானல்கள் அடித்த 'அரைச்சமாவு, அதே கிரைண்டர்' கூத்துகளிடையே, அபூர்வக் குறிஞ்சியாக பூத்திருந்தது 'பூரணச் சுதந்திரம்' சின்னத்திரை திரைப்படம்.

நட்சத்திர பேட்டிகளும், புத்தம் புது சினிமாக்களும் காமெடி கடி ஷோக்களுமாக மற்ற சானல்கள் கமர்ஷியல் வலை விரித்திருக்க, சென்னைத் தொலைக்காட்சி, 'பொதிகை'யில் ஒளிபரப்பான 'பூரணச் சுதந்திரம்' மட்டும் சுதந்திர தின சிறப்பு நிகழ்ச்சி என்ற முத்திரையைப் 'பளிச்' என்று வெளிப்படுத்தியது.

சத்தியம், ஒழுக்கம் என்பதன் மறு உருவமாக வாழும் சுதந்திரப் போராட்டத் தியாகி ஒருவருக்கும், அந்தக் கட்டுக்குள் அடங்க மறுக்கும் இளைய தலைமுறைக்கும் நடக்கும் வினோத போராட்டம்தான் கதை.

சுதந்திரப் போராட்டத் தியாகி கணபதி அய்யராக கோவை கே.ஆர்.எஸ், அவரது மனைவியாக கே. சியாமளாவும் மிகச் சிறப்பாக நடித்திருந்தது. ஏதோ நம் வீட்டு ஜன்னலைத் திறந்து கொண்டு அடுத்த வீட்டுச் சம்பவங்களைப் பார்ப்பது போல நெருக்கம் உண்டாக்கியது.

மிகக் கவனத்துடன் கையாள வேண்டிய பிரச்னைகள் நிரம்பிய இந்த டெலிஃபிலிமை, மிகச் சாமர்த்தியமாக இயக்கியுள்ளார் ஜெய்ஸ்ரீ பிக்சர்ஸ் எஸ்.வி.ரமணன். யதார்த்தமான குடும்பப்படம் பார்த்த திருப்தி.

ஆரம்ப காலத்தில் வந்த டி.வி. நாடகங்களையும் சென்னை சபா நாடகங்களையும் நினைவு படுத்துகிறது என்றாலும், அழகுமணியனின் வசனமும் மிகையில்லாத நடிப்பும் ப்ளஸ் பாயிண்டுகள்.

இறுதியில், பிரசாரத்தனமான வாய்ஸ் ஓவர்க் குரலைத் தவிர்த்திருக்கலாமே!

— எஸ்.வி.என்

உ

ஸ்ரீ விநாயகர் துணை

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம்

கீழச்சூரியமூலை

அருள்மிகு பவளக்கொடி அம்பிகா சமேத சூரிய கோடீஸ்வரர் மற்றும் லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயில் புனர்தாரண நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிகை

05.09.2003

தலப்புராணம்:

ஸ்ரீ சூரிய கோடீஸ்வர் கண்களைக் காக்கும் அருட்ஜோதிப் பிரகாசராய் அமைந்த தலம் கீழச்சூரியமூலை. பிரதோஷ வழிபாட்டைச் செய்ய முடியவில்லையே என்று வருந்திய சூரியனுக்காக அவர் மாணவர் யாக்ஞவல்கியர் இப்பெருமானை வேண்டி பாஸ்கரச் சக்கர வடிவில் சூரியனுடைய ஆற்றலை இப்பெருமானின் திருவடியில் வைத்து வழிபாடாற்றிய தலம் இது. இங்கு இலுப்பை எண்ணெய் தீபத்திற்குப் பயன்படுத்தப்படுவதால் இலுப்பை மரங்கள் இக்கோயிலைச் சுற்றியுள்ளன. இதுவே இக்கோயிலின் தல விருக்ஷமாகும். காலை முதல் சூரியனுடைய ஆற்றல், கதிர்களாக இவ்விலுப்பை எண்ணெயில் உறைந்திருக்கும். இவ்வாற்றல் பிரதோஷ காலத்தில் விளக்கேற்றும் போது உருகி வெளிப்படும். இவ்வாறு வெளிப்படும் ஆற்றல் வடிவாகச் சூரியன் இவ் இறைவனை வழிபடுவதாக ஐதீகம். இங்குள்ள பைரவர் கண்டப்பகுதி ஆறு மாதங்கட்கு ஒருமுறை நிறம் மாறுவதும் பின் பழைய நிலையினை அடைதலும் இத்தலத்தின் மற்றொரு சிறப்பு. இப்பைரவரை தரிசித்தால் பக்தர்களது கண்டம் நீங்கும்.

கண் சம்பந்தமாக அனைத்து நோய்களையும் தீர்க்கும் தலமாகவும் இது விளங்குகிறது.

மங்களகரமான நிகழும் சுபானு வருஷம் ஆவணி மாதம் 19ம் தேதி 5.9.2003 வெள்ளிக்கிழமை தசமி மூலம் நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை மணி 8.00க்கு மேல் 9.20க்குள் கன்யாலக்னத்தில் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி

ஸ்வாமிகள் அவர்கள் அருட்பார்வையுடன்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் ஸ்வாமிகள் அவர்கள் சூரியனார் கோயில் ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் ஆதீனம்

ஸ்ரீ - ல - ஸ்ரீ சங்கரலிங்க தேசிய பரமாச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஈரோடு K.P. சிஷ்ட (ஜோதிட) ஆராய்ச்சியாளர், ஸ்ரீ தேவி உபாசகர் திரு. V. ராஜேந்திர பிரசாத் அவர்கள்

ஆகியோர் முன்னிலையில் நிகழ்வுற திருவருள் கூட்டு வித்துள்ளது.


அனைவரும் இவ்வாலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு தங்களால் இயன்ற பொன், பொருள் உதவி புரிந்து மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டுகளித்து எம்பெருமானின் பேரருளை பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

வீடு : G. கணேச அய்யர்
1/39, கோட்டூர் அக்ரஹாரம்,
துகிலி - 609 804. தஞ்சை மாவட்டம்
☎ : (0435) 2473573

இப்படிக்கு
பிரகதாரர்கள்,
கிராமவாசிகள்,
உபயதாரர்கள்

தமிழ்த்தாத்தா டாக்டர். உ.வே. சாமிநாத அய்யர் பிறந்த ஊர் கீழச்சூரிய மூலை ஆகும்.


ஏனுங்க... நீங்க கோயமுத்தூருங்களா?
அப்போ, அடுத்த 'ஆஹா ரூ.50,000' பரிசுப் போட்டி, உங்க ஊருக்குத்தானுங்க! பரிசுப் போட்டி அறிவிக்கப்படும் 'கல்கி' இதழ் கோவை மாவட்டச் சிறப்பிதழாகவும் மலரப் போவதால், அதுலே உங்கப் பங்களிப்பும் இருந்தாத்தானுங்களே இன்னும் ஜோரா இருக்கும்? கோவை நகரம் அல்லது கோவை மாவட்டத்தின் எந்தப் பகுதியில் நீங்கள் இருந்தாலும், உங்கள் ஊர்ச் செய்திகளை, சுவாரஸ்யமாக, புகைப்படங்களோடு ஒரு பக்கத்துக்கு மிகாமல் எழுதி அனுப்புங்கள். அன்பளிப்பு உண்டு!
கடைசித் தேதி : 26.08.03
உறையின்மீது 'கோவை மாவட்டச் சிறப்பிதழ்' என்று குறிப்பிடவும்.



வேலை நிறுத்தம்: விபரீத நடவடிக்கை!

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க அமைப்புகளின் அங்கீகாரத்தை ரத்து செய்துள்ளது தமிழக அரசு. சமரஸத்துக்கு வழிகோலிய உச்சநீதிமன்ற ஆணையை நிறைவேற்றிய பிறகு இந்த விபரீத நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது.


அரசு ஊழியர்கள் அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடும் முக்கிய நபர்கள் என்பதையும், அவர்கள் அற்ப காரணங்களுக்காக ஒட்டுமொத்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தவறு என்பதையும் யாரும் மறுக்கவில்லை. ஆனால், உரிமைகள் மறுக்கப்படும்போது குரல் கொடுக்கவும் அதிருப்தி தெரிவிக்கவும், பிற மனிதர்களைப் போலவே அரசு ஊழியர்களுக்கும் வாய்ப்புத் தரப்படவேண்டும். இல்லையெனில், அரசுத் தலைமை தன்னிச்சையாகவும் கொடூரமாகவும் செயல்பட்டு, ஊழியர்களுக்கு அநீதி இழைக்கும் வாய்ப்பு நிறையவே இருக்கிறது.

உச்ச நீதிமன்றம், வேலை நிறுத்தம் செய்வதை அரசு ஊழியர்கள் ஓர் அடிப்படை உரிமையாகக் கருத முடியாது என்று கூறியிருக்கிறது. வேலை நிறுத்தத்தின் மூலம் அரசையும் மக்களையும் பிளாக்மெயில் செய்வதுபோல் நடந்து கொள்ளக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறது.

ஆனால், ஊழியர்களின் போராட்ட முயற்சியை ஒடுக்க




கல்கி



2003 ஆகஸ்ட் 24
சுபானு ஆவணி 7
மலர் : 62
இதழ் : 4

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அவசரச் சட்டம் கொண்டு வந்ததும், அதனைப் பிரயோகித்து, இரவோடு இரவாக ஊழியர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் கைது செய்து சிறைவைத்ததும், மனித உரிமை மீறலா இல்லையா என்பது குறித்து உச்சநீதிமன்றம் இதுவரை எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. டெஸ்மா சட்டம் செல்லுபடி ஆகுமா இல்லையா என்ற பிரச்னைக்கே உச்சநீதிமன்றம் போகவில்லை. அதை பரஸ்பர நல்லெண்ணத்துக்கு விட்டுவிட்டது.

உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு குறித்து கவலையுடன் கருத்துக் கூறியிருக்கும் மூத்த அரசு வழக்குரைஞர் சோலி சோரப்ஜி, ப. சிதம்பரம் ஆகிய இருவருமே, "அநீதியை எதிர்த்துப் போராடும் உரிமை யாருக்குமே மறுக்கப்படலாகாது" என்று உறுதிபடக் கூறியுள்ளனர்.

"வேலை நிறுத்தம் செய்கிற உரிமை, அளவிட முடியாத மதிப்புடையதாகும்" என்று அடித்துக் கூறும் சோலி சோரப்ஜி, முதலாளிகள் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிவதும் அவர்களுக்கு அநீதி இழைப்பதும்கூட சகஜம்தான் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். 'அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்கிற உரிமையைப் போராடித்தான் பெற்றார்கள். இப்போது அதைப் பறிக்கலாகாது' என்று சொல்லியிருக்கிறார்.

ப. சிதம்பரமோ, 'குறிப்பிட்ட பிரச்னையில் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப உச்சநீதி மன்றம் ஒரு கருத்துத் தெரிவித்துள்ளதே தவிர, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துவிடவில்லை...' என்று, கருத்துக்கும் தீர்ப்புக்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

நமது அரசு ஊழியர்களின் தரம் திருப்திகரமானதாக இல்லை என்பது பரவலாக நிலவுகிற அபிப்பிராயம். அந்த அதிருப்தி காரணமாக, உச்சநீதிமன்றக் கருத்தையும் அதைத் தொடர்ந்த தமிழக அரசின் கடுமையான நடவடிக்கையையும் நாம் ஆதரித்து விடக் கூடாது. அரசு ஊழியர்களின் பணித் தரத்தை உயர்த்த வேண்டுமானால்,



அதற்கு நிர்வாக சாமர்த்தியமும் சிறந்த தலைமையும்தான் கை கொடுக்கும். மாறாக, அடக்கு முறைகளைப் பிரயோகிப்பதில் மிகப் பெரிய ஆபத்து இருக்கிறது.

முதல் ஆபத்து: அரசு ஊழியர்கள் கட்டாயத்தின் பேரில் பணிக்கு வருவார்கள்; ஆனால் அவர்களுடைய பணித்தரம் மேம்படாது.

இரண்டாவது ஆபத்து: இன்று அரசு ஊழியர்களுக்கு மறுக்கப்படும் உரிமை நாளை வேறு துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் மறுக்கப்படக் கூடும்.

ஏழைமையும் அறியாமையும் மிகுந்து காணப்படும் இந்தியா போன்ற நாடுகளில், அமைப்பு ரீதியாகத் தொழிலாளர்கள் இணைவது என்பது இன்றியமையாதது. இத்தகு அமைப்புகள் செயல்படாத துறைகளில், உழைப்பாளர்கள் அளவற்ற துன்பத்துக்கு ஆளா வதை நாம் பார்க்கிறோம்.

வேலை நிறுத்தத்துக்குத் தடை விதிப்பதன் மூலமும், தொழிற்சங்கங்களின் அங்கீ காரத்தை ரத்து செய்வதன் மூலமும், உழைப்பாளிகளின் பாதுகாப்பு வளையத்துக்கே வேட்டு வைக்கப்படுகிறது; மனித உரிமை மீறல் அரசாலேயே நிகழ்த்தப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்குப் பணி விதிகளைக் கடுமையாக்கலாம்; இலக்குகள் நிர்ண யித்து அவற்றை அடைய ஊக்கம் தரலாம் - இவையெல்லாம் பணித்தரம் உயர உதவும். ஏற்கெனவே தரப்பட்டு வந்த சலுகைகளையும் உரிமைகளையும் ரத்து செய்தது மல்லாமல், அவர்களது தொழிற்சங்க அமைப்புகளையும் புறக்கணித்துவிட்டு, பிறகு, அவர்கள் உற்சாகமாகவும் முன்னிலும் சுறுசுறுப்பாகவும் பணியாற்ற வேண்டும் என எதிர்பார்ப்பது வியர்த்தம்.

அங்கீகாரம் ரத்தான அமைப்புகள் நீதிமன்றம் செல்லக் கூடும்; தங்கள் உரிமைகளை மீண்டும் பெறக் கூடும்; ஆனால் அவர்களை நசுக்கி விடும் நோக்கில் செயல்பட்ட தமிழக அரசினால் அந்த ஊழியர்களின் விச்வாசத்தையும் ஒத்துழைப்பையும் திரும்பப் பெறவே முடியாது. ○

www.mangayarmalar.com

உங்கள் அன்புத்தோழி

மங்கையர் மலர்

இப்போது
புதிய ஊடகத்தின் மூலமும்
'உலக வலம்' வருகிறாள்!



புதிய எழுச்சியை ஊக்குவிக்கும்...
தன்னம்பிக்கை கட்டுரைகள்



நவீன சமையலுக்கு....
நாவூறும் உணவுக் குறிப்புகள்



பொலிவு மாறாத அழகு மேம்பட....
தேர்ந்த அழகுக்கலை வழிகாட்டுதல்கள்



தடம் புரளாத
கலாசார உணர்வுக்கு....
ஆன்மிகத் தொடர்கள்

In association with
ChennaiOnline
all @bout the city.

நவீனயுகப் பெண்ணுக்கு மங்கையர் மலர்!

ஈர நிலம்



"இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் தான் அடங்கியிருக்கிறது!" இது தேசத் தந்தையின் தீர்க்கமான எண்ணம். இதற்கு இன்னும் அர்த்தம் தந்து கொண்டிருக்கும் எண்ணற்ற கிராமங்கள் இங்கே உண்டு. பாரதிராஜாவின் 'ஈர நிலம்' படத்தில் காட்டப்படும் கருநாத்தம்பட்டியும் அதே போன்றதொரு (சினிமாவுக்கு - வெளியேயும்கூட) கிராமம்தான்.

கரிசல்பட்டியாகக் கிடக்கும் இந்தக் கிராமம், நாட்டைக் காப்பதில், எப்படி கார்கில்பட்டியாக மாறிப் போனது என்பதை, எல்லோரும் செய்தித்தாள்களில் பெருமையோடு படித்து முடித்து, கையோடு மறந்தும் போய்விட்டோம்! ஆனால் கதாசிரியர் ஆர். செல்வராஜின் நுட்பமான கண்கள் மட்டும், இந்தக் கிராமத்தின் இரத்தமும், சதையுமான நிகழ்கால நிஜத்தை, ஒரு கனமான கதையாகக் கண்டெடுத்திருக்கின்றன.

கதையில் மண்ணும், மணமும், காதலும், மோதலும், இரத்தமும், யுத்தமும் நிறைந்திருப்பதைக் கண்ட படத்தின் இயக்குனர் பாரதிராஜா மட்டும் சும்மாயிருப்பாரா?

ஒரு கம்பீரமான கைம்பெண்ணாக, இரண்டு மகன்களை இராணுவத்துக்குத் தந்துவிட்டு, மூன்றாவது மகனையும் தேசத்தின் காவலுக்குத் தாரை வார்க்கத் தயாராயிருக்கும் 'சின்னத்தாயின்' குடும்பத்தில், பார்வையாளனாகச் செல்லும் நம்மை, அங்கத்தினராக்கி விடும் செம்மையான திரைக்கதையைப் படைத்திருக்கிறார்.

எல்லையில் ஏதேனும் ஆகிவிட்டால் என்ன செய்வதென்று சொத்துகளை, தன் பெயருக்கு மாற்றிப் பதிவு செய்யும் அண்ணன்களை, கையில் கிடைத்ததை எடுத்துத் தாக்க முயலும் தங்கத்தம்பி துரைசாமி! (மனோஜ் கே. பாரதி)

போர் விதவைகள் போற்றுதலுக்குரியவர்கள் என்ற பிரக்ஞை துளியுமின்றி, தங்கைகளைத் தரகு பேசி விற்கப் பார்க்கும் தகரமாய், மாட்டு வியாபாரி களஞ்சியம்! (மெட்டி ஒலி வெங்கட்).

இவ்விரு பாத்திரங்களும், வாழ்வின் மேடு பள்ளத் தத்துவத்தைச் சுமந்து வரும் எளிய படிமங்களாய், ஈர நிலத்தை சினிமா என்ற மட்டத்திலிருந்து, வாழ்க்கை என்ற உயரத்துக்குத் தூக்கிச் செல்கின்றனர். மண்ணின் மொழியில் வசனம் எழுதியிருக்கும் தேன்மொழி, பாத்திர மனநிலையை பளிச்சென்று உணர்த்தும் கேமராக் கோணங்களின் கர்த்தா, சி. தனபால். 'மேகங் கருக்குது', 'கருசக்காட்டுக் குயிலே' பாடல்களில் கிறல் விழாத கிராமியத்தைச் செதுக்கியிருக்கும் சிற்பி, மூவரும் பாராட்டுக்குரியவர்கள். 'தாஜ்மஹாலி'ல் தடம் மாறி, 'கடல் பூக்களை' வாட வைத்த பாரதிராஜா, ஈர நிலத்தில் தம்மை, தமது மண் வாசனையை மீட்டெடுத்திருக்கிறார். அதனால் நல்ல விளைச்சல்!

— விஷ்ணுவல்தாசன்

● அபவ் ஆவரேஜ்

* இரா. தனிக்கொடி



* சுரேந்தர் நாத்



* கே. மாதங்கி





* ஏ.ஏ. ஹெச்.கே. கோரி



* கே.பி. ஜனார்த்தனன்

வாழ்க! வளர்க!

அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டி 2003ல் பரிசு பெற்றவர்கள், ஓர் அறிமுகம்.

இரா. தனிக்கொடி - முதல் பரிசு

கடவு

புதுக்கோட்டைக்காரரான இவருக்கு வயது நாற்பத்து ஒன்று.

'ஜெமினி சினிமா' இதழ் நடத்திய கண்ணதாசன் நினைவுப் பாடல் போட்டியில் முதல் பரிசு (1983). 'தாய்' வார ஏடு நடத்திய பாரதி நூற்றாண்டு விழா கவிதைப் போட்டியில் மரபுக் கவிதைக்கான முதல் பரிசு. எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கவிதைக்கான பரிசு. 'தமிழ் முரசு' நாளேட்டின் 'தமிழ் முரசு' விருது (2001) அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டியில் 'கோரோசனை' என்ற சிறு கதைக்காக ஆறுதல் பரிசு (2001). ஆனந்த விகடன் நடத்திய பவழ விழா முத்திரைக் கதைப் போட்டியில் 'பச்சை வெட்டு' என்ற சிறுகதைக்காக ரூ.5,000 பரிசு (2002 டிசம்பர்) என்று அள்ளிக் கொண்டிருக்கிறார்.

இவருக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன.

ஜி.ஆர். சுரேந்தர்நாத் - இரண்டாவது பரிசு

தொலைந்த காலம்

திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் எம்.எஸ்ஸி. படித்துள்ள இவர் பணி நிமித்தமாக தற்பொழுது சென்னைவாசி. வயது 32.

திருமணமாகி மூன்றரை வயதில் ஒரு மகன்.

கல்வித் துறையில் பணிபுரிந்த இவரது தந்தை, நூலகங்களிலிருந்து எடுத்து வந்த புத்தகங்கள் மூலம், சிறு வயதிலேயே படிக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. பெரியம்மா வீட்டில் கிடைத்த கல்கி, ஜெயகாந்தனின் பைண்டு செய்யப்பட்ட தொடர்கதைகள் மூலம் கதை படிக்கும் ஆர்வம் வளர்ந்தது.

இவரது முதல் சிறுகதை 1994ல் வார மலரில் பிரசுரமானது. 1997 முதல் தொடர்ச்சியாக இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் கல்கி, ஆனந்த விகடன் போன்ற இதழ்களில், பிரசுரமாகியுள்ளன. இதற்கு முன்பு 'ஆனந்த விகடன்', 'அமுதசுரபி' சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளார்.

கே. மாதங்கி - மூன்றாம் பரிசு

பெரிதினும் பெரிது கேள்

பி.எஸ்ஸி. (ரசாயனம்) பட்டதாரி. பதினான்கு வருடங்களுக்கு முன்பு 'சுமங்கலி' பத்திரிகையில் இவரது சிறுகதை வெளியானது. திருமணம், குடும்பம் என்று ஆகி, கிட்டத்தட்ட பதினோரு வருடங்கள் கழித்து மீண்டும் இவர் எழுதிய 'ஆரம்பம்' என்ற சிறுகதை 'கல்கி'யில் வெளியானது. அதைத் தொடர்ந்து பத்திரிகைகளில் எழுதி வருகிறார். சொந்த ஊர் திருச்சி. தற்போது சிங்கப்பூர் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் பணி. இரண்டாம் வகுப்பு படிக்கும் ஒரு மகள், இரண்டு வயதில் இரட்டை ஆண் குழந்தைகள்.

ஊக்கமும் உற்சாகமும் தரும் பெற்றோர், கணவர் அமையப் பெற்றவர்.

இலக்கியம் தவிர, சமையல், ரங்கோலி போன்றவற்றிலும் ஆர்வம் உண்டு.

ஏ.ஏ. ஹெச்.கே. கோரி - ஆறுதல் பரிசு

அன்புள்ள அக்கா

கல்கி, கணையாழி, குமுதம், ஆனந்த விகடன், தீபம், தீராநதி, கண்ணதாசன், செம்மலர் முதலிய பத்திரிகைகளில் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதியிருக்கிறார். 'தடுமாற்றங்கள் பதனஞ்சு', 'இனத்தோடு இனம் சேரும் தினம் வந்தது' என்று இரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளி வந்திருக்கின்றன.

இவரை இலக்கியத்துக்கும் இலக்கியத்தை இவருக்கும் அறிமுகப்படுத்தி விட்டு அமரனாகிப்போன நண்பனுக்கு நன்றிக்கடனாய், ஜோதி விநாயகம் நினைவு சிறுகதைப் பரிசுத் திட்டம் என்கிற அமைப்பை நடத்தி வந்தார். பிரபல எழுத்தாளர் எஸ். ஷங்கரநாராயணன் மற்றும் யாழ்ப்பாணத்து முன்னணி எழுத்தாளர் ஐ. சாந்தன் ஆகியோருடன் இணைந்து.

கே.பி. ஜனார்த்தனன் - ஆறுதல் பரிசு

மாயவலை

கல்கி சிறுகதைப் போட்டியில் (1998) 'புதிய சுவடுகள்' கதைக்காக இரண்டாவது பரிசு பெற்ற இவருக்கு, மீண்டும் கல்கியில் பரிசு பெறுவது இனிமையான பரவசமாக இருக்கிறது.

நாகர்கோவிலில் வசிக்கும் இவர், பணி புரிவது சிண்டிகேட் வங்கியில். மனைவி லக்ஷ்மி நல்ல ஆலோசகர்.

சுமார் 125 சிறுகதைகள் (சில புதுக் கவிதைகளும்) எல்லா பத்திரிகைகளிலுமாக எழுதியிருக்கிறார்.

கல்கி தவிர, கலைமகள் (அகிலன் நினைவு சிறுகதைப் போட்டி) குமுதம், விகடன், தேவி, வாசுகி, சாவி கதைப் போட்டிகளிலும் பரிசுகள் கிடைத்திருக்கின்றன.

- வினி



4



நா. முத்துக்குமார்

எங்கள் கிராமத்துக்கு தொலைக்காட்சிப் பெட்டி வந்தது. அப்போது நான் சிறுவனாயிருந்தேன். இருபது வருடங்களுக்கு முன்பு தொலைக்காட்சி என்பது கிராமத்தில் இருப்பவர்களுக்கு நெல்லுச்சோறு மாதிரி, நகரத்திற்கு யார் வீட்டிற்காவது விருந்துக்குச் செல்கையில் மட்டும் அதைக் காண முடியும்.

இப்போது எந்தக் கிராமத்தில் நுழைந்தாலும் வீட்டுக் கூரைகளின் மேல் ராட்சஸ மீன்களின் எலும்புகளைப் போல் ஆன்டெனாக்கள் காற்றில் ஆடிக் கொண்டிருக்கின்றன. அந்த அலுமினிய மீனை கொத்தித் தின்னும் ஆசையுடன் காக்கைகள் அதில் காலூன்றுகின்றன. கொத்திக் கொத்தி அவற்றின் அலகுகள் தோல்வியுற்றாலும், விஞ்ஞானத்தை வெல்லும் உக்கிரத்துடன் மீண்டும் மீண்டும் கொத்திக் கொண்டிருக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு தில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய இளம் கவிஞர்களுக்கான கவியரங்கில், டிஷ் ஆன்டெனாக்களைப்பற்றி நான் ஒரு கவிதையைப்

கிராமம் நகரம் மாநகரம்



படித்தேன்.

கிராமத்தில் இருந்து
நகரம் வந்த விவசாயி
டிஷ் ஆன்டெனாக்களைப் பார்த்ததும்
இப்படிக் கேட்டான்;
"மாடி வீட்டு முட்டாள்
மழை வரும்போது
குடையை ஏன்
திருப்பிப் போட்டிருக்கிறான்?"
என்று அந்த கவிதை தொடங்கும்.

எங்கள் கிராமம் பட்டு நெசவை தன் தொழிலாகக் கொண்டிருந்தது. காஞ்சிபுரம் அருகே கன்னிகாபுரம் என்று பெயர். காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் எல்லாம் பட்டு நெசவே பிரதான தொழில்.

அதிகாலையில் எழுந்து தெருக்களில் பட்டு நூலை, நீளமான கட்டைகளில் படர விட்டு, கஞ்சி போட்டு சிக்கெடுப்பார்கள். பாவு போடுதல் என்று இதற்குப் பெயர். சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் என்று வான வில் படுத்துக்கிடப்பது மாதிரி தெருவே பட்டு நூல்களின் வண்ணங்களால் வசீகரமாக இருக்கும்.

நகரத்தில் இருந்து எங்கள் கிராமத்திற்குப் புதிதாக வீடு கட்டிக் கொண்டு ஒரு குடும்பம் வந்தது. அவர்களுக்கும் தறி நெய்தல்தான் தொழில். கொஞ்சம் வசதியான குடும்பம். ஏழெட்டு பட்டுத்தறிகள், அவர்கள் வீட்டில் 'தடக் தடக்' என்று சத்தம் எழுப்பிக் கொண்டிருக்கும்.

ஒரு நாள் மாலையில் அந்த வீட்டின் ஓட்டுக் கூரையின் மேல் நாலைந்து ஆண்கள் ஏறி நின்று எதையோ கட்டிக் கொண்டிருந்தார்கள். சுமார் நூறடி நீளத்தில் இரும்புக் குழல், மேலே சிதறல் சிதறலாய் அலுமினியத் துண்டுகள். அப்புறம் தான் அதற்குப் பெயர் ஆன்டெனா என்றும், அவர்கள் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கிறது என்றும் அறிந்தோம். அதைப் பார்க்க சிறுவர்கள் நாங்கள் அவர்கள் வீட்டு ஜன்னலை முற்றுகையிடுவோம். அந்த வீட்டுப் பையன் எங்களைத் துரத்துவான். அவன் உள்ளே செல்லும் நேரத்தில் மீண்டும் ஜன்னலுக்கு வருவோம். படார் என்று ஜன்னல் கதவு அறைந்து சாத்தப்படும்.

அந்தப் பையனை நண்பனாக்க நாங்கள் நாலாவிதமான தந்திரங்களையும் கையாள நேர்ந்தது. கூழாங்கற்கள், டாமா கோலி, சிட்டுக்குருவி முட்டை, தீப்பெட்டிப் படங்கள் ஒட்டி வைத்த நோட்டு, வாழை மட்டைக்கு நடுவில் கண்ணாடியைப் பொருத்தி செய்த லென்ஸ், குப்பைகளில் பொறுக்கிய பட்டு ஜரிகைத் துண்டுகள், ஈசல் போட்டு வறுத்த பொரி அரிசி, என எதை லஞ்சமாகக் கொடுத்தாலும் வேண்டா வெறுப்பாக

வாங்கிக் கொண்டு "நாளைக்குப் பார்க்கலாம், வீட்ல கேட்கணும்" என்பான். கடைசி அஸ்திரமாக எனக்கு மிகவும் ப்ரியமான என்னுடைய கறுப்பு வெள்ளை நாய்க்குட்டியை அவனுக்குக் கொடுக்க நேர்ந்தது. புன்னகையுடன் வாங்கிக்கொண்டு 'நீ மட்டும் சாயந்திரம் வா" என்றான்.

பின்புக்கும் பின்பு பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் வீட்டில் காசு வாங்கிக் கொண்டு உள்ளே விட்டார்கள். படம் பார்க்க நாலணா. ஒலியும், ஒளியும் பார்க்க பதினைந்து காசுகள். செவ்வாய்க்கிழமை நாடகத்திற்கு பத்துக் காசுகள். படத்திற்கும் ஒலியும், ஒளிக்கும் பெரும் கூட்டம் அலை மோதும். கூடம் நிரம்பி நின்று பார்க்கும் இடமும் இல்லை என்றால் கதவை அடைத்து விடுவார்கள்.

எங்கள் சேமிப்புகள் இப்போது குச்சி ஐசுக்கும், மாங்காய்த் துண்டங்களுக்கும் செலவாவதில்லை.

அப்போது எல்லாம் தூர்தர்ஷன் ஒன்று மட்டுமே. மற்ற சேனல்கள் கிடையாது. ஞாயிற்றுக் கிழமை படம். வெள்ளிக் கிழமை ஒலியும், ஒளியும்.

கூடத்தின் இரண்டு பக்கமும் தறி மேடைகளும், குழிகளும் இருக்க, ஓரமாய் தொலைக்காட்சிப் பெட்டி அமர்ந்திருக்கும். தறி நூலைச் சுருட்டிக் கட்டுவார்கள். "படம் போட்டுருவாங்கக்கா, சீக்கிரம் சுத்துங்க" என்போம். "பேசாம இருந்தா பாருங்க... இல்லைன்னா காசை வாங்கிட்டு வெளியில போங்க" என்பார்கள். அமைதியாகி விடுவோம். பின்பு தொலைக்காட்சிப் பெட்டிக்குக் கற்பூரம் ஏற்றிக் காட்டி திருஷ்டி சுழிப்பார்கள். கண்ணாடிப் பிள்ளையார் மாதிரி தொலைக்காட்சி மாறிவிடும். கோயில் கதவு திறப்பது போல அதன் இரு பக்கக்கதவுகளும் திறக்கும்.



"தமிழ் மீடியத்துலேயிருந்து இங்கிலீஷ் மீடியத்துக்குப் பையனை மாத்தினதுல அவருக்கு ரொம்பப் பெருமை!"
"எப்படிச் சொல்றே?"
" 'நேத்துவரை தமிழ்ல பரீட்சை எழுதிதான் ஃபெயிலானான். இப்ப பாரு, இங்கிலீஷ்ல எழுதி ஃபெயிலாகறான்'னு சொல்லிக்கிட்டு அலையறார்!"
- மேல்மங்கலம் பத்ரா

முதல் போணியாக எங்கள் நண்பர்களில் செந்தில் காசு தருவான். ராசியான கையாம். அவனது கறுத்த கைகளில் கர்வம் குடியேறும். நாங்கள் சுருண்டு வளைந்த கைகளால் அடுத்தடுத்து காசு கொடுப்போம். படத்திற்கு நடுவில் விளம்பரம் மற்றும் செய்தி வருகையில் தொலைக்காட்சியை அணைத்துவிடுவார்கள். கரெண்ட் ஆகிவிடுமாம். திரும்பவும் சரியாகப் படம் தொடரும் நேரத்தில் போடுவார்கள். விளம்பரம் முடியும் நேரம் எப்படி துல்லியமாக அவர்களுக்குத் தெரியும் என்பது ஆச்சரியமாக இருக்கும். ஒரு நொடி முன்பின் இருக்காது. அவர்கள் தொலைக்காட்சியைப் போடும் போது "திரைப்படம் தொடர்கிறது" என அறிவிப்பு வரும். மறுநாள் பள்ளியில் நேற்று பார்த்த படத்தின் கதையே முதல் பாடவேளையை அபகரித்துவிடும். ஊருக்குப் பொதுவாய் பஞ்சாயத்துத் தொலைக்காட்சி வரும் வரை இந்த அட்டகாசம் தொடர்ந்தது.

இன்று ஒரே வீட்டில் மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன. ஒரு நாளைக்கு ஏழெட்டுப் படங்கள் ஒளிபரப்பாகின்றன. ஆயினும் காசு கொடுத்து, காத்திருந்து பார்த்த, அந்த நாளின் வசீகரத்தை அவை இழந்துவிட்டன. ரிமோட்டின் பொத்தான் பிளஸ் மைனஸ் என்று எந்த இடத்திலும் நிலையாக நிற்காமல், பூஜ்ஜியங்களில் அலைந்து கொண்டிருக்கிறது.

கதை சொல்லும் பாட்டிகளைத் திண்ணைக்கு அனுப்பிவிட்டு கூடத்தில் அமர்ந்து அவை பொய் சொல்லுகின்றன. புத்தக அலமாரியைப் புழுதி படிய விட்டுவிட்டு, பிம்பங்களால் வார்த்தைகளைக் கொல்லுகின்றன. நண்பர்களைச் சந்திக்கும் நேரங்களை தொலைக்காட்சித் தொடர்கள் தின்றுவிடுகின்றன. தொலைக்காட்சி ஒரு கறுத்த நிழலைப் போல நம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

(சந்திப்பேன்)

பதிப்புலகச் சாதனை வரலாற்றில் மேலும் ஒரு சாதனை!

தமிழ்மண் பதிப்பகம்

இருபதாம் நூற்றாண்டின் புதிய பார்வையோடு தமிழர் வாழ்வியல்
இலக்கணத்தை வரையறுத்துக் காட்டும் தமிழின் அறிவுச் செல்வம்.

தொல்காப்பியம்

முழுமை மிக்கச் செம்பதிப்பு வருகிறது.



பழந்தமிழ் மரபு காத்த அருந்தமிழ்ப் பெரு மக்கள் **இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர்** ஆகிய உரையாசிரியர்களின் உரைகளோடு

எழில்மிகு வடிவமைப்பு, நேர்த்தியான அச்சமைப்பு

இலக்கணச் செம்மல்

இரா. இளங்குமரனாரின்

தொல்காப்பிய வாழ்வியல் விளக்கத்துடன்

15 நூல்கள் மொத்த விலை	– உரு.	**3750**
ஒரே தவணையில் மட்டும் (20.08.2003–க்குள்)	– உரு.	**2250**

3 தவணைகளில் பெற விரும்புவோர்

1ஆம் தவணை (30.08.2003–க்குள்)	– உரு.	1000
2ஆம் தவணை (20.09.2003–க்குள்)	– உரு.	750
3ஆம் தவணை (20.10.2003–க்குள்)	– உரு.	750

தமிழ்மண் பதிப்பகம் (Thamizhmann Pathippagam) என்ற

பெயருக்கு வங்கி வரைவோலை/பணவிடையாகப் பின்வரும் முகவரிக்கு விடுத்துதவுக.

தொடர்புக்கு: 2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர்,

சென்னை – 600 017. தொ.பே. 2433 9030

குறைந்தபடிகளே அச்சாகின்றன! முன்பதிவுக்கு முந்துங்கள்!

முன்பதிவு செய்வோருக்கு மட்டுமே நூல்கள் கிடைக்கும்

மீண்டும் இதையே வற்புறுத்திக் கேட்பதற்கு மன்னிக்க வேண்டும். சில விஷயங்களை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது. கணவன் - மனைவி பந்தம், உறவு என்பது அலாதியானது தானே? அந்த பந்தம் தேவை என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?



சென்ற வாரத் தொடர்ச்சி...

எனக்கு நேர்ந்ததைக் கூறுகிறேன்; நீங்கள் கதாசிரியர், புரிந்துகொள்வீர்கள். இங்கே மூன்று விஷயங்களைக் குறிப்பிட வேண்டும்.. முதலில் - நான் ஏற்கெனவே சொன்ன விதத்தில் என் குடும்பத்தாருடன் எனக்கிருந்த பந்தங்கள்; என் குடும்பம் மிகப் பெரியது... அதன் மூலம் எனக்குக் கிட்டிய நிறைவைத் தந்த உறவுகள். இரண்டாவது - சிறுவயது முதற்கொண்டே புத்தகங்களுடன் எனக்குண்டான நட்பு. இன்றுவரை எவராலும் அசைக்க முடியாத, அதன் இடத்தை எடுத்துக் கொள்ள முடியாத நட்பாக அது இருக்கிறது; மூன்றாவது - ஒரு இலட்சியத்தை நோக்கிச் சென்ற என் பணிகள், முதன் முறையாக ஒரு காரியத்தைச் செய்யும் முனைப்பு; ராக்கெட் விடுவது போன்ற வெவ்வேறு ஈடுபாடுகள். இந்த மூன்று விஷயங்களும் ஒரு முக்கோணம் போல அமைந்து, வேறு எந்த விஷயமும், உறவின் தேவை குறித்தும் சிந்திக்க விடாமல் என்னை ஆக்கிரமித்திருக்கின்றன.

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் தேவனும் இருக்கிறான், ராட்சஸனும் இருக்கிறான். ராட்சஸ குணங்களை அடக்கி

சிவசங்கரி-அப்துல்கலாம் சந்திப்பு

மேக்ரோ ஆசை, மைக்ரோ ஆசை!


விட்டு தெய்வத்தன்மையை வளர்த்துக் கொள்வதுதான் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகிறது என்பார்கள். **கோபம், ஆத்திரம், பொறாமை போன்ற எதிர்மறைச் சிந்தனைகளை நீங்கள் எப்படிக் கையாள்கிறீர்கள்?**

பொதுவாகத் தோல்வி, அல்லது பிரச்னை வரும்போது, துன்பம் தலையெடுப்பது இயற்கை. இந்தத் துன்பம் என்னை ஆக்கிரமித்து அது எஜமானனாகிவிட்டால்தான் நீங்கள் குறிப்பிட்ட கோபம், ஆத்திரம், பொறாமை உணர்வுகளுக்கு நான் அடிமையாவேன். ஆனால், எந்தச் சூழலிலும், பிரச்னையிலும் அந்தத் துன்பத்தை அடக்கிவிடும் எஜமானனாகிவிட்டால், பிரச்னையே எழாது. 'இடுக்கண் வருங்கால் நகுக' தெரியும்தானே? எப்போதும் நல்லெண்ணங்கள் நம்மை, நம் மனதை, எண்ணங்களை வலம் வந்து கொண்டே இருக்க வேண்டும். நண்பர்களோடு 'வாக்' போகும்போது எப்போதாவது, 'மனசை வருத்தும் வார்த்தைகளை ஒருவர் சொன்னார்; ஆனால் அதை மனசில் வைத்துக் கொள்ளாமல் காற்றோடு கலக்கச் செய்துவிட்டேன்' என்று சொல்லியிருக்கிறேன். விடக் கற்றுக்கொள்ள வேண்டும். உள்ளே தங்கி குடைந்துகொண்டே இருக்க அனுமதிக்கக் கூடாது.

பணம், புகழ், பதவி - இம்மூன்றும் போதை தரக் கூடியவை. இந்த மூன்றையும் உங்கள் கண்ணோட்டத்தில் எப்படிப் பார்க்கிறீர்கள்?



இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பதற்கு என் இளவயதுக்குப் போக வேண்டும். என் பெற்றோரிடம் பணம் இருந்ததில்லை. என்றாலும் வீட்டுக்கு வருபவர்களுக்கெல்லாம் இல்லை என்று கூறாமல் சாப்பாடு போட்டுக்கொண்டே இருப்பார்கள். வாழ்க்கையில் சந்தோஷமாய் இருப்பதற்குப் பணம் வேண்டும் என்பதேயில்லை. நான் சிறுவனாய் இருந்தபோது காலையில் நான்கு மணிக்கு எழுந்து, அப்பாவுடன் தொழுதுவிட்டு, மதரஸா பள்ளியில் குரான் படித்து, ரயில்வே ஸ்டேஷனில் பேப்பர் கட்டுகளை எடுத்து விநியோகம் செய்து, வீட்டுக்கு வந்து சாப்பிட்டு, உடை மாற்றி பள்ளிக்குச் சென்று, மாலையில் திரும்பி, பண வசூலுக்குச் சென்று, வீட்டுப் பாடங்களை முடித்துவிட்டு, சாப்பிட்டுப் படுப்பேன். மூச்சுவிட நேரமிருக்காது. என்றாலும் சந்தோஷத்திற்கு அளவேயில்லாமல் இருந்தது. பணம் நல்ல பணமாய், நேர்வழியில் வந்ததாய் இருந்தால், வாழ்க்கை அமைதியாய் இருக்கும். அடுத்து புகழ் - இதை நான் ஓர் உதாரணம் மூலம் விளக்குகிறேன். முதன் முதலில் ராக்கெட்டை அனுப்பும் முயற்சியில் நான் தோல்வியடைந்தபோது, எனக்கு மேலதிகாரியாக இருந்த சதீஷ் தாவன் என்ற அருமையான மனிதர், அந்தத் தோல்விக்குத் தம்மைப் பொறுப்பாக்கிக் கொண்டார். ஆனால், அடுத்த முறை ராக்கெட்டை வெற்றிகரமாய் விண்ணில் செலுத்தியபோது, அந்த வெற்றிக்கு என்னைக் காரணமாக்கினார். இது எப்பேர்ப்பட்ட உயர்ந்த காரியம்! தோல்வியைத் தான்



எடுத்துக் கொண்டு, புகழை எனக்குத் தந்த அந்த உயர்ந்த செய்கை, இன்னமும் என் கண்ணுக்குள்ளேயே நிற்கிறது. அதன் பிறகு ஏதாவது காரியத்திற்காகப் புகழ் வந்தால், உடனே சதீஷ் தாவனைத்தான் நினைத்துக் கொள்வேன். பதவி - வரும், போகும்... அதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? (சிரிக்கிறார்)

'பிரார்த்தனை செய்யும்போது ஜாதி, மதம் என்று அனைத்தையும் கடந்து பிரபஞ்சத்தில் கலந்துவிடுகிறோம் என்றும், பிரார்த்தனை செய்தால் புதுமையாக சிந்திக்கும் சக்தி கிடைக்கிறது' என்றும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். பிரார்த்தனைக்கென்று குறிப்பிட்ட நேரம் ஒதுக்கும் வழக்கம் உங்களுக்கு இருக்கிறதா?

இருக்கிறது. ஐந்து தரம் தொழுகை செய்வேன். பகலில் நேரமில்லை என்றால் இரவில் சேர்த்துச் செய்துவிடுவேன். பிரார்த்தனையிலேயே மிக உன்னதமானது எது தெரியுமா? குடும்பம், நண்பர்கள், சமுதாயம், நாடு, உலகம் - அனைத்தும் சிறப்பாக வாழ வேண்டும் என்று வேண்டுவதுதான் அருமையான பிரார்த்தனை. இப்படிப் பிரார்த்திக்கும்போது மனமும், இறைவனும் ஒரு கணமேனும் ஒன்றாகச் சங்கமிப்பது உறுதி.

இளைய தலைமுறையினரின் ஆக்கபூர்வமான வளர்ச்சியில் உங்களுக்கு நிறைய அக்கறை உள்ளது. குடி, சிகரெட் போன்ற லாகிரி வஸ்துக்களை, திரைப்படம், தொலைக்காட்சி, கதைகளில் கவர்ச்சியாய்ச் சித்திரிப்பது மாணவ சமுதாயத்தைக் கெடுக்கிறது என்று ஒரு கருத்து இருக்கிறது. இந்த நிலை மாற என்ன செய்ய வேண்டும்?

இளைய தலைமுறை சிகரெட், குடியின் கவர்ச்சியால் ஈர்க்கப்படுகிறார்கள் என்பதை நான் ஏற்பதற்கில்லை. முன்பு ஒரு குடும்பத்தில் மூன்று நான்கு நபர்கள் புகைபிடித்தால், இன்று கல்வி, விழிப்புணர்வு வந்துவிட்டதில் ஒருவர்கூட புகை பிடிப்பதில்லை. பெற்றோர் வீட்டில் ஒழுங்காக இருந்தால், குழந்தைகள் கண்டிப்பாகச் சிறந்த குடிமக்களாய் உருவாவார்கள். அப்புறம் பள்ளி, அங்குள்ள ஆசிரியர்கள். ஒரு குழந்தைக்கு முதல் முன்னுதாரணம் அவர்கள்தாம். சரியான கல்வியின் நோக்கம், 'நீ எனக்கு என்ன தருகிறாய்?' என்று கேட்கும் குழந்தையை, 'நான் உனக்கு என்ன தரட்டும்?' என்று கேட்கும் விதமாய் மாற்றக் கூடியதாய் இருக்க வேண்டும். சில வருஷங்களாய் இலட்சக் கணக்கான குழந்தைகளைச் சந்திப்பதை ஒரு இலட்சியமாய்ச் செய்து வருகிறேன். ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் ஒரு கனவு! ஒரிஸ்ஸாவில் சந்தித்த சிறுமி, 'நான் அரசியல்வாதியாகி இலஞ்சத்தை ஒழிக்கப் போகிறேன்' என்கிறாள்! இதுபோன்ற கருத்துகள் இளைய தலைமுறையிடம் உள்ள முதிர்ச்சியைத்தானே காட்டுகிறது? மீடியாக்களில் சில சந்தர்ப்பங்களில் குடி, சிகரெட் போன்ற விஷயங்களை glamourise செய்கிறார்கள். இது தவறு. மீடியா நெகடிவ்வான விஷயங்களுக்கு முன்னுரிமை தந்து பரபரப்புக்காகத் தருவதைத் தவிர்த்து, ஆக்கபூர்வமான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

உங்களுக்குக் கர்னாடக சங்கீதத்தில் ஈடுபாடு வந்தது எப்படி? ராஷ்டிரபதி பவன் தொலைபேசியில் வீணையிசையை ஒலிக்கச் செய்தது நீங்கள்தானா?

ஸ்ரீராகம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். 'எந்தரோ மகானுபாவுலு அந்தரிக்கி வந்தனமு' என்ற பாட்டு ஸ்ரீராகத்தில் எத்தனை அழகாக ஒலிக்கிறது! ஸ்ரீராகத்தை இசைக்கும் ஆர்வத்தில், ஹைதராபாதில் கல்யாணி என்ற ஆசிரியையிடம் வீணை பயின்றேன். எனக்கு வீணையிசை பிடிக்கும் என்பது தெரிந்து, இங்குள்ள தொலைபேசியில் அதை ஒலிக்கச் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

நீலநிறச் சட்டையில் அதிகம் உங்களைப் பார்க்கிறோம். நீலம், பிடித்த நிறமா, அல்லது அதிர்ஷ்ட நிறமா?

பிடித்திருப்பதால்தான் அணிகிறேன். ஆகாயத்தின் நீலம் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

''நீ எங்க அம்மாவை அடிச்சது சரியாப் படலை லதா.''

''அடிக்கும்போது நகர்ந்துட்டா எப்படி சரியாப் படும்?''

- சீர்காழி வி.ரேவதி



'மூட நம்பிக்கை' என்று சொல்லப்படும் விஷயங்களில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

'ஜனாதிபதியாகப் பிரமாணம் எடுத்துக் கொள்ள எந்த நேரத்தைத் தேர்ந்தெடுக் கலாம்?'' என்று என்னிடம் கேட்டபோது, 'பூமி தன்னைத்தானேயும் சூரியனையும் சுற்றும் எந்த நாளும், நேரமும் எனக்குச் சம்மதமானவை' என்றேன்.

உங்களுடைய தலைமுடியின் அலங் காரம் ஒரு தனித்தன்மையுடன் இருப்பதை விரும்பிச் செய்கிறீர்களா?

(பெரிதாய்ச் சிரிக்கிறார்) இதைக் கேட்டு தான் ஒவ்வொரு நாளும் எனக்கு நிறைய ஈமெயில்கள் வருகின்றன! *(மீண்டும் சிரிக் கிறார்)*. நான் இரண்டு மாதத்திற்கொரு முறை தான் முடிதிருத்திக் கொள்வேன். அது பாட் டுக்கு வளர்கிறது, நான் என்ன பண்ணட்டும்!

நீங்கள் இப்படிச் சொல்வதைக் கேட் கும்போது, தயானந்த சரஸ்வதி சுவாமிஜி சொன்ன ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. நியூயார்க்கில் ஓர் அமெரிக்கர் சுவாமிஜியிடம், 'ஏன் தாடி வளர்க்கிறீர் கள்?' என்று விடாமல் கேட்க, இவர், 'நான் வளர்க்கவில்லை, அது தானாய் வளர் கிறது!' என்றாராம்.

(சிரிக்கிறார்) '*கனவு காணுங்கள்*' என்று இளைய சமுதாயத்திடம் சொல்வதை விளக்க முடியுமா?

ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். அதை அடைய கடுமையாய் உழைக்க வேண்டும்; வியர்வை சிந்த வேண் டும். விடாமல் அந்த இலட்சியத்தை அடையும் வரை உழைக்க வேண்டும். Goal, Sweat and Perseverance. இந்த மூன்றும் ஒருங்கிணைந் தால்தான் வெற்றி காண முடியும். இதைத் தான் நான் சுருக்கமாய் 'கனவு' என்கிறேன். இது ஒரு package.

உங்கள் macro ஆசை - 2020ம் ஆண்டுக் குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறிவிட வேண்டும் என்பது. micro ஆசை - ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டு, கடற்கரையோரம் ஒரு சிறிய வீட்டில் வசிப்பது - என்று கேள்விப்பட்டேன். இது நிஜமா?

ஆசிரியர் தொழிலை நான் நேசிப்பது உண்மைதான். கடற்கரை அருகே சிறிய வீடு வேண்டும் என்று எண்ணியதில்லை. ஆனால், அப்படி அமைந்தால் சந்தோஷ மாய்த்தான் இருக்கும்.

உங்களையே நீங்கள் விமர்சிக்க முடியுமா?



எப்போதும் நல்ல மனுஷனாய் வாழ வேண்டும் என்பது என் ஆசை, அதற்கான முயற்சிகளை நான் எப்போதும் நிறுத்துவ தில்லை.

ஜனாதிபதி மாளிகையில் ஒரு Official Hostess இல்லாதது உங்களுக்குச் சிரமமாய் இருக்கிறதா?

இப்போது நீங்கள் என்னோடு சாப்பிடப் போகிறீர்கள். அதிகாரபூர்வமான எஜமானி இல்லாதது குறையாகத் தெரிகிறதா, இல்லையா என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்...

எழுந்து சாப்பிடப் போகிறோம். மொகல் தோட்டத்தைப் பார்த்தபடி சாப்பாட்டு மேஜை. நாலு வகைப் பொரியல், அவியல், சப்பாத்தி, சாதம், முருங்கைக்காய் சாம்பார், ரசம், தயிர், பால் பாயசம் - என்று வெகு நேர்த்தியாய்த் தயாரிக்கப்பட்டிருக்கும் பதார்த்தங்கள் பரிமாறப்படுகின்றன. "சாம்பார் நல்லா இருக்கு... சாப்பிடுங்க.'' என்று ஜனாதிபதி உபசரிக்க, சாப்பிடுகிறேன். "மொகல் தோட்டத்தைப் பார்த்தபடி நீங்கள் சாப்பிட வேண்டும் என்று மேஜையை நகர்த்திப் போட்டதிலிருந்து, 'மெனு' சொன் னதுவரை, அனைத்திலும் ஜனாதிபதிக்குப் பங்குண்டு. உங்களுக்காக விசேஷமாய் பால் பாயசம் தயாரிக்கச் சொல்லியிருக்கிறார்'' என்று, கூட அமர்ந்து சாப்பிட்ட டாக்டர் ஏ. சிவதாணுப் பிள்ளை, DRDOவின் முக்கிய அதிகாரி, ஜனாதிபதியின் நண்பர் - கூறும்போது, மனசு நெகிழ்ந்து போகிறது.

பாரதக் குடியரசின் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் - இளைய தலை முறைக்கு மட்டுமல்ல, அனைத்து வயதின ருக்கும் தமது சிந்தனைகள், செயல்பாடு களால் ஒரு சிறந்த முன்னுதாரணமாய்த் திகழ்கிறார் என்பது நிஜம். ●

நான் பாட்டி ஊருக்குப் போனா இன்னைக்கும் என் பேரு யாருக்கும் தெரியாது. 'சுப்பையா மருமவன்' என்றுதான் கூப்பிடுகிறார்கள். பேசிக் கொள்கிறார்கள். சின்ன வயசுல மாமா கூடவே ஒட்டிட்டிருந்தபோது ஒட்டிக் கொண்ட அடையாளம்! அப்பவெல்லாம் அம்மா வாரத்துக்கு ஒரு தடவை பாட்டி ஊருக்குப் போயிடுமாம்.

எல்லோருக்கும் எப்படியோ அது மாதிரியே எனக்கும் அம்மாவோட ஆண் வடிவமாத்தான் என் மாமாவும் இருந்தார். ஆனா இப்போ அத்தையோட ஆண் வடிவமா மாறிட்டாரு.



தூறல் மேகங்கள்

ஒரேயொரு சம்பவத்தைச் சொன்னா மாமாவுக்கும் எனக்குமிருந்த நெருக்கத்தைச் சரியாப் புரிஞ்சுக்க முடியும். வியப்பும், மகிழ்வும், பயமும் கலந்த முகபாவத்தோடு அம்மா அடிக்கடி அந்த சம்பவத்தைச் சொல்வாள்.

பாட்டி ஊர் கோயில் கொடைக்கு எங்க வீட்ல எல்லோரும் போயிருந்தோம். அப்போ மாமாதான் சுடலைமாடன் சாமி ஆடியிருக்கார். (இப்பவும் அவர்தான் ஆடுறாராம்) காலை பூஜை, மதிய பூஜை சாமியாடின நேரம் போக மிச்ச நேரத்துல என்னைத் தான் தூக்கி வைச்சிருப்பாராம். ராத்திரி பூஜை முடிஞ்சதும் மாமாவோட சேர்த்து மூணு சாமிகள் வேட்டைக்குப் போவாங்களாம். வேட்டைக்குப் போறதுதான் கொடையிலேயே முக்கியமான நிகழ்ச்சி. வேட்டைக்குப் போயிட்டு வந்துதான் அருள்வாக்கு, பரிகாரம் சொல்றதெல்லாம் நடக்கும். அப்படி வேட்டைக்குப் போகும்போது யாரும் குறுக்கவோ, எதிராவோ போனா பதினோரு நாள்ள செத்துடுவாங்களாம்.

அன்னைக்கு ராத்திரி பூஜை முடிஞ்சு நடு சாமத்துலே ஊரே அதிர மேளம் முழங்க, பக்கத்து ஊர் சுடுகாட்டுக்கு சாமிகள் வேட்டைக்குப் புறப்பட்டிருக்காங்க. அந்த நேரத்துல ஓரமா அம்மா கூட நின்னுட்டிருந்த நான் வேகமா ஓடிப்போய் மாமா காலைக்கட்டிக்கிட்டு 'நானும் கூட வர்றேன்'னு அழுதேனாம். ஒரு நிமிடம் ஊரே அதிர்ச்சியாகி நின்னுடுச்சு. மாமாவுக்கும், எனக்கும் ஏதேதோ பரிகாரம்



யுகல்

பண்ணினதுக்கப்புறமா, மறுபடி புறப்பட்டிருக்காங்க. இதிலே என்ன விசேஷம்னா நான் காலைக் கட்டிக்கிட்டதும் மாமா கையிலிருந்த வேல்கம்பையும், தீப்பந்தத்தையும் கீழே போட்டுட்டு உடனே என்னைத் தூக்கிக்கிட்டாராம்.

அப்படி ஒரு பந்தம் வீசிய சொந்தம் எனக்கும் மாமாவுக்கும் இருந்திருக்கு.

நான் மூன்றாம் வகுப்பு படிக்கும்போது அம்மாவுக்கும் அத்தைக்கும் நடந்த சண்டையில் இரண்டு குடும்பத்துக்கும் பேச்சு வார்த்தையே இல்லாமப் போயிடுச்சு. இப்போ நான் பத்தாம் வகுப்பு படிக்கிற வரைக்கும் இதுதான் நிலைமை.

பாட்டி ஊருலேயிருந்து அம்மா கிளம்பும்போது "கரை வழியாப் போகாம சாத்தான் கோயில் வழியா போய் கப்பையா வயல்ல மொளகாய் போட்ருக்கான் ஆஞ்சிட்டுப் போ"ன்னு பாட்டி சொல்லியிருக்கா. அதே மாதிரி அம்மாவும் ஏழெட்டு பாத்தியில ஒரு பெரிய பை நிறைய மிளகாய் ஆஞ்சிட்டு எங்க ஊருக்கு வந்துட்டா. அப்போ வயல்ல மாமா வீட்ல உள்ளவங்க யாருமில்லையாம்.

மறுநாள் அத்தையும், மாமாவும் ஆட்களோட மிளகாய்ப் பறிக்க வந்து பார்க்கும்போது – யாரோ ஏழெட்டு பாத்தியில மிளகாய் திருடியிருக்காங்கன்னு நினைச்சிட்டாங்க.

மாமா தெருவில உள்ள ஒரு பொம்பளை அவ வீட்டு முற்றத்துல மிளகாய் காயப் போட்டிருந்ததைப் பார்த்து, அந்தப் பொம்பளைதான் மாமா வயல்ல மிளகாய் திருடியிருக்கான்னு அத்தைக்கும், அந்த பொம்பளைக்கும் வாக்குவாதம் வந்து, சண்டையாகி, கடைசியில அத்தை மண்டை உடைஞ்சி தையல் போடுற அளவுக்கு ஆயிடுச்சாம்.

அதுக்கப்புறம்தான் பாட்டி, அம்மா ஆஞ்ச விபரத்தைச் சொல்லியிருக்கா. பாட்டி வீடும், அத்தை வீடும் இரண்டு தெரு தள்ளியிருக்கிறதனாலே பாட்டி உடனே சொல்ல சந்தர்ப்பமில்லாம ஆகி அப்படியே மறந்துட்டா.

அம்மாதான் மிளகாய் ஆஞ்சதுன்னு தெரிஞ்சதும் அத்தை அம்மாவைக் கண்டபடி திட்டியிருக்கா. "நடுவை, களைபறி, காய் பறின்னு வேலைக்கு ஆள் கிடைக்காம திண்டாடிட்டிருக்கும்போது வராமல், இப்போ பஸ் ஏறி வந்து பயித்துல கையை வைச்சிருக்காளோ, வரட்டும்..."

மறுவாரம் அம்மா பாட்டி ஊருக்குப் போய் வீட்டு வாசல்ல நுழையறதுக்கு முன்னாடியே அத்தை பேசினதை பாட்டி அப்படியே கொட்டியிருக்கா, அம்மா நேரா அத்தை வீட்டுக்குப் போயிட்டா.

மாமாவோட சமாதானப் பேச்சை எல்லாம் மீறி, அம்மா ஒண்ணு சொல்ல, அத்தை ஒண்ணு சொல்ல, களேபரமாகி கடைசியில ஆஞ்ச காய்க்குப் பணத்தை முற்றத்துல வீசிட்டு வந்துட்டாளாம் அம்மா. அந்த வார ஞாயிற்றுக் கிழமை டவுன் மார்க்கெட்ல மாமாவை அம்மா பார்த்திருக்கா. 'நீ ஆஞ்சது முதல்லேயே தெரியும்னா இவ்வளவு வந்துருக்காதுக்கா. கழுதை பேசினதே காரியமா நினைச்சுக் கிடாதே"ன்னு மாமா சொல்லியிருக்கார்.

இரண்டு மாசம் கழிச்சு மாமா மகள் சடங்குக்கு மாமாவே பத்திரிக்கை தந்துட்டு, இரண்டு நாள் முன்னாடியே வரச் சொல்லிட்டுப் போனார். ஆனால் நாங்க யாரும் போகலை.

"சொந்த பந்தம்னு நாலு சனம் வேணும்ங்கற மாதிரியா அன்னைக்கு அவன் பொண்டாட்டி பேசினா. இப்போ ஒரு வாய் சோத்துக்குப் பல்லை இளிச்சிட்டு வந்துருவாங்கன்னு நினைச்சிகிட்டாங்களோ"ன்னு சடங்கன்னைக்கு வீட்லே யிருந்து அம்மாவுக்கும் ஒரே முணுமுணுப்பு தான்.

சடங்குக்கு நாங்க யாரும் போகாத கோபத்துல அதுக்கப்புறமா அம்மாவை டவுன்ல பார்த்தாலும், பாட்டி வீட்ல பார்த்தாலும், பார்க்காத மாதிரி போயிடு வாராம் மாமா. இப்படியேதான் அஞ்சு வருசமும் போயிடுச்சு.

"பொண்டாட்டி பேச்சைக் கேட்டுட்டு மூஞ்சைத் தூக்கிட்டுப் பார்த்தாலும் பார்க்காத மாதிரி போறாம்ல உங்க மாமாக் காரன்"ன்னு மாமாவைப் பார்த்த நாளெல்லாம் அம்மா சொல்வா.

கொஞ்ச நாள்ளேயே பாட்டி இறந்ததுக் கப்புறம் அம்மா பாட்டி ஊருக்கு அடிக்கடி போறதில்லை. மாமா வீட்டைத் தவிர, சொந்தகாரங்க யாரு வீட்டுக் கல்யாணம், சடங்கு, துட்டின்னாதான் போவாள்.

இதற்கிடையில நானும் ஸ்கூலுக்குப் போகும்போது டவுன்ல வச்சு அஞ்சாறு தடவை மாமாவைப் பார்த்திருப்பேன். உரம், மருந்து வாங்கவும், காய்கறி மூட்டை, பால் கேனு கொண்டு வரவும் அடிக்கடி டவுனுக்கு வருவார். ஒரு தடவை பஸ் ஸ்டாண்ட்ல நின்னுட்டிருந்தவர் என்னைக் கையைக் காட்டிக் கூப்பிட்டாரு. நான் கவனிக்காத மாதிரி வேகமாய் சைக்கிள்ள போயிட்டேன். அம்மாவைக் கண்டுக்காமல் போறதுக்குப் பதிலடி கொடுத்திட்டதா நினைச்சிக்கிட்டேன். மனசுக்குள்ளே பெருமையான ஒரு கர்வம்.

> ## இங்கிலீஷ் துரை!
>
> சரத்குமார் இதுவரை எத்தனையோ விதமான கெட்டப் போட்டிருந்தாலும் 'திவான்' துரைசிங்கம் கேரக்டர் தமிழுக்குப் புதுசு. துரைசிங்கம் கேரக்டருக்காக தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த சில தலைவர்களின் மேக்கப் உள்பட இருபது விதமான மேக்கப் போட்டுப் பார்க்கப்பட்டது. ஆனால், டைரக்டர் சூர்யபிரகாஷுக்குத் திருப்தி வரவில்லை. தமது உதவி இயக்குநர்களை அழைத்து 'ஏதாவது ஆங்கில கேரக்டர் இருந்தால் தேடிப் பாருங்கள்' என்று கூற, உதவி இயக்குநர்கள் சென்னையில் உள்ள பிரபல புத்தகக் கடைக்குச் சென்று ஆங்கில

சொந்தக்கார தாத்தா ஒருத்தர் இறந்துட்டார்னு பாட்டி ஊர்லேயிருந்து இன்னைக்குக் காலையில துட்டி வந்தது. பள்ளிக்கூடம் லீவுன்னதும் நானும் அம்மா, அப்பா கூட கிளம்பிட்டேன்.


பஸ் ஊருக்குள்ளே நுழையும் போதே துட்டி வீட்டு மேளச்சத்தம் மைக் செட்ல கேட்டது. துட்டி வீட்டு முற்றத்துல போட்டிருந்த கட்டில்ல சில பெரியாட்கள் கூட மாமா பேசிட்டிருந்தார். அங்கே இருந்த கூட்டத்துல நாங்க வர்றதை அவர் கவனிக்கலை.

மாமா கண்ல படாத மாதிரி நான் என் கோபத்தைத் தக்க வச்சிகிட்ட பெருமையான தலைக்கனத்தோட, ஒரு மறைவான இடத்திலேருந்து மேளமடிக்கிறதைப் பார்த்திட்டிருந்தேன்.

இடை, இடையில மேளமடிக்கிறது நின்னதும் வீட்டுக்குள்ளே இருந்து ஒப்பாரி சத்தம் பலமா கேட்டுட்டிருந்தது.

எல்லோரும் சுடுகாட்டுக்குப் போகும் போது கூடவே போயிடணும்னு முடிவு பண்ணியிருந்தேன்.

"மழை மேகமாயிருக்கு சீக்கிரம் எடுத்துடுவோம்"னு யாரோ சொல்ல, சீக்கிரமே



புத்தகங்களை வாங்கி கேரக்டருக்குத் தகுந்த படங்களைத் தேடினார்கள். இறுதியில் புருஷோத்தமன் என்பவர் ஒரு 'கெட்டப்'பை வரைந்து கொடுத்தார். கம்பீரமாக இருந்த அந்த கெட்டப் சரத்குமாருக்கும், டைரக்டருக்கும் பிடித்துப் போக இறுதியில் அந்த 'கெட்டப்'பே ஓ.கே. ஆகிவிட்டது.

அது சரி! சரத்குமார் போட்டிருக்கும் அந்த கெட்டப் யாருடையது தெரியுமா? பிரபல ஹாலிவுட் 'ஜேம்ஸ்பாண்ட்' கதாநாயகனான 'சீன் கானரி'யின் கெட்டப்.

— ஸ்ரீ

வண்டி கட்டி சுடுகாட்டுக்குப் புறப்பட்டாச்சு. கூட்டத்தோட நானும் எங்கப்பா கூட கிளம்பிட்டேன்.

சுடுகாட்ல நான் இருந்த இடத்திலேயிருந்து கொஞ்ச தூரத்துல ஒரு கருவ மரத்துக்குக் கீழே, தாத்தா மகன்களுக்கு மொட்டை அடிச்சிட்டிருந்தாங்க. அங்கே இருந்த மாமா என்னையே பார்த்துட்டிருந்த மாதிரி இருந்தது. என்னைத்தான் பார்க்கிறாரா, என்னைத்தாண்டி எதையாவது பார்க்கிறாரான்னு தெரியலை. தாத்தாவைப் புதைச்சு முடிச்சதும் மழை வந்து எல்லோரையும் ஒரு பாட்டம் நனைத்து விட்டிருந்தது. எல்லோரும் சுற்றியிருந்த ஒவ்வொரு கருவ மரத்துக்குக் கீழே, சின்னச் சின்ன கூட்டமா ஒதுங்கினாங்க.

வெட்ட வெளியில நிற்கிறதும் மரத்துக் கீழே நிற்கிறதும் ஒண்ணுதான்ங்கற மாதிரி பேய் மழை. என் டவுசர், சட்டை எல்லாம் தொப்பலா நனைஞ்சது.

மழை நின்னதும் வீட்டுக்குப் போறதுக்காக அப்பா எந்த மரத்துக்குக் கீழே நிற்கிறார்னு நோட்டம் விட்டேன். அந்த நேரம் என் தோள்ல ஒரு கை விழுந்தது. திரும்பினா மாமா நின்னுட்டிருந்தார். எனக்கு ஒண்ணும் ஓடலை. அவர் கழுத்திலேருந்த துண்டைப் பிழிஞ்சு என் தலையைத் துவட்ட, ஒரு நிமிசம் சிலையாயிட்டேன். அழுத்தி அவர் துவட்டத் துவட்ட, எனக்கு கண்ணீர் குபுகுபுன்னு வந்துடுச்சு. என் கண்ணீரைப் பார்த்ததும் இரண்டு கையாலேயும் என் தலையைப் பிடிச்சு அவர் நெஞ்சோட சேர்த்து அணைச்சிட்டாரு. கை காலெல்லாம் கட்டி நடுக்கடலுக்குள்ளே தூக்கிப் போட்ட மாதிரி, ஒரே நிமிசத்துல எதுவும் பேசவோ, செய்யவோ முடியாதபடி மாமாவோட அரவணைப்புக்குள்ளே புதைஞ்சுக்கிடந்தேன்.

சுடுகாட்டிலேயிருந்து ரொம்ப தூரம் வரைக்கும் மாமா என் கையைப் பிடிச்சிட்டேதான் பேசிட்டு வந்தார்.

வரும் வழியெங்கும், மழையின் தவிர்க்க முடியாத ஸ்பரிசத்தால் மரங்களும், செடிகளும் நனைந்து கிறங்கிக்கிடக்க — மாமாவின் ஸ்பரிசத்தால் கிறங்கி, செம்மண் ஈரத்தில் பாதம் புதைய நடந்து கொண்டிருந்தேன் நான்.

ஒவ்வொருவரும் வேஷ்டியாலும், துண்டாலும் தலையைத் துவட்டிக் கொண்டே ஊரை நோக்கி நடந்தார்கள்.

மாமா துவட்டி விட்டது எனக்கு தலையில் கனமில்லாமலிருந்தது. பூமி தண்ணென்று இளகியிருந்தது. ○

ஒரு முதிர்ந்த விதவையைக் காட்டி, தம் சீடரிடம் சொன்னார் காஞ்சி மாமுனி: "அவரிடம் போய்க் கேள், சுமங்கலியா என்று..."

நடுங்கிப் போனான் சீடன். குருவின் ஆணையைத் தட்ட முடியாமல் தயங்கித் தயங்கிச் சென்று மெல்லிய குரலில் "சுமங்கலியா?" என்று அந்த வயதான பெண்ணிடம் கேட்க, அவர் ஆச்சர்யத்தில் ஆழ்ந்து போனார்... "பெரியவாளுக்கு எப்படித் தெரியும், நாங்களெல்லாம் சுமங்கலி கிராமத்திலிருந்து வருகிறோம் என்று!"



மதுரம், மதுரம்!

— இப்படிக் குறும்புத்தனமாகவும் அருள் புரிந்த பரமாச்சார்யாளின் வாழ்க்கை வரலாற்றை, ஹரிகதையாக... இல்லையில்லை, ஹரகதையாக ஒளிப்பதிவு செய்து, வீடியோ சி.டி. வெளியிட்டிருக்கிறது ஆர்.பி.ஜி. நிறுவனம்.

'ஓரிருக்கை மணி மண்டப நிதி'க்கென இந்த ஹரிகதையை வழங்கியிருப்பவர் ரேவதி சங்கரன். நாட்டியம், நாடகம், நகைச்சுவை, இசை, தமிழ் (அப்பாடி!) எல்லாவற்றிலும் தாம் வல்லவர் என அனாயாசமாக நிரூபித்திருக்கிறார் ரேவதி. தாம் சர்வ அலங்கார பூஷணத்துக்குத் தகுதியானவர் என்பதையும் உணர்த்துகிறார்.

டபுள் வி.சி.டியாக வரும் இந்த நிகழ்ச்சியின் ஆரம்பம் என்னவோ ஆர்ட் ஃபிலிம் ரேஞ்ச். போதாததற்கு, ரீ ரெகார்டிங்கில் பொருந்தாமை வேறு இருக்கிறது. 'சங்கராச்சார்யம்' கிருதியில் ஒரு வரிக்கு விடுதலை; 'பிறவா வரம் தாரும்' பாடலில் கொஞ்சம் சொந்த சாஹித்யம், போன்று சில சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன. ஆனால், மாமுனியின் அவதார காலம் ஆரம்பிக்க, பரபரவென்று சூடுபிடிக்க, மறைந்து போகின்றன அத்தனை குறைகளும். அவர் வந்தால் தோஷங்கள் நீங்கிவிடும் என்பதற்கு இதுவே சாட்சி!

ரேவதியின் வலக்கரமாக மிருதங்கம் வெங்கட்டும் (ஏனய்யா, 'சங்கராச்சார்யம்', 'ஸ்ரீ காமகோடி', கிருதிகளுக்குக் கை கொடுக்கவில்லை?), இடது கரமாக இடதுகை ஹார்மோனிஸ்ட் வெங்கடசுப்ரமணியனும், இந்தக் கதைக்கு பலபீமர்கள். ஆர்ட் டைரக்டர் தோடா பானு, ஒளிப்பதிவு செய்த கிச்சாஸ், அண்ணா, மற்றும் இந்தப் படைப்புக்குப் பின் நின்று செயல்பட்டவர்கள் யாவருமே, ஆசார்யரின் லீலா அதிசயங்கள் தொடங்கிய நொடியில் இருந்த இடம் தெரியாது மறைகிறார்கள்.

பெரியவாள் செய்த 'டம்ப் ஷராட்ஸ்' முறையிலான உரையாடல், முறுக்கு மாமியிடம் பூர்ண கும்ப சபதம், ஜாங்கிரிக்கும் வடைக்கும் காட்டிய ஒற்றுமை, போன்ற வேதாந்த நகைச்சுவைகளை அள்ளி வீசுகிறார் ரேவதி. அந்த வலையில் நாம் விழாமல் இருப்பது கடினம்; மணிமண்டபத்துக்கு நன்கொடை செலுத்தாமல் இருப்பது அதைவிடக் கடினம்.

'மதுரம் மதுரம் மஹாஸ்வாமி சரிதம்' என்ற பெயரில் வெளி வந்துள்ள இந்த அஞ்சலி, ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அனுக்ரஹ வார்த்தைகளுடனும், மணிமண்டபத்தின் பணி நடக்கும் காட்சிகளுடனும் நிறைவு பெறுகிறது.

நிறைவான உள்ளங்களை உருவாக்கி, நிலையான வழி வகுத்த மாமுனியின் மண்டபப் பணிகள் நிறைவேற, ரேவதி சங்கரன் வழங்கியுள்ள இந்தப் படைப்பும் மதுரம் மதுரம்!

தயாரிப்பு: ஸாரிகமா இந்தியா லிமிடெட்
விலை: ரூ. 350/-

— ஜானவி

புக் பேங்க்

கண்ணகி காவியம் - வலம்புரி சோமநாதன்

சொல்வதற்கு சுகப்பிரும்மத்தையும் கேட்பதற்கு பரீட்சித்து மகாராஜனையும் விடச் சிறந்தவர்கள் இல்லை என்பார்கள். அதிலும் சொன்னதையே திரும்பச் சொல்வதும், அதையும் சுவைபடச் சொல்வதும் கடினம்.

மதிகெட, சுதிகெட, பதிகெட, கண்ணகி விதிகெட நின்ற கதை. கற்பு காலத்தை மிதிபட வென்ற கதை. ஐந்தில் ஒன்றான சிலம்பு, நாம் அறிந்த கதைதான். திரைக்கதை பாணியில் காட்சி காட்சியாய் நகர்த்தி, நேரடியாகப் பார்க்க வைக்கும் பா நயமும், பேனா நயமும் நடையில் வலிமை சேர்க்கிறது. தமிழுக்கு மற்றுமோர் சிலம்பு.

வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.75/-

இப்படித்தான் காதல் - ராசி. அழகப்பன்

காதலின் அமர காவியங்கள் அனைத்துக்குமே சோகம் அடிநாதமாக இருக்கிறது. காதலின் வேகமும், சோகமும், மோகமும் படைத்த காவியங்கள் பல. காவியங்கள் சிறுகதைகளாகி, துணுக்குச் செய்தியாகி, இப்போது மூன்று வரி ஹைக்கூவாகி நிற்கிறது. சோகமறியாத சுவையான காதலின் ஹைக்கூ கவிதைகளின் அணிவகுப்பு. அனுபவக் காதலின் தொகுப்பு.

குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.50/-

ஊழலோ ஊழல் - தி. சிகாமணி

அரசியலின் உடன்பிறவாச் சகோதரி ஊழல். மக்கள் அளிக்கும் ஓட்டு, அரசை நடத்தவும், அதைச் சார்ந்து ஊழல் நடத்தவும் அனுமதிச் சீட்டு - என்பது சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவின் இடைவிடாத பாட்டு. ஆட்சி மாறியதும் எதிர்க் கட்சிகளுக்கு வைக்கும் முதல் வேட்டும், ஊழல்கள்தான். ஐம்பத்தைந்து ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக்கும் பல்வேறு ஊழல்களின் விவரங்களைக் கொண்ட தொகுப்பு.

தூரிகை வெளியீடு, ஏஜி3, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை - 41. விலை ரூ.50/-

ஓர் அலட்சியம் இலட்சியமாகிறது - நவரஞ்சனி ஸ்ரீதர்

முத்தமிழில் ஒன்று என்றாலும் தமிழில் நாடகத் தமிழைப் பாதுகாத்துப் பராமரிப்பவர்கள் குறைந்தே போய் விட்டார்கள். அதுகுறித்த நூல்களும் அருகிவிட்டன. பதிமூன்று நாடகங்களின் தொகுப்பு, சற்று நாடகத் தமிழை, அந்தக் கலையைக் காப்பாற்ற முயல்கிறது.

மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.65



நகைச்சுவையூட்டும் நாடோடிக் கதைகள் - சரோஜா சண்முகம்

வாய் வழியும் செவி வழியும் வழங்கி வந்த 'கர்ண பரம்பரைக் கதைகள் தமிழ்நாட்டில் ஏராளம். தமிழில் அந்நாளில் சிறுகதை இலக்கியம் என்னும் பிரிவே இல்லையென்பதை திடமாக மறுக்க ஆதாரம், இந்த நாடோடிக் கதைகள். அவற்றிலிருந்து, எந்தச் சுவையையும் விஞ்சி நிற்கும் நகைச்சுவையின் அடித்தளத்தில் அமைந்த கதைகளின் தொகுப்பு.

அன்பு இல்லம், கே.கே.பி. காம்ப்ளெக்ஸ், 32/107, கெனடியா மடம் சாலை, சென்னை - 14. விலை ரூ.70/-


- விஷ்வக்

கஜானா நிரம்ப கலக்கல் யோசனைகள்!

தனியார் வைத்திருக்கும் ஜெனரேட்டர்களுக்கு மீட்டர் பொருத்தப்பட்டு யூனிட்டுக்குப் பத்துப் பைசா வசூலிக்கத் திட்டமிட்டிருக்கிறது தமிழ்நாடு மின்சார வாரியம்!

காலியான அரசின் கஜானாவை நிரப்ப உதவும் கலக்கல் ஐடியாதான் இது!

இதே ரீதியில் அரசின் கஜானாவை நிரப்ப, வேறு பல கலக்கல் ஐடியாக்கள் நமது மூளையிலும் உதயமாயின. மனம் கலங்காமல் படித்துப் பாருங்கள். படிக்காமல் அடுத்த பக்கத்தைத் திருப்புவோர் பேரில் கடும் வரி விதிக்கப்படுவதுடன் 'எஸ்மா' வின் கீழ் (அதாவது 'என்ன எழுதினாலும் சிரிக்காத மனிதர் ஆக்ட் - (Enna Yezhudinalum Sirikkadha Manidhar Act) நடவடிக்கையும் எடுக்கப்படும்.



ஐடியா - 1 : வீட்டில் டார்ச் லைட் வைத்திருந்தாலும் மீட்டர் பொருத்தி, யூனிட்டுக்கு ஒன்பது பைசா (ஒன்பது அதிர்ஷ்ட எண் ஆச்சே!) வசூல் செய்யலாம்.

ஐடியா - 2 : மெழுகுவர்த்தி வைத்திருக்கும் ஏழை எளிய மக்களிடமிருந்தும் கட்டாயமாக ஒரு மெழுகுவர்த்திக்கு ஐந்து பைசா வீதம் வசூலிக்க வேண்டும். ஆனால் அதை மின்வாரியத்திற்கு அவர்கள் கட்ட, அரசு மானியமாக ஒரு ஏழையின் குடும்பத்திற்கு தலா பத்துப் பைசா வீதம் கொடுக்கும் திட்டமும் தீட்ட வேண்டும்.


ஐடியா - 3 : மொபட், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், கார், வேன், லாரி என எல்லா வாகனங்களிலும் மீட்டர் பொருத்தி, இரவில் அந்த வாகனங்களில் விளக்கு போட்டால் மின் கட்டணம் வசூல் செய்து விடலாம்.

ஐடியா - 4 : பகல் நேரங்களில் சூரிய ஒளியைப் பயன்படுத்தவும், ஒரு மணி நேரத்திற்கு ஐம்பது பைசா வீதம் மீட்டர் பொருத்தாமலே வசூல் செய்து, கஜானாவை நிரம்பி வழியச் செய்யலாம்.

ஐடியா - 5 : தேங்காய் மற்றும் இளநீர் வெட்டினால் அதில் இருக்கும்



பாஸ்




தண்ணீரின் அளவிற்கு ஏற்ப மெட்ரோ வாட்டருக்கு டாக்ஸ் கட்டியாக வேண்டு மென அவசரச் சட்டம் கொண்டு வரலாம்.

ஐடியா - 6 : ரோட்டில் நடந்து போகும் பேர்வழிகளிடமும் 'நடைமுறை' வரி வசூ லிக்கலாம். வாக்கிங் லைசென்ஸ் எடுக்கச் சொல்லலாம்.

ஐடியா - 7 : மூச்சை உள்ளே இழுத்தால் ஆக்ஸிஜனை உட்கொண்டதற்கான வரியும், வெளியே விட்டால் கார்பன்-டை-ஆக்ஸைடு வெளிவிட்டதற்கான வரியும் போடலாம்.

ஐடியா - 8 : மழை பெய்ய யாகங்கள், ஹோமங்கள் செய் பவர்கள் மெட்ரோ வாட்டரிடம் முன் அனுமதி பெற வேண்டும். முன் அனுமதிக் கட்டணம் ரூ.9000/- மட்டுமே!





ஃபிளாஷ் நியூஸ் :
ஐடியா கொடுத்துப் புகழ் தேட முயற்சி செய்யும் பாஸு முதலான துணுக்கு எழுத்தாளர்கள் பேரில், ஐடியா வரி விதிக்கப்படும் என கடைசித் தகவல் கூறுகிறது.

கார்ட்டூன்கள் : **சேகர்**

எஸ். எஸ்.எல்.சி. பாஸ். அடுத்த படியாய் காலேஜ்தானே! என் அண்ணன் கோயம்புத்தூரில் டெலிபோன் துறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். நான் கோயம்புத்தூரில் பி.எஸ்.ஜி.ஆர்ட்ஸ் காலேஜில் கணக்கு, பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி கொண்ட முதல் குரூப்பில் இன்டர் மீடியட் சேர்ந்தேன்.

கல்லூரி வாழ்க்கையிலும் கலகலப்புக்குப் பஞ்சமில்லை. பார்க்க நல்ல பர்சனாலிடி என்பதால், கல்லூரி மாணவர்கள் மத்தியில் நான் கொஞ்சம் பாபுலர். ஆனாலும் வகுப்பில் பாடம் நடத்தும்போது கவனம் சிதறவிட மாட்டேன்.

- பரீட்சை என்றால் சீரியஸாக எடுத்துக் கொள்கிற பழக்கம் தான் பள்ளிக்கூட நாளிலிருந்தே எனக்குக் கிடையாதே! ஒரு தடவை பரீட்சையின்போது ஏற்பட்ட அனுபவம் மறக்கவே முடியாது. காலையில் பத்து மணிக்குப் பரீட்சை. நான் போகும் போது, பரீட்சை ஆரம்பித்து நடந்து கொண்டிருந்தது.

நிதானமாகப் பரீட்சை ஹாலுக்குப் போனபோது, எதிரே வந்தவர் என்னுடைய கணித ஆசிரியர் அனுமந்த ராவ்.

"என்ன நாகேஸ்வரா இவ்வளவு லேட்?" என்று பரபரப் பாய்க் கேட்டார்.

"பரீட்சைதானே சார்! பரவாயில்லை! ஆமாம்! இன்றைக்கு என்ன பரீட்சை?"

அதிர்ந்து போய்விட்டார் கணித ஆசிரியர்.

"அடப்பாவி! என்ன பரீட்சை இன்னைக்குன்னே தெரியாம நீ பரீட்சை எழுத வந்திருக்கியா? இன்னிக்கு என் சப்ஜெக்ட்தான்! கணக்கு! போ... போ... மடமடன்னு பரீட்சை எழுது... லேட் ஆகுது பார்!"

என் இடத்தில் போய் உட்கார்ந்தேன். கேள்வித்தாளை ஒருமுறை படித்துப் பார்த்தேன். கிடுகிடுவென்று எழுத ஆரம்பித்தேன். அனலடிகல் ஜியோமெட்ரி, கால்குலஸ், ஒரு கிராஃப், ஒரு ரைடர் என்று போட்டு முடித்து, விடைத்தாளைக் கொடுத்து விட்டு, ஹாலை விட்டு .வெளியே வந்தால்,



படம் : யோகா

"நீ திருந்தவே மாட்டே!"

மறுபடியும் கரெக்டாக என் கணித ஆசிரியர்.

"என்ன நாகேஸ்வரா? அதுக்குள்ள வந்திட்டே? கேள்வியெல் லாம் ரொம்ப கஷ்டமா? ஒண்ணுமே எழுதாம, பேப்பரை மடிச்சுக் கொடுத்திட்டு வந்திட்டியா?" என்றார்.

"யார் சொன்னது நான் ஒண்ணும் எழுதலைன்னு! நாற்பது மார்க் வாங்கினால் பாஸ்தானே! நான் பாஸ் மார்க்குக்கு எழுதி விட்டேன். நூத்துக்கு நூறு மார்க் வாங்கினால் டபுள் பிரமோஷனா தரப்போறீங்க?" என்று கேட்டேன். "நீ திருந்தவே மாட்டே!" என்று ஆசிர்வாதம் செய்தார் கணித ஆசிரியர்.

நாகேஷ்

• நன்றி: ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்



பரீட்சை எழுதிவிட்டு, நேரே போனது சினிமா தியேட்டருக்குத்தான். பார்த்த படம்: ராம ராஜ்ஜியம்.

இரண்டாவது வருடம், இறுதிப் பரீட்சைக்கு முன்பு செலக்ஷன் தேர்வு என்று ஒரு பரீட்சை நடத்துவார்கள். அந்த செலக்ஷன் பரீட்சை கால அட்டவணையை அறிவித்தார்கள். பரீட்சைக்கு என்னை நான் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தேன். பாஸ் பண்ணினால் போதும்; பாஸ் மார்க் வாங்குவது ஒன்றும் கஷ்டமான காரியமில்லை, என்ற எண்ணமே எனக்குள் மேலோங்கி இருந்தது.

பரீட்சைக்கு இன்னும் நாலே நாள்தான். அன்றைக்கு, என் அண்ணி கடைத் தெருவுக்குப் போய் காய்கறி வாங்கிக் கொண்டு வரும்படிச் சொன்னார். பஸ் பிடித்து மார்க்கெட்டுக்குப் போனேன். பாதி வழியில் உடம்பு ரொம்ப கொதிப்பது போல உணர்ந்தேன். தலை சுற்றுவது போல இருந்தது. பஸ்ஸை விட்டு இறங்கினேன். வாந்தி வந்தது. மார்க்கெட்டுக்குப் போகாமலேயே, வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டேன்.

''என்ன வெறும் கையோட வர்றே? காய்கறி வாங்கிட்டு வரலையா?''ன்னு அண்ணி கேட்டார்கள்.

''இல்லை... எனக்கு உடம்பை என்னவோ பண்ணுது; கொஞ்சம் படுத்து, ரெஸ்ட் எடுத்துக்கிட்டா தேவலைன்னு தோணுது'' என்றேன். ஆனால் என் உடம்பு பட்ட பாடு எனக்குத்தான் தெரிந்ததேயொழிய, மற்றவர்கள் யாரும் அதை உணரவில்லை. அப்போது படுத்தவன்தான். நாலு நாட்களுக்கு எழுந்திருக்கவே இல்லை. நூற்று நாலு, நூற்று ஐந்து டிகிரி வரை ஜுரம் இருந்தது.

எனக்கு அம்மை போட்டிருக்கும் விஷயமே, நாலு நாட்கள் கழித்துத்தான் தெரிந்தது. சாதாரணமாக வருகிற மாதிரி இல்லாமல், தலையில் தொடங்கி கால் வரை உடம்பு முழுக்க அம்மை போட்டது. எனக்கு அம்மை போட்டிருப்பது தெரிந்தவுடன், அதற்குரிய சிகிச்சை, பத்தியம் எல்லாம் ஆரம்பமானது.

அம்மைபோட்டு குணமாகி உதிர்ந்த பொட்டுகளைத் திரட்டி எடுத்துக் கொண்டு போய், தோட்டத்தில் ஒரு தென்னை மரத்தடியில் இருந்த பள்ளத்தில் கொட்டுவார்கள். ஒரு கட்டத்தில் அந்தக் குழியே நிரம்பும் நிலை ஏற்பட்டு விட்டது என்றால், அம்மன் என் உடம்பில் எந்த அளவுக்கு விளையாடி இருக்கிறாள் என்று புரிந்து கொள்ளலாம்.

இதிலே சோகம் என்னவென்றால், முதல் தடவை அம்மை போட்டு, அது குணமான தருவாயில், மறுபடி அம்மை போட்டு விட்டது. அது குணமடைகிறவேளையில் மூன்றாவது தடவையாக அம்மன் என் மீது ஊழித் தாண்டவமே ஆடிவிட்டாளோ, என்று சொல்லும்படியாக ஆகிவிட்டது. நான் பிழைத்ததே புனர் ஜென்மம்தான்.

இப்படி அடுத்தடுத்து மூன்று தடவை அம்மை தாக்குதல் காரணமாக என் உடம்பு மிகவும் பாதிப்புக்குள்ளாகி விட்டது. பொதுவாக பூசணிமாதிரி உடம்பு என்பதால், எனக்கு வீட்டில் செல்லப்பெயர் குண்டப்பா. நண்பர்கள் வைத்த நிக்நேம்: குண்டுராவ். ஆனால் அம்மனின் அதீத ஆசீர்வாதம் காரணமாக உடம்பு ரொம்ப இளைத்து விட்டது. இதில் சுமார் மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. அம்மையிலிருந்து எழுந்து முதல் தடவையாக என்னை நான் கண்ணாடியில் பார்த்தபோது, நான் மிகவும் அதிர்ச்சிக்குள்ளானேன். முகமெங்கும் அம்மைத் தழும்புகள். உடம்பு முழுக்கவுமே குண்டும், குழியுமாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ''ஒரு காலத்தில் இந்த முகம் எத்தனை வசீகரமாக இருந்தது! அந்த வசீகரம் மனத்துக்கு எவ்வளவு கர்வத்தைக் கொடுத்தது! இன்று உன் முகம் எப்படி இருக்கிறது என்று நீயே பார்த்துக் கொள்! இந்த முகத்துடன் நீ எப்படி வெளியில் போவாய்? நாலு பேரை நேருக்கு நேர்

நிமிர்ந்து பார்த்து இனி உன்னால் பேச முடியுமா?" என்றெல்லாம் என்னை நானே கேட்டுக் கொண்டேன். எனக்கு ஏற்பட்ட துக்கத்தை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. கைகளில் என் முகத்தைப் புதைத்துக் கொண்டு, குமுறிக் குமுறி அழு தேன்.

என்மீது ஏகமாய்ப் பாசத்தைப் பொழிந்த என் அக்கா என் நினைவுக்கு வந்தார். அவர் மடியில் நான் தலையை வைத்துக் கொள்ள, அவர் என் நீண்ட முடிகொண்ட தலையை அன்போடு தடவிக் கொடுப்பார். அந்த சுகத்தில், அப்படியே நான் பல நாட்கள் தூங்கிப் போயிருக்கிறேன். நான் சிரிக்கிற போது, என் கன்னங்களில் குழி விழுந்து, என் முகப் பொலிவு அதிகரிப்பதாக அவர் பல தடவை சொல்லியிருப்பது, என் மனத் திரையில் ஓடியது.

இரண்டு நாடகள் கழித்து, என் மனச் சுமைகளை எல்லாம் இறக்கி வைக்க வேண் டும் போல இருந்தது. என் அக்காவுக்கு ஒரு லெட்டர் எழுதினேன்.

அன்புள்ள அக்காவுக்கு,

குண்டப்பா எழுதுவது. 'நான் சிரிக்கிற போது, கன்னத்தில் குழிவிழக் கண்ட நீ, இனி நான் சிரிக்காமலேயே காண் பாய்!' என்று எழுத ஆரம்பித்த நான் கடிதத்தை எழுதி முடித்தபோது, கையெழுத் துக் கூடப் போட முடியாமல் அழுகை வந்து, கண்ணீர்த் துளிகள் கடிதத்தில் தெறித்தன.

அப்புறம் என்ன? அம்மை போட்டதில் செலக்‌ஷன் பரீட்சையும், அதனைத் தொடர்ந்து நடந்த ஃபைனல் பரீட்சையும் எழுத முடியாமல் போனது.

நான் உடல் ரீதியாக மட்டுமின்றி, மனோரீதியாகவும் வலுவிழந்து போனேன். 'அடுத்தது என்ன?' என்ற கேள்வி என் முன்னே எழுந்து நின்றது.

ஒரு நாள், அப்பா "அடுத்து என்ன செய்வதாகத் திட்டம்?" என்று கேட்டார்.

"நான் உங்க வார்த்தைக்குக் கட்டுப்பட்ட வனில்லையா! நீங்க சொல்றாற்போலவே ஆகிவிடுவேன்னுதான் நினைக்கிறேன்."

"என்ன சொல்கிறாய்?"

"நீங்கதான் அடிக்கடி சொல்வீங்களே; நான் உருப்படவே மாட்டேன்னு. அது மாதிரியே ஆகவேண்டியதுதான்" என்றேன் ரொம்ப யதார்த்தமான தொனியில்.

(தொடர்ந்து சிரிப்பேன்)

விவேக் சம்பளம் குறைய ஒரு ட்ரிக்!

மிமிக்ரி செய்து இலேசாகக் கிச்சுக்கிச்சு மூட்டிய கலாபவன் மணிக்கு காமெடியில் தொய்வு ஏற்படவே, வில்லனாகவாவது ஒரு ரவுண்ட் அடிக்கலாம் என்று திட்டமிட்டார். ஆனால் அதுவும் போணியாகவில்லை. மீண்டும் காமெடிக்கே எல்லோரும் கூப்பிட காமெடி + வில்லத்தனம் கலந்து ஒரு தினுசாக ஒப்பேற்றி வந்தவர், லேட்டஸ்டாக விவேக், கருணாஸ் வரிசையில் ட்ராக் காமெடியிலும் இறங்கிவிட்டாராம்.

இப்படியாவது விவேக் சம்பளம் குறையாதா என்று தயாரிப்பாளர்கள் ஏங்குவதாகக் கேள்வி!

தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டுமா? கோடம்பாக்கத்தில் எதுவும் நடக்கும்.

— ஜெ



ஆசையா இருக்கா இங்கிலீஷ் பேச?



இங்கிலீஷ்ல பேசணும்னு ஆசையாத் தான் இருக்கு. ஆனால்... ஏதாவது தப்பா பேசிடுவோமோன்னு பயமா இருக்கு. இதுதானே உங்க ப்ராப்ளம்?

இனி NO PROBLEM!

விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்டின் **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில்** சேர்ந்து நீங்கள் ஈஸியாக இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொள்ளலாம்.

இனிய தமிழ் விளக்கங்களுடன் எளிய முறையில் அமைக்கப்பட்டுள்ள **ஸ்போக்கன் இங்கிலீஷ் கோர்ஸ்** பாடங்களை, உங்களது ஓய்வு நேரத்தில் தினசரி அரைமணி நேரம் படித்து, பிராக்டிஸ் செய்தால் போதும். தயக்க மின்றி இங்கிலீஷில் சரளமாகப் பேச ஆரம்பித்து விடுவீர்கள்.

கடந்த **22** ஆண்டுகளில் **15** லட்சத் திற்கும் மேற்பட்டவர்கள் இப்பயிற்சி யின் மூலம் பயனடைந்துள்ளனர்.

சரளமாக இங்கிலீஷ் பேச வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் இப்பயிற்சியின் மூலம் நிச்சயம் நிறைவேறும்.

எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும்!

இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில்** சேர்ந்து, சரளமாக இங்கிலீஷ் பேசப் பயிற்சி பெறலாம்.

இலக்கணம் மற்றும் உரையாடல் பயிற்சிப் பாடங்கள் அடங்கிய இக் கோர்ஸின் கட்டணம் ரூ. 395/- மட்டுமே.

அடிப்படையிலிருந்தும் ஆரம்பிக்கலாம்!

இங்கிலீஷ் வார்த்தைகளை எழுதப் படிக்க இயலாதவர்கள் அடிப்படையி லிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தை களை ஸ்பெல்லிங் மிஸ்டேக் இல்லாமல் எழுதப் படிக்க கற்றுக்கொண்டு இங்கிலீஷில் மிகச் சரளமாகப் பேசப் பயிற்சி பெறலாம்.

அடிப்படை மற்றும் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸின் கட்டணம் **ரூ. 525/-** மட்டுமே.

கீழே உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்களை **V.P.P.** மூலம் உடனே அனுப்பு கிறோம். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள். பாடங்களை தினசரி அரைமணி நேரம் பிராக்டிஸ் செய்து மடமடவென இங்கிலீஷில் பேச ஆரம்பியுங்கள்.

இதோ கூப்பன்

☐ நான் விவேகானந்தாவின் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை **V.P.P.**யில் அனுப்புங்கள். ரூ. **395/-** செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

☐ நான் அடிப்படை (Basic) மற்றும் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை **V.P.P.**யில் அனுப்புங்கள். ரூ. **525/-** செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

(தேவையான கட்டத்தில் ☑ குறியிடுங்கள்)

AMR

பெயர் : ....

முகவரி : ....

....

..............................பின்கோடு..............................

விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்
9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

06 / TAM / 03 / NAGA

கூப்பனை 15 நாட்களுக்குள் அனுப்பிப் பாடங்களுடன் 416 பக்கங்கள் கொண்ட இங்கிலீஷ் - தமிழ் டிக்ஷ்னரி ஒன்றினைப் பரிசாகப் பெறுங்கள்.

'ரொம்ப நாளாச்சு
ராஜா - ராணி கதை படிச்சு'
என்று சொல்லுற வாசகர்களுக்கு
இதோ ஒரு கதை, பாருங்க படிச்சு!

ஒரே ஒரு ஊர்ல ஒரே ஒரு ராஜா.
அதே ஊர்லே ஒரே ஒரு கடற்கரை.
கடற்கரை ஓரத்துலே
ஒரே ஒரு மூக்கழகி சிலை.

மூக்கழகி சிலை இருந்தா
மோசமாம் ராஜாவுக்குன்னு
சோசியம் சொன்னார்
சோழி குலுக்கிப் போட்டு!

'தூக்குடா மூக்கழகி சிலையை'ன்னு
உடனே ராஜா உத்தரவு போட்டார்.
மூக்கழகி சிலை மூலைக்குப் போச்சு,
ராஜாவுக்கு ஒரே சந்தோஷமாச்சு.

''கடற்கரையிலே மேடைபோட்டு
காச்மூச்னு கத்துறார் பலர்;
காது கொடுத்துக் கேக்க முடியலியே ராசா''ன்னு
காதுங்காதும் வச்ச மாதிரி காவலாளிங்க
சொல்லலே -

''தூக்குடா மேடையை'' இன்னார் ராஜா.
''போக்கிரிங்க கூடுற தலமாப் போச்சு;
தூக்கிரிங்க பேசுற தலமாப் போச்சு;
இடிச்சுப் போடுங்க''ன்னார் ராவோடு ராவா!


ராஜா சொல்லைத் தட்டலாமா?
மேடையை இடிச்சாங்க மேலதிகாரிங்க.
'ஆகா, யாருமிங்க இனி பேசமாட்டாங்க!'ன்னு
ராஜாவுக்கு ஒரே சந்தோஷமாச்சு.

ஆனா பாருங்க, அரண்மனை ஆளுங்க
அத்தனை பேருக்கும் ஒரே கவலை. அடுத்து,
'கடலைப் பாயாச் சுருட்டி எறி'ன்னா?
கடவுளே வந்தாலும் முடியுமா சொல்லுங்க!

ஒரே ஒரு ஊர்ல ஒரே ஒரு ராஜா....



சாருகேசி





சிவகாமியின் சபதம்

இருபத்தோராம் அத்தியாயம்

புலிகேசியின் கலைமோகம்

அமரர் கல்கி

புலிகேசிச் சக்கரவர்த்தி வாதாபியில் இல்லை, – அஜந்தாவுக்குப் போயிருக்கிறான் என்று குண்டோதரன் கூறிய செய்தி அங்கிருந்த நால்வருக்கும் வியப்பையும் குதூகலத்தையும் அளித்தது என்பது அவர்கள் வாயிலிருந்து வந்த விநோதமான சப்தங்களிலிருந்து தெரியவந்தது.

"ஆஹாஹோஹோ!"

"ஓஹ்ஹோ!"

"ஹேஹேஹே!"

"சே சே சே!"

என்றெல்லாம் அர்த்தமில்லாத ஓசைகளை வெளியிட்ட பிறகு, ஏக காலத்தில் நால்வரும் குண்டோதரனைப் பார்த்து, "நிஜந்தானா?" "உண்மையா?" "அஜந்தாவுக்கா போயிருக்கிறான்?" "புலிகேசிக்கு அஜந்தாவில் என்ன வேலை?" என்று சரமாரியாகக் கேள்விகளைப் பொழிந்தார்கள்.

அப்போது மாமல்லர், "இப்படி எல்லோருமாகக் குண்டோதரனைத் துளைத்தால், அவன் எப்படி மறுமொழி சொல்லுவான்? கொஞ்சம் சும்மா இருங்கள். குண்டோதரா! உன் பிரயாணத்தைப் பற்றிய விவரங்களை ஆதியோடந்தமாகச் சொல்லு!" என்றார்.

குண்டோதரன் சக்கரவர்த்தியைப்

பணிந்து விட்டுக் கூறினான்: "பல்லவேந்திரா! இந்த ஏழை சந்தேகமறத் தெரிந்து கொண்டு வந்த உண்மையைத்தான் கூறினேன். புலிகேசிச் சக்கரவர்த்தி அஜந்தாவுக்குத்தான் போயிருக்கிறார். யாரோ சீனாவிலிருந்து ஒரு யாத்திரிகன் வந்திருக்கிறானாம். அவன் பெயர் என் வாயில் நுழையவில்லை. ஹியூன் சங்' என்று சொன்னார்கள். அவன் உத்தர தேசத்தில் கன்யாகுப்ஜம், காசி, கயா முதலிய க்ஷேத்திரங்களையெல்லாம் பார்த்துவிட்டு வந்தானாம். கன்யாகுப்ஜத்தில் ஹர்ஷ சக்கரவர்த்தியின் ஆட்சி மகிமையைப் பற்றி அவன் வர்ணித்தானாம், ஹர்ஷ சக்கரவர்த்திக்குத் தான் குறைந்து போய் விடவில்லையென்று வாதாபிச் சக்கரவர்த்தி அந்த யாத்திரிகனைத் தானே நேரில் அழைத்துக் கொண்டு அஜந்தாவின் சிற்ப சித்திர அதிசயங்களைக் காட்டுவதற்காகப் போயிருக்கிறாராம்! பிரபு! இப்போதெல்லாம் புலிகேசிச் சக்கரவர்த்திக்குக் கலைகளிலே ரொம்ப மோகமாம்! வாதாபியிலுள்ள பாறைகளையெல்லாம் குடைந்து மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் போல் அமைத்துக் கொண்டிருக்கிறாராம்! நமது தொண்டை மண்டலத்திலிருந்து கைகால்களை வெட்டாமல் சிறைப்பிடித்துக் கொண்டு போன சிற்பிகள் சிலர் அந்தப் பாறைகளில் வேலை செய்வதை நானே பார்த்தேன். ஆனால், ஒரு வேடிக்கையைக் கேளுங்கள். அந்தச் சீன யாத்திரிகன் ஹியூன் சங்கைப் புலிகேசி மேற்படி சிற்பப் பாறைகளுக்கு அழைத்துச் சென்று காட்டிய போது, 'இந்தப் பாறைச் சிற்பங்களைப் பார்த்துவிட்டுத்தான் காஞ்சி மகேந்திர பல்லவன் மாமல்லபுரத்தில் இதே மாதிரி செய்யப் பிரயத்தனப்பட்டான்! அவனுக்கு நல்ல புத்தி கற்பித்து விட்டு வந்தேன்!' என்றானாம். இதைப் பற்றிக் கேட்டபோது எனக்கு என்னமாயிருந்தது, தெரியுமா? இரத்தம் கொதித்தது! வாதாபி நாற்சந்தியில் உள்ள ஜயஸ்தம்பத்தில் காஞ்சி மகேந்திர பல்லவரை வாதாபிப் புலிகேசி புறங்கண்டதாக எழுதியிருக்கும் பொய்யும் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. பிரபு! இதற்கெல்லாம் காலம் இன்னும் மூன்று மாதந்தானே என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு திரும்பி வந்தேன். வாதாபியில் யுத்த ஏற்பாடுகள் ஒன்றுமே நடக்கவில்லை. இந்த வருஷம் நம்முடைய படையெடுப்பை அவர்கள் எதிர்பார்க்கவே இல்லையாம்! வாதாபிச் சைனியம் வடக்கே நர்மதைக் கரையிலும் கிழக்கே வேங்கியிலுமாகச் சிதறிக் கிடக்கிறது!"

இவ்விதம் குண்டோதரன் சொல்லிச் சற்று நிறுத்தியதும், மாமல்லர் பரஞ்சோதியைப் பார்த்து, "சேனாதிபதி! பார்த்தீரா? நம் சத்ருக்னனுடைய யுக்தி இவ்வளவு நன்றாகப் பலிக்கும், என்று நாம் கூட எதிர்பார்க்கவில்லையல்லவா?" என்றார்!


சத்ருக்னன் அப்போது பணிவான குரலில், "பல்லவேந்திரா அடியேனுடைய யுக்தி என்று ஏன் சொல்லுகிறீர்கள்! தாங்களும் சேனாதிபதியும் சேர்ந்து தீர்மானித்ததைத்தானே நான் நிறைவேற்றினேன்!" என்றான்.

அதற்குச் சேனாதிபதி பரஞ்சோதி, "சத்ருக்னர் சொல்வது உண்மைதான்! எல்லாம் மகேந்திர பல்லவரிடம் நாம் மூவரும் கற்றுக் கொண்டதுதானே? இந்த யுத்தத்திலே நாம் ஜயம் பெற்றோமானால் அதனுடைய பெருமை முழுவதும் விசித்திர சித்தருக்கே சேர வேண்டியது!" என்றார்.

"சேனாதிபதி! 'யுத்தத்தில் ஜயம் பெற்றோமானால்... என்று நீங்கள் சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். ஜயத்தைப் பற்றி என்ன சந்தேகம் இருக்கிறது? ஆனால், எந்த 'யுக்தி'யைப் பற்றி நீங்கள் எல்லோரும் பேசுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. தயவு செய்து சொன்னால் தேவலை!" என்றான் ஆதித்தவர்மன்.

"அப்படிக் கேள், தம்பி! அதைச் சொன்னால் மகேந்திர பல்லவர் எங்களுக்கு அளித்த பயிற்சி இப்போது எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வாய். சென்ற ஒன்பது வருஷமாக நானும் சேனாதிபதியும் இந்தப் படையெடுப்புக்காக ஆயத்தம் செய்து வந்தபோது, சத்ருக்னனுடைய ஒற்றர் படையும் மிகத் திறமையாக வேலை செய்து வந்தது. நம் ஒற்றர் படையிலே சிலர் சத்ருக்னனுடைய தூண்டு

தலின் பேரில் நம் யுத்த ரகசியங்களை வாதாபிச் சக்கரவர்த்திக்கு விற்பனை செய்யத் தொடங்கினார்கள். முதலில் சில காலம் உண்மையான தகவல்களையே அனுப்பிக் கொண்டிருந்தபடியால் புலிகேசிக்கு நம்பிக்கை ஏற்பட்டது. மூன்று வருஷத்துக்கு முன்னால், 'இந்த வருஷம் பல்லவ சைனியம் வாதாபியின் மேல் படையெடுத்து வரப் போகிறது' என்று செய்தி போயிற்று. புலிகேசி அதை நம்பிப் பெரிய ஆயத்தங்கள் செய்திருந்தான். ஆனால், பல்லவ சைனியம் வராமல் ஏமாந்தான். இப்படியே மூன்று வருஷம் ஏமாந்த பிறகு புலிகேசி கோபங் கொண்டு பழைய ஒற்றர்களையெல்லாம் தள்ளி விடச் செய்தான். புதிய ஒற்றர்கள் இந்த வருஷத்தில், வாதாபிமேல் படையெடுக்கும் உத்தேசமே இங்கு இல்லை என்றும், மானவன்மனுக்கு இலங்கையைப் பிடித்துக் கொடுப்பதற்காகவே பல்லவ சைனியம் சேகரிக்கப்படுகின்றதென்றும் செய்தி அனுப்பினார்கள். புலிகேசி மேற்படி செய்தியைப் பூரணமாய் நம்பி விட்டான் என்று முன்னமே தெரிந்து கொண்டாம். துங்கபத்திரை நதிக்கரையிலிருந்த சளுக்க





சைனியத்தை நர்மதைக்கும் வேங்கிக்கும் பகிர்ந்து அனுப்பி விட்டதாகவும் அறிந்தோம். இப்போது குண்டோதரன் சொல்வதிலிருந்து, புலிகேசியே அஜந்தாவுக்குப் போயிருக்கிறான் என்று தெரிகிறது. சத்ருக்னனின் யுக்தி பலித்திருக்கிறது அல்லவா?"

இப்படி மாமல்லர் கூறி முடித்ததும், "பல்லவேந்திரா! இலங்கை இளவரசர் இந்த வகையிலும் நமக்குப் பேருதவி செய்திருப்பதாகத் தெரிகிறதே! மாணவன்மர் காஞ்சியில் வந்து இருந்ததனால்தானே புலிகேசியின் கண்ணில் சத்ருக்னன் இவ்வளவு நன்றாக மண்ணைத் தூவ முடிந்தது!" என்றான் ஆதித்தவர்மன்.

சமணர்களால் மனம் குழம்பிப் போயிருந்த குமார பாண்டியனை மதுரைக்குத் திருப்பி அனுப்பி விட்டுப் பாண்டிய சைனியத்தைப் போருக்கு அழைத்துக் கொண்டு வருகிறாரே, அந்த உதவிதான் சாமான்யப்பட்டதா?" என்றான் சத்ருக்னன்.

அப்போது மாமல்லர் கடுமையான குரலில், "மானவன்மன் என்னதான் நமக்கு உதவி செய்திருக்கட்டும்; அவன் என்னை ஏமாற்றிய காரியத்தை என்னால் மறக்கவே முடியாது; மன்னிக்கவும் முடியாது!" என்றார்.

"பல்லவேந்திரா! இது என்ன? தங்களை இலங்கை இளவரசர் எந்த விஷயத்தில் ஏமாற்றினார்?" என்று சேனாதிபதி கேட்டார்.

"மானவன்மன் நம்மோடு வாதாபிக்கு வரக் கூடாது என்பதற்கு, ஒரு முக்கியமான காரணம் அவனுக்கு நான் சொன்னேன். போர்க்களத்தில் அவன் ஒரு வேளை வீர சொர்க்கம் போகும்படி நேர்ந்து விட்டால், இலங்கை இராஜ வம்சம் சந்ததி அற்றுப் போய்விடும்; ஆகையால் அவன் வரக் கூடாது என்று சொல்லியிருந்தேன். இந்த விஷயத்திலேதான் மானவன்மன் என்னை ஏமாற்றி விட்டான்!" என்றார் சக்கரவர்த்தி.

"இதில் ஏமாற்றுவதற்கு என்ன இருக்கிறது?" என்றான் ஆதித்தவர்மன்.

"நாம் புறப்பட்டு வந்த ஒரு வாரத்துக்குள் இலங்கை இராஜ வம்சத்துக்குச் சந்ததி ஏற்பட்டு விட்டது! மானவன்மனுடைய மனைவி நாம் புறப்படும் போது பத்து மாதக் கர்ப்பிணியாம். நாம் புறப்பட்ட ஐந்தாம் நாள் அவளுக்கு ஆண் குழந்தை பிறந்ததாம்! இந்த விஷயத்தில் சத்ருக்னன் கூட எனக்கு உண்மையைத் தெரியப்படுத்தாமல் இருந்து விட்டான்!" என்று மாமல்லர் கூறுவதற்குள்ளே சேனாதிபதி உள்பட எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்.

இதற்கிடையில் "ஓஹோ! இப்போது தெரிந்தது!" என்றான் குண்டோதரன்.

"உனக்கு என்ன தெரிந்தது இப்போது புதிதாக?" என்று மாமல்லர் கேட்டார்.

"பிரபு! அதோ அந்த அரச மரத்தில் நான் ஏறி இருந்த போது தெற்கே ஒரு பெரிய புழுதிப்படலம் தெரிந்தது. ஏதோ படை திரண்டு வருவது போல் தோன்றியது. 'எந்த சைனியம் இப்படிச் சக்கரவர்த்திக்குப் பின்னால் வருகிறது?' என்று யோசித்தேன். தாங்கள் பேசிக் கொள்வதிலிருந்து இலங்கை இளவரசர் தான் பாண்டிய சைனியத்துடன் அவசரமாக வருகிறார் என்று தெரிந்தது" என்றான் குண்டோதரன்.

"ஓஹோ! அதற்குள் வந்து விட்டானா?" என்று மாமல்லர் கூறியபோது நிலா வெளிச்சத்தில் அவருடைய முகமலர்ச்சி நன்றாகத் தெரிந்தது. பிறகு அவர் பரஞ்சோதியைப் பார்த்து, "சேனாதிபதி! ஆகக் கூடி, நீங்கள் எல்லாரும் என்னதான் சொல்கிறீர்கள்! மானவன்மனுடைய தவறை மன்னித்து அவனையும் நம்மோடு அழைத்துப் போக வேண்டும் என்று சொல்கிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆம், பிரபு! அழைத்துப் போக வேண்டியதுதான்!" என்று சேனாதிபதி கூறிய குரலில் ஓரளவு தயக்கம் இருக்கத்தான் செய்தது.

"அப்படியானால் ஒன்று செய்யுங்கள். நீங்கள் மூவரும் கொஞ்சம் முன்னால் நதியைக் கடந்து சென்று இன்றிரவு சைனியம் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனியுங்கள். நானும் குண்டோதரனும் இங்கேயே இருந்து மானவன்மனை அழைத்து வருகிறோம். குண்டோதரனிடம் நான் கேட்க வேண்டிய சில விஷயங்களும் இருக்கின்றன" என்று மாமல்லர் கூறவும், குறிப்பறியும் ஆற்றல் வாய்ந்த அறிவாளிகளாகிய

மற்ற மூவரும் உடனே கிளம்பிச் சென்று, நதியில் அவர்களுக்காகக் காத்திருந்த படகில் ஏறிக் கொண்டார்கள்.

அவர்கள் சென்றதும் மாமல்லர் குண்டோதரனை ஏறிட்டுப் பார்த்தார்.

மெல்லிய குரலில் குண்டோதரன், "பல்லவேந்திரா! வாதாபியில் ஆயனரின் குமாரியைப் பார்த்தேன். சௌக்கியமா யிருக்கிறார். நம்முடைய வரவை இரவும் பகலும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்றான்.

"அந்தப் பாதகியின் சௌக்கியத்துக்கு என்ன குறைவு? சௌக்கியத்தையும் சாந்தத்தையும் இழந்து தவிப்பவன் நான் அல்லவா?" என்று நரசிம்மவர்மர் முணு முணுத்தார்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

பவளமல்லி மலர்ந்தது

வாதாபி மாளிகையில் சிவகாமி சௌக்கியமாகத்தான் இருந்தாள்.

அதாவது அவளுடைய தேகம் சௌக்கியமாக இருந்தது.

ஆனால், அவளுடைய உள்ளமோ ஒரு க்ஷணமேனும் சாந்தி காணாமல் அமைதி இன்றி அலைந்து கொண்டிருந்தது.

வருஷங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து போய்க் கொண்டிருந்தன.

ஒவ்வொரு வருஷமும் வசந்தம், வேனில் முதலிய பருவ காலங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.

வருஷங்களையும், பருவ காலங்களையும் கணக்கிடுவதற்குச் சிவகாமி ஒரு வழி கண்டுபிடித்திருந்தாள்.

அவள் வசித்த மாளிகையின் பின் முற்றத்தில் கிணற்றின் அருகில் ஒரு பவள மல்லி மரம் இருந்தது.

சிவகாமி வாதாபிக்கு வந்த வருஷத்திலே அந்தப் பவளமல்லிச் செடியை அவள் தன் கையாலேயே கிணற்றின் அருகில் நட்டாள்.

நாகநந்தி அடிகள் அஜந்தா மலைப் பிராந்தியத்தைப் பற்றி வர்ணனை செய்த போது, அந்தப் பிரதேசத்தில் ஆவணி, புரட்டாசி மாதங்களில் கணக்கில்லாத பாரிஜாத மரங்கள் புஷ்பித்துக் குலுங்கும் என்றும், அந்த நறுமலர்களின் இனிய மணம் நெடுந்தூரம் காற்றிலே பரவி அந்தப் பக்கம் வருவோர்க்கெல்லாம் இன்ப போதையை உண்டாக்கும் என்றும் சொன்னார். அதைக் கேட்ட சிவகாமி அந்தச் செடிகளில் ஒன்றைத் தனக்காகக் கொண்டு தர வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

அவளுடைய வேண்டுகோளைக் கட்டளையாக மதித்த புத்த பிக்ஷு சீக்கிரத்தில் அஜந்தா மலைப் பிராந்தியத்திலிருந்து பவள மல்லிச் செடி ஒன்று தருவித்துக் கொடுத்தார்.

அந்தச் செடியை சிவகாமி நட்டுக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்தாள். கண்ணீருடன் தண்ணீரும் விட்டு வளர்த்து வந்தாள்.

அந்தப் பவளமல்லிச் செடியில் முதன் முதலில் இளந்தளிர் விட்ட போது சிவகாமியின் உள்ளம் துள்ளிக் குதித்தது. புதிய கிளை ஒன்று கிளம்பிய போது, துயரத்தால் வெதும்பிய அவள் உள்ளம் குதூகலத்தினால் பொங்கியது. முதன் முதலில் அந்தச் செடியிலே மொட்டு அரும்பிய போதும் அது பூவாக மலர்ந்த போதும் சிவகாமி சிறிது நேரம் தன் துயரங்களையெல்லாம் மறந்து ஆனந்தக் கடலில் மிதந்தாள். கிளி மூக்கின் வடிவமான அதன் அழகிய இதழ்களையும், செம்பவள நிறம் கொண்ட காம்பையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள்.


"நேரம் ஆக ஆக, சூரியன் வான மார்க்கத்தில் ஏற ஏற, அந்த மெல்லிதழ் மலர் வரவர வாடிச் சுருங்கிக் கடைசியில் கருகி





அருள்வாக்கு

பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றுக்கும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறது. அப்படி அவை நியதிப்படி



நடப்பதால்தான் உலக வாழ்க்கை நடக்க முடிகிறது. இல்லாவிட்டால் எல்லாம் தெறிகெட்டுப் போய் விடும். அதாவது லோகத்திலுள்ள சமஸ்த ஜீவராசிகளும் சௌக்கியமாக வாழ வேண்டும் என்கிற அன்பான எண்ணத்திலேயே அவை ஒன்றோடொன்று ஒத்துப் போவதற்காக இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு தர்மம், நியதி (law) ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தன் குழந்தைகளை வெயில் படாமல் மழை படாமல் காப்பாற்ற வேண்டும், அவர்களுக்கு இளவெயிலின் வெப்பம் தேவையாக இருக்கிற போது அதைத் தந்து அரவணைக்க வேண்டும் என்கிற அன்பு ஈசுவரனுக்கு இருப்பதால் அதற்கு அநுசரணையாக இயற்கையை நடத்தி வைத்து மரங்களுக்கு ஒரு நியதியை – தர்மத்தைத் தந்திருக்கிறார்.

இந்த அன்பைப் பெற நமக்கு யோக்ய தாம்சம் வேண்டாமா? வேண்டும். மரத்துக்கும் மட்டைக்கும் இருக்கிற நியதி நமக்கும் உண்டு. லோக க்ஷேமத்துக்காக அதை நாம் நடத்திக் காட்டுகிற போதுதான் ஈசுவரனின் அன்பைப் பெற பாத்தியதை கேட்கலாம். மனிதனுக்காக உள்ள இந்த நியதிக்கே தர்மம் என்று பெயர். இந்த நியதியை மீறவும் மனிதனுக்கு மூளையைத் தந்து ஸ்வாமி விளையாட்டுப் பார்க்கிறார். அந்த மூளையை வைத்துக் கொண்டு இவனும் எதை எதையோ சௌக்கியமாக நினைத்துக் கொண்டு, அவற்றுக்காக அலைகிறான்; இதில் தனக்கான தர்மத்தையும் மீறுகிறான். ஆனால் இறுதியில் சௌக்யத்தைத் தருவது தர்மமே.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

உதிர்ந்த போது, தற்காலிகமாகக் குளிர்ந்து தளிர்த்திருந்த அவளுடைய இருதயமும் வாடிக் கருகித் தீய்ந்தது.

செடி நன்றாக வேரூன்றிக் கிளைத்துத் தழைத்த பிறகு அதைக் கவலையுடன் பராமரிக்கும் வேலை சிவகாமிக்கு இல்லாமல் போயிற்று. அந்தச் செடியைக் கொண்டு பருவங்களையும் வருஷங்களையும் சிவகாமி கணக்கிட்டு வரத் தொடங்கினாள்.

மனிதர்களின் எலும்பு வரை குளிரச் செய்த பனிக் காலத்தில் அந்தப் பவள மல்லிகை மரத்தின் இலைகள் எல்லாம் காய்ந்து உலரத் தொடங்கும். இளவேனிற் காலத்தில் புதிய இளந்தளிர்கள் துளிர்க்கத் தொடங்கும், முதுவேனிற் காலத்தில் இலைகள் முற்றுவதோடு மொட்டுகளும் அரும்ப ஆரம்பிக்கும். உக்கிரமான மேல் காற்றோடு மழையும் கொட்டும். ஆனி, ஆடி மாதங்களில் அந்தப் பவளமல்லிச் செடி பேயாட்டம் ஆடிப் படாத பாடு படும். அதைப் பார்க்கவும் சகிக்காமல் சிவகாமி வீட்டுக்குள்ளேயே பித்துப் பிடித்தவள் போல் உட்கார்ந்திருப்பாள். ஆவணி, புரட்டாசி மாதங்களில் அந்தப் பவளமல்லிகைச் செடி, பச்சைப் பசேல் என்ற இலைகளை அடியோடு மறைத்து விடுவதற்குப் போட்டி போடும் மலர்கள் குலுங்கப் பெற்று விளங்கும். அந்தக் காலங்களில் சிவகாமி முற்றத்தில் படிக்கட்டின் மீது உட்கார்ந்து அந்தச் செடியை வெகுநேரம் பார்த்துக் கொண்டிருப்பாள். நவராத்திரியின் போதும் விஜயதசமி அன்றைக்கும் தமிழகத்தின் ஆலயங்களில் விக்கிரகத்துக்குப் பவளமல்லி மலர்களைக் கொண்டு புஷ்பப் பாவாடை அலங்காரம் செய்வார்கள் என்பதை நினைவுகூர்வாள். அதோடு தான் வாதாபிக்கு வந்து ஒரு விஜயதசமி ஆயிற்று என்றும் கணக்கிடுவாள்.

இவ்வாறு கணக்கிட்டு வந்ததில், சிவகாமி வாதாபி நகரத்துக்கு வந்து, இப்போது ஒன்பது வருஷங்கள் ஆகி விட்டன!

(தொடரும்)

Saraswati

சுலபமான கல்விக் கடன் திட்டம்



உங்களின் கல்விக் கனவுகளை நனவாக்க...

இலட்சியத் தாகம் கொண்ட படிக்கும் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது இந்த திட்டம். இந்த அரிய கடன் திட்டம் மூலம் பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduation) மற்றும் தொழில் வல்லுனர் படிப்புகளை (Professional Courses) இந்தியாவிலும் வெளிநாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்கள்/பல்கலைக்கழகங்களில் படிக்கலாம். விரிவுரைக் கட்டணம் (Tuition Fees), விடுதிக் கட்டணம் (Hostel Fees), புத்தகச் செலவுகள், தேர்வுக் கட்டணம், விமானப் பயணக் கட்டணம் (வெளிநாடு சென்று படிப்பதாக இருந்தால்) ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

- அதிகபட்ச கடன் தொகை : இந்தியாவில் படிக்க ரூ.7.5 லட்சம் மற்றும் வெளிநாடுகளில் படிக்க ரூ.15 லட்சம்.
- கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் : 5 முதல் 7 ஆண்டுகள்.
- கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்

இன்றே உங்கள் அருகாமையில் உள்ள கிளையை அணுகுவீர்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

FORTUNE-CH

Bharat Overseas Bank Ltd.

A bank owned by 7 banks.

H.O: Habeeb Towers, 196, Anna Salai, Chennai 600 002. Tel: 2852 2983, 2852 0748.
E-mail : help@bharatoverseasbank.com Visit us at : www.bharatoverseasbank.com

We'll be with you, right through

ஜி. கிருஷ்ணமூர்த்தி



• சகல தேசர்!

நீங்கள் கேட்டவை —தராசு

● தருமரேசன், காவல்
கிணறுபுதூர்.

? தமிழக முதல்வரின் நடவடிக்கைகளைத் தாமும் பின்பற்றப் போவதாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறியிருப்பது பற்றி...?

! முன்னோடிகளைப் பின்பற்றுவதில் இரு வகை உண்டு. ஈயடிச்சான் காப்பி ஒரு வகை; அவர்கள் செய்த தவறுகளை உணர்ந்து, தவிர்த்து, நல்லதை மட்டும் பின்பற்றுவது இரண்டாவது வகை. நாயுடு கெட்டிக்காரர் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்... பார்ப்போம்!

● பொன்விழி, அன்னூர்.

? வளவள எனப் பேசுபவர்களைக் கண்டு என்ன செய்வீர்...?

! உங்களுக்குக் கேட்க நேரமிருக்கிறது என்று தெரியும் போதுதான் உங்களிடம் வளவளாக்கள் வருவார்கள். 'பிஸி'யாக இருந்தால், அல்லது அப்படி நடிக்கவேனும் செய்தால், கட் அண்ட் டிரையாக விஷயத்தைக் கூறி முடித்து விடுவார்கள்!

● லெட்சுமி மாரியப்பன்,
புதுக்கோட்டை.

? நான்கடி உயர ஜெயலலிதா உருவச் சிலை உருவாக்கி, கோயில் கட்டி, அபிஷேக ஆராதனை செய்யப் போகிறார்களாமே...?

! அதில் ஆச்சர்யமில்லை; இப்படியெல்லாம் செய்யக் கூடாது என்று சொல்ல ஆளில்லாமல் போனதுதான் தமிழகத்தின் துரதிர்ஷ்டம்.

● கே.கணேசன், சென்னை - 16.

? 'ஒரே நேரத்தில் பார்லிமெண்ட்டுக்கும் சட்ட சபைக்கும் தேர்தல் நடத்த பத்து லட்சம் போலீஸ் தேவைப்படும். இவ்வளவு போலீஸுக்கு நாம் எங்கே



• அம்மா வழியில்...



• கிண்டல் கமிஷனர்!

போவது? பாகிஸ்தானிலிருந்துதான் கொண்டு வரவேண்டும்' என்ற லிங்டோவின் கிண்டலை ரசிக்க முடிகிறதா...?

! அவர் அப்படிப் போனால், நம் அரசியல்வாதிகள் வோட்டுப் போடவே அங்கிருந்து ஆட்களைக் கூட்டி வருவாங்க..! ஆக, லிங்டோ உளவாக்கட்டிக்குக் கூட அதிகமாய்ப் பேசக் கூடாது.

● டி. சுப்ரமணியன், மேலையூர்.

? சிலப்பதிகாரத்தில் தங்களை அதிகம் கவர்ந்த கதாபாத்திரம் எது? ஏன்..?

! கவுந்தியடிகள். கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்கு அழைத்து வரும் கட்டத்தில் அவர் கூறும் வாழ்வியல் நிலைப்பாடுகள் ஒவ்வொருவருக்கும்

• அறியாமை அபிஷேகம்!

அவசியமானது.

● அ. கோவிந்தன், சந்தியூர். ❐

? தமிழக அரசின் மழை நீர் சேகரிப்புத் தொட்டி திட்டத்திற்குப் பதிலாக ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கும் ஏரி, குளங்களைப் பழுதுபார்க்கலாமே...

! டபுள் ஓ.கே. யோசனை. உள்ளூர் மக்களுக்கு வேலை கொடுத்ததுமாகும்; தூர் வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்ட இடத்தில் தண்ணீர் சேகரிப்பும் சேமிப்பும் அதிகரிக்கும். அப்படியே நகர்ப்புற ஏரிப்



'ஜெயலலிதாயிஸம்' என்பது என்ன?



பகுதிகளை வீட்டு மனை ஆக்குதல், ஆற்றுப் படுகைகளில் மணல் திருட்டு, போன்றவற்றுக்கும் டெஸ்மா ரேஞ்சில் தடைச் சட்டம் கொணர்ந்தால், தண்ணீர்ப் பிரச்னை தீரும். ஆனால், இதைப் புதிய யோசனை போல் விளம்பரப்படுத்திக் கொள்ள முடியாதே...!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21.

? 'கோலி சோடா வாழ்க; கோகா கோலா ஒழிக' என்ற புதிய கோஷம் தமிழக காங்கிரஸ் வட்டாரத்தில் கேட்கிறதே...?

! காங்கிரஸ் மட்டுமென்ன... அரசியல் ஆதாயத்துக்கு எல்லாக் கட்சிகளும்தான் கண்டிக்கின்றன. தேர்தல் நெருங்கட்டும்... நன்கொடைகளைப் பொறுத்து கோஷங்கள் மாறும்!

● எம். அசோக் ராஜா, திருச்சி - 15.

? அ.தி.மு.க. _ பா.ஜ.க. உறவு ஏற்பட்டால் யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம்?

! ஹிந்துத்வாவுக்கு லாபம்; நாட்டுக்கு நஷ்டம்!

• ஹைடெக் தரிசனம்!

● ராதா ராம ஸ்வாமி,
திருநெல்வேலி – 11.

? இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிசம் இந்தியாவில் எப்படி உள்ளது?

! தேச நலனுக்கு உகந்ததாக அமைவது தான் investigative journalism. இங்கே நடப்பது பெரும்பாலும் அடுத்தவரின் அந்தரங்கத்தை ஆராய்ந்து, அம்பலப்படுத்தும் gutter journalism தான்.



விபரீதச் சலுகை!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? ஆர்னால்ட் ஸ்வாட்ஸ்னேகர் அரசியலில் குதித்துள்ளது பற்றி...?

! புண்ணியமாய்ப் போகட்டும்; பேரைச் சுளுவா மாத்தி வைச்சுக்குங்க! நியூஸ் சொல்றவன், போடறவன் பாடு பெரிய அவஸ்தையா இருக்கு!

● ஜோ. பன்னீர் செல்வம்,
சென்னை -12.

?தேர்தல் ஆணைய அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கும் கம்பெனிகள் வரிச் சலுகை பெறலாம் என்று சட்ட அமைச்சர் அருண் ஜெட்லி கூறியுள்ளாரே, இது சரியா...?

! முக்கால் திட்டம் ஜனநாயகத்தைப் பண நாயகமாக ஏற்கெனவே மாற்றி விட்டார்கள். பாக்கி கால் பகுதியையும் மாற்றி விடலாம் என்றால் சரி. கூடாது என்றால், இது தப்பு.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
கே. அப்பாசாமி,
8/1, மேடை போலீஸ் ஸ்டேஷன் ரோடு,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மா.வ. - 627 002.

□ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
த். கோவிந்தன்,
முத்தாக்கவுண்டர் தோட்டம்,
சந்தியூர் போஸ்ட்,
மல்லூர் வழி,
சேலம் - 636 203.

● பி. ஜெயப் பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'ஜெயலலிதாயிஸம்' என்பது என்ன என்று கூற முடியுமா...?

! மக்கள் மகிழ எப்போதும் பேசுவது; கருணாநிதியை எப்போதும் சாடுவது; பா.ஜ.க.மயங்க அவ்வப்போது அறிக்கை விடுவது; எடுத்தேன் கவிழ்த்தேன் முடிவுகளைத் தயங்காமல் அறிவிப்பது.

● முகவை முத்துசாமி, தொண்டி.

? நீதி தேவதை தராசு – கல்கி தராசு என்ன வித்தியாசம்?

? நீதி தேவதை தராசு, சட்டத்தை மட்டும்தான் எடை போட்டு முடிவு கூற முடியும்; கல்கி தராசு, தர்மத்தைச் சுட்டிக் காட்டி, நீதி தேவதையின் முடிவைக்கூட விமர்சிக்க முடியும்.

● ஜீ. உதயக்குமாரன், வீரன்வயல்.

? மதவாதம், தீவிரவாதம் – சில சமயங்களில் ஆன்மிகத்துடன் கலப்பது பற்றி...?

! இதெல்லாம் கலந்துவிட்டால் அப்புறம் அது எப்படி ஆன்மிகமாயிருக்கும்? இதையெல்லாம் கடந்து நிற்பதுதான் ஆன்மிகம்.

● கே. அப்பாசாமி,
பாளையங்கோட்டை. *

? திருப்பதி சாமியைத் தரிசிக்க இன்டர்நெட்டில் முன்பதிவு செய்யலாம் என்று அறிவித்திருப்பது குறித்து...?

! இன்டர்நெட் மூலமே தரிசனம் செய்து விடுங்கள் என்று கூறாத வரை இது நல்ல ஏற்பாடுதானே!

● கே. நரசிம்மன், மாங்காடு.

? ஒரு குடும்பத்தைக் குதூகலமாக்குவது கணவனின் வருமானமா? மனைவியின் நிர்வாகத் திறனா...?

! குழந்தையின் சிரிப்பு.

● கே.எஸ்.வெங்கடேஷ்,
அவனியாபுரம்.

? கைநிறைய சம்பாதிச்சும் செலவே மிஞ்சுகிறதே... செலவைக் கட்டுப்படுத்த ஒரு நல்ல வழி சொல்லுங்களேன்...?

! புத்தர் சொன்னதுதான் ஒரே வழி: ஆசையை அடக்கு!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? சீக்கிரம் புகழின் உச்சிக்குச் செல்பவர் நடிகரா? பத்திரிகையாளரா? அரசியல்வாதியா?

! முதலாமவர்தான். ஒரு படம் 'ஹிட்' ஆனால் போதுமே!

Praba's VCare
The ultimate health and beauty



Mrs. Praba Reddy

BABTAC


(Member in British Association of Beauty Therapy and Cosmetology) D.T.E., B.T.H.D., M.A., M.S.
Diploma in Bridal Dressing (Singapore)
Cinema Secrets Hollywood Makeup (London)

அழகான கட்டுக்கோப்பான உடலும், முகமும் பெண்களுக்கு தன்னம்பிக்கை தரும்.

இதோ!
ஒரு பெண்ணின் செய்தி
சிகிச்சைக்கு பின்!

Sun T.V- யில்
வாரந்தோறும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஒளிபரப்பாகும் 'உங்களுக்காக' நிகழ்ச்சியில் திருமதி. பிரபாரெட்டி அவர்களின் அழகு குறிப்புகள் பகுதியை காண தவறாதீர்கள்.

என் பெயர் கீதா. கல்லூரி படிப்பு முடிந்தவுடன் என் பெற்றோர் எனக்கு திருமணம் செய்து வைக்க முயன்றனர். என் உடல் பருமன் மற்றும் எடையினால் பலரும் என்னை நிராகரித்தனர். T. Nagar-ல் வசிக்கும் என் அத்தை **Praba's VCare Health & Beauty Clinic** பற்றி என்னிடம் கூறினார். 3 மாத சிகிச்சைக்கு பிறகு என்னை என்னாலேயே நம்ப முடியவில்லை. எனது இடுப்பு, தொடை, வயிறு போன்ற இடங்களில் தேவையற்ற சதைகள் மறைந்து இன்று உடல் அழகுடனும், முகப்பொலிவுடனும் ஜொலிக்கிறேன். **Mrs.Praba Reddy-**க்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி!



முற்றிலும் அனுபவம் வாய்ந்த டாக்டர்களால் பலவிதமான சிகிச்சைகள் இருபாலருக்கும்!

- உடல் பருமன் மற்றும் எடை குறைக்க
- தேவையற்ற ரோமங்களை அகற்ற
- மார்பகங்களில் மாற்றங்கள் செய்ய
- முகச்சுருக்கங்கள் அறுவை சிகிச்சையின்றி போக்க
- பரு, மங்கு மற்றும் மருவுக்கு நிரந்தர தீர்வு பெற
- முகக்கருப்பை நீக்கி பொலிவுபெற
- அமெரிக்கன் ஹேர்பாண்டிங் மற்றும் வீவிங் செய்ய
- ட்ரைகாலஜி முறையில் முடி மற்றும் ஸ்கல்ப் பிரச்சனைகள் நீங்க
- ஜாறுடெக் முறையில் ஃபேஷியல் மற்றும் ஹேர்கலரிங் செய்ய

All Equipments are FDA Approved

Beauty Parlour Also

#15, New Giri Road,
off G.N.Chetty Road,
(Near Apollo Cliniq)
T.Nagar, Chennai - 17.
Ph: 28260064, 52125659
Cell: 98840 55550

Praba's
Herbal Beauty Clinic

116, Bussy Street,
Pondicherry - 1.
Ph: 0413-2348920/21
Cell: 98423 33777

132, Manickavasakam Street,
Balaji Nagar, Fair Lands,
Salem - 16.
Ph: 98423 33777

Praba's V Care நிறுவனத்திற்கு செல்லுங்கள்! தேவதை போல் ஜொலித்திடுங்கள்!

அருளாசி

உனது இல்லத்தை
இறைவனின் இல்லமாக்கு.

அப்போது அங்கு ஒளியும்,
அன்பும், பெருவளமும்
இருக்கும்.

உனது உடலை இறைவனின்
இருப்பிடமாக்கு.



1998 ஆம் ஆண்டின் கடைசி என்று நினைக்கிறேன்; டாக்டர் ப்ருதத்தா என்னிடம், ஒரு வார 'ஆர்ட் அஃப் லிவிங்' பயிற்சி எடுத்துக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தினார். அவர் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்ட ராஜ்ய சபை உறுப்பினர். அவரும் அவரது உடல்நலம் குன்றிய மனைவியும், மேற்படி வாழும் கலை மூச்சுப் பயிற்சியை மேற்கொண்டு பலன் அடைந்ததாகத் தெரிவித்தார்கள். உடல் நலத்துக்கும், மன நலத்துக்கும் என்னைப் போன்ற பரபரப்பான வாழ்க்கை நடத்துபவர்கள், அவசியம் இப் பயிற்சியைப் பெற வேண்டும் என்றார். என்னுடைய வசதியைக் கருதி, என் தில்லி இல்லத்திலேயே பயிற்சியை அளிக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்.

பயிற்சிக்குப் பிறகு, என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அபூர்வ அனுபவத்தை உணர்ந்தேன்.

அங்கு அமைதியும், பேரின்பமும் விளங்கும்.

இவ்வுலகை விளையாட்டாகவும், கடவுளின் இன்னொரு
காட்சிதான் என்றும் பார்.
அப்போது நீ இருமையற்ற ஆன்மாவில்
இளைப்பாறுவாய்.

அருளாசி பலவிதங்களில் உனக்கு வருகிறது
நீ தாராள மனமுடையவன் ஆனால்
பெருவளமே உனக்கு அருளாசியாக வருகிறது!

நீ கடினமாக உழைப்பவன் ஆனால்
மகிழ்ச்சியே உனக்கு அருளாசியாக வருகிறது.

நீ சோம்பேறியானால்
கடின உழைப்பே
உனக்கு அருளாசியாக வருகிறது!



• பி.ஏ. சங்மா

என்னுடைய குடும்ப அங்கத்தினர்களும் அப்படியேதான் உணர்ந்தனர்.

பிறகு கல்கத்தாவில் நடந்த வங்காளி இளைஞர் மாநாட்டில் அன்று நான் மிக மகிழ்ச்சிகரமான மாலைப்பொழுதைக் கழித்தேன். 'ஆர்ட் ஆஃப் லிவிங்' பயிற்சி தரும் இளைஞர்கள், இன்றைய இளம் சமுதாயத்தினரிடம் காண்பதற்கரிய, பிரகாசமான துடிப்போடு செயல்பட்டார்கள். ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்கள், இன்றைய இளைய தலைமுறையினருக்கான நவீன கல்வியை இந்த இளைஞர்களுக்கு அளித்து, ஒரு புதிய புரட்சியையே செய்து வருகிறாரோ, என்று என் மனசுக்குள் ஒரு நினைப்பு ஓடியது.

பெங்களூரில் உள்ள ஆசிரமத்துக்குச் சென்று, குருஜியுடன் சிறிது நேரம் செலவிடத் தீர்மானித்தேன். அவர் அப்போதுதான் மிகப் பெரிய உலகச் சுற்றுப் பயணம் போய்த் திரும்பியிருந்தார். நான் அவர் குடிலுக்குள் நுழைந்ததும், அவரது வசீகரமான புன்னகையுடன் என்னை வரவேற்றார். நாங்கள் சிக்கலான விஷயங்களோ, பெரிய தத்துவங்களோ எதைப் பற்றியும் விவாதிக்கவில்லை.

குருஜி என்னிடம் ஓர் ஆப்பிளைத் தந்தார். நான் அவர் குடிலிலிருந்து வெளியே வரும்போது என் மனசு முழுக்க அவரது அன்பே நிரம்பியிருந்தது. ஆசிரமத்தைச் சுற்றிக் காண்பிக்க ஒருவரிடம் ஏற்பாடு செய்தார். பாறாங்கல் போன்று இருந்த இடம் பச்சைப் பசேல் என்று மாற்றப்பட்டு, கண்களுக்கு உண்மையில் விருந்தாக இருந்தது.

எனக்கென்னவோ இந்த இளம் குரு நிச்சயம் மகத்தான சாதனை ஒன்றைச் செய்யவே துணிந்திருக்கிறார் எனத் தோன்றுகிறது.

முன்னாள் நாடாளுமன்ற சபாநாயகர்,
பி.ஏ. சங்மா, எம்.பி

"இரண்டு குழந்தைகளுக்கு மேலிருந்தால் உள்ளாட்சித் தேர்தலுக்கு நிற்கக் கூடாதுன்னு ஹரியானாவுல சட்டம் கொண்டாந்த நாள்லேர்ந்து நம்ம தலைவருக்கு ஒரே குழப்பம்..."

"என்ன குழப்பம்?"

"இரண்டு குழந்தைங்கன்றது ஒரு பொண்டாட்டிக்கா அல்லது இரண்டு மூணு பொண்டாட்டிங்களுக்கும் சேர்த்தான்னு தான்!"

— பாளை. பாலு



அம்மா... தாயே...! பச்சையம்மா!



"எந்தத் தோட்டத்தைப் பார்த்தாலும் தலைவர் கையெடுத்துக் கும்பிடுறாரே ஏன்?"

"தோட்டத்தின் பசுமைத் தோற்றத்தில் 'அம்மா'வைக் காண்கிறாராம்!"

— வசந்தி வள்ளுவன்



"என்னடி இப்படி அலங்கோலமா படுத்துக் கிடக்கறே. வீடெல்லாம் சாமான்கள் சிதறிக் கிடக்குதே?"

"வந்ததும் வராததுமா என்னைத்தான் கேட்பீங்க! உங்க அம்மா கூடத்தான் சாமான்களை வீசினாங்க...!"

— வாமினா

"அதோ மாட்டியிருக்கற போட்டோவுக்குப் பின்னால ஒரு பெரிய கதை இருக்கு!"

"ஏங்க, கதை எழுத வேற பேப்பரா கிடைக்கலை... போட்டோ பின்னாடியெல்லாம் ஏன் எழுதறீங்க?"

— மேல்மங்கலம் பத்ரா



பா. ராகவன்



9

சுற்றுலாப் பயணிகளும் சொந்த ஊர்க் குரங்குகளும் நிறைந்த மகாபலி புரத்துக்கு அவர்கள் வந்து இறங்கியபோது மணி எட்டரை ஆகியிருந்தது.

வெயிலுக்கு முன்னால் கிளம்பிவிட வேண்டும் என்று முன்னதாகக் குமாரும் குட்டியின் அப்பாவும் கூட்டாக முடிவெடுத் திருந்தார்கள். நாலரைக்கெல்லாம் எழுந்து, கண்ணெரியக் குளித்துவிட்டு, புளியோதரை யும் தயிர்சாதமும் கலந்து எடுத்துக்கொண்டு. ஜக்குவை எழுப்பிக் கிளப்பிக்கொண்டு வெளியே வரும்போதே மாலுவுக்கு வியர்த்து விட்டது. குழந்தைகள் இரண்டு பேருக்குமே அந்த அனுபவம் புதிதாகவும் நூதனமாகவும் இருந்தது. இப்படி ஓர் இன்பச் சுற்றுலாவை அவர்கள் எண்ணிப் பார்த்திருக்கவில்லை. ஃப்ரெண்ட்ஸ் குடும்பத்துடன் மகாபலி புரம். அங்கே சிற்பங்கள் இருக்கின்றன, குகைக் கோயில்கள் இருக்கின்றன, சின்னதாக ஒரு மலையும் உண்டு என்று அப்பா சொல்லியிருக்கிறார். அதிக உயரம் எழும்பிவிழும் அலைகள் மிக்கக் கடலும், கடலோரத்தில் ஒரு கோயிலும் கூட.

சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனா லும் நிச்சயமாகச் சொல்ல முடியாத சந்தோஷம். ஒரு வாரமாக அவன் தன் அப்பாவிடம் அத்தனை சரியாகப் பேசவில்லை. அவரைப் பார்க்கிறபோதெல் லாம் முகமறியாத அந்த நிர்மலாவின் உருவம், முன்னூற்று நாற்பது ரூபாய் வயலட் நிறப் புடைவை ரூபத்தில் பக்கத்தில் வந்து கொண்டே இருந்தது. புடைவை தெரிகிறது. கைகள், பாதங்கள் தெரிகின்றன. கலவை யாக ஒரு சிரிப்பொலி கேட்கிறது. அந்தச் சிரிப்பொலி கேட்கிறபோதெல் லாம் அவனால் அப்பாவை நேருக் குப் பார்த்துப் பேச முடியாமலாகி



''காதை மட்டும் மூடிக்கோ!'' என்று அவன் தலையைச் சுற்றி மப்ளரைக் கட்டிவிட்டான் குமார்.

''ஹை, பாரதியார் மாதிரி இருக்கே'' என்று உடனே எதிர்ப்புற இருக்கையிலிருந்து குட்டி சொன்னாள். ஜக்கு புன்னகை செய்தான்.

பேருந்து செங்கல்பட்டைத் தாண்டியதும் குட்டி எழுந்து வந்து ஜக்குவின் பக்கத்தில் உட்கார்ந்து கொள்வதற்குத் தோதாக, குமார் எழுந்து அவளது அப்பாவின் அருகில் சென்று அமர்ந்தான்.

''பசங்க எவ்ளோ சந்தோஷமா இருக்காங்க பாருங்க சார். இதுக்காகவாவது மாசம் ஒரு தடவையாவது இப்படி எங்கியாவது போனா தேவலை'' என்றார் குட்டியின் அப்பா.

உடனே அதை ஆமோதித்தான் குமார்.

மெல்லினம்

விடுகிறது.

ஒரு அப்பா எப்படி லவ் பண்ணமுடியும்? அதுவும் யாரையோ.

இந்தக் கேள்விதான். இது ஒன்றுதான். இதற்கு மட்டும் விடை கிடைத்துவிட்டால் மிச்சமெல்லாம் பிரமாதமில்லை.

''குளிருதாடா செல்லம்?'' பஸ் வேகமெடுத்தபோது அப்பாதான் கேட்டார். தன் பிரத்தியேக அன்பை மப்ளருக்குள் சுருட்டி, இரகசியமாக அவர் தம் கைப்பையில் எடுத்து வந்திருக்கிறதை அப்போது தான் ஜக்கு கவனித்தான்.

''இல்லப்பா''

உண்மையில் ஜக்குவைக் காட்டிலும் அவனுக்கு அந்தப் பயணத்தில் அதிக சந்தோஷம் இருந்தது. எத்தனை காலம் கழித்து இப்படியொரு பயணம்!

குட்டி கேட்டாள் : ஜக்கு, நீ மகாபலிபுரத்துல என்னென்ன திங்ஸ் வாங்கப் போறே?

''தெரியலையே. அங்க என்னென்ன கிடைக்குமோ?'' என்று ஜக்கு சொன்னான்.

''எங்கம்மா சொன்னா, சோழி, கூலிங் க்ளாஸ், சிற்பம் எல்லாம் இருக்குமாம். இளநீர் ரொம்ப ஜோரா இருக்குமாம் அந்த ஊர்ல. நான் ஒரு கூலிங் க்ளாஸ் வாங்கப்போறேன்.''

"ஓ" என்றான் ஜக்கு. "நான் ஒரு குரங்கு பொம்மை வாங்கப் போறேன்"

"குரங்கு பொம்மையா? அது எதுக்கு?" ஆச்சர்யமுடன் கேட்டாள் குட்டி.

"சும்மாத்தான். அழகா இருக்குமே?"

மகாபலிபுரம். பல்லவர்களின் நகரம். குடைவரைக் கோயில்கள். சிற்பங்கள். ஓசைமிக்கப் பெருங்கடல். இந்தத் தினத்தில் ஏதோ விசேஷமாக நடக்கப் போகிறது என்பதாக அவனுக்குத் தோன்றியது. என்னவென்று புரியவில்லை. அது மகிழ்ச்சிகரமானதா, வேறுவிதமானதா என்றும் தெரியவில்லை. அப்பாவின் அந்த டைரியைப் படிக்காதிருந்திருந்தால் இந்தத் தினத்தின் வண்ணமே வேறுவிதமாகத்தான் இருந்திருக்கும். ஒரு நூறு புதிர்க் கணக்குகளாலும் விடுகதைகளாலும், சூழ்நிலையை அவன் மிகவுமே மாற்றியிருப்பான். குட்டி வியக்கும் விதத்தில் சிலபல மேஜிக் வித்தைகள், அவளது பெற்றோர் வியந்து பாராட்டக் கொஞ்சம் பாடல்கள், சுலோகங்கள், தன் பெற்றோர் பெரிதுவக்கக் கொஞ்சம் புதிய விஷயங்கள் என்று உண்மையிலேயே அவனது மூளை புதிய தகவல்கள் பலவற்றால் நிரம்பித்தான் இருந்தது. மகாபலிபுரத்தைப் பற்றியே அவனுக்குச் சில சங்கதிகள் தெரிந்திருந்தன. நரசிம்மவர்மப் பல்லவர் அவனுக்கு வகுப்பாசிரியர் மூலம் அறிமுகமாகியிருந்தார்.

ரசனை மிக்க ஆசிரியர்கள் அமைவது பெரிய வரம். அவனது ஆசிரியர் பாடத்திட்டத்தில் இல்லாத பல்லவர் காலத்தை ஒரு பிரசித்தி பெற்ற நாவலின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்தார். சிவகாமியின் சபதம். யார் அந்த சிவகாமி? சரித்திரத்தில் அவள் இல்லை. ஆனால் நரசிம்மவர்மப் பல்லவர் இருக்கிறார். அவர் தான் சிவகாமியைக் காதலித்தவர். கைகூடாத காதல்.

அப்பாவின் காதல் கூடக் கைகூடவில்லை. அந்த நிர்மலா கடைசியில் என்னதான் ஆனாள்? டைரியில் அதுகுறித்த விவரங்கள் போதிய அளவுக்கு இல்லாததில் அவன் கொஞ்சம் ஏமாந்திருந்தான். ஆனால் நரசிம்மவர்மப் பல்லவரின் காதல் குறித்துக் கேள்விப்பட்டபோது, இப்படி மனசு பொங்கவில்லை. நரசிம்மவர்மர் தன் அப்பாவாக இல்லாதது தான் காரணமாயிருக்க முடியும்.

நரசிம்மவர்மர் யாரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பார்? அந்தப் பெண்ணுக்கு சிவகாமியைத் தெரிந்திருக்குமா? தன் சொந்தப் பிரச்னை தென்பட்டுவிடாத வகையில், உண்மையிலேயே தெரிந்துகொள்ளும் விருப்பமுடன் அவன் இதை ஆசிரியரிடம் கேட்டான்.

கனிவு மிக்க புன்னகையுடன் அவர் சொன்னார் : "கதையையும் சரித்திரத்தையும் போட்டுக் குழப்பிக்கக் கூடாது ஜகன். சரித்திரத்தைப் புரிஞ்சிக்க ஓரளவு கதை உதவும். ஆனா இரண்டும் ஒண்ணு இல்லே. சரித்திரத்தில் சிவகாமி கிடையாது. ஓகே?"

சரியான விளக்கம்தான். சந்தேகமில்லை. ஆனால் அப்பாவின் சரித்திரத்திலேயே அந்த நிர்மலா இருந்துவிட்டுப் போய்விட்டதுதான் இப்போது பிரச்னையாகியிருக்கிறது. நல்லது. இது இப்போதே தீர்ந்துவிடக் கூடிய விஷயமாக இல்லை.

மகாபலிபுரம் வந்துவிட்டிருந்தது. அவர்கள் இறங்கி டிபன் சாப்பிட்டுவிட்டு சுற்றிப்பார்க்க ஆரம்பித்தார்கள். ஐந்து ரதம். அர்ச்சுனன் தவம். ஒரே கல்லினால் செதுக்கப்பட்ட பிரும்மாண்டமான சிற்ப சொரூபங்கள். வெண்ணெய்க் கல். ஆ! அது எப்படி உருளாமல், விழாமல் அப்படியொரு உயரத்தில் ஒட்டிக் கொண்டு நிற்கிறது? தொப்பி அணிந்த வெள்ளைக்காரர்கள். சுற்றி வரும் உள்ளூர்க்காரர்கள். சிற்பம் செதுக்கும் உளியோசை, தார்ச்சாலையில் கவிந்த மர நிழல். லைட் ஹவுஸ், கடல், மணல்.

> "சண்டைன்னு வந்துட்டா நான் பெண்டாட்டின்னெல்லாம் பார்க்க மாட்டேன்"
> "அடிச்சுடுவியா?"
> "டமால்னு கால்ல விழுந்துடுவேன்."
> - அஜீத்லால்

ஒவ்வொரு இடத்திலும் நின்று நிதானமாக இரு அப்பாக்களும் விளக்கிக் கொண்டே வந்தார்கள். பிற்பகல் ஆனபோது சாப்பிடலாம் என்று ஒரு மர நிழலுக்குப் போனார்கள். மாலுவின் புளியோதரை மற்றும் தயிர்சாதப் பொட்டலங்களுக்கு காஞ்சனா கொண்டு வந்திருந்த சிப்ஸ் பாக்கெட் பக்கத்துணையாக இருந்தது. இந்த மாதிரி அடிக்கடி எங்காவது வெளியே போக வேண்டும், என்று மீண்டும் மீண்டும்

சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

எல்லாரும் சாப்பிட்டு முடிக்கும் முன்னரே ஜக்கு எழுந்துவிட்டான். கை கழுவிக் கொண்டு, குரங்குகள் நிறைய அமர்ந்திருந்த ஒரு பாறையை நோக்கி நடக்கத் தொடங்கினான். ஏனென்று தெரியவில்லை. அன்று காலையிலிருந்தே அவனுக்கு அடிக்கடி குரங்குகளின் ஞாபகம் வந்து கொண்டே இருந்தது. குரங்கு பொம்மை வாங்க வேண்டும் என்று ஏன் தோன்றியது? அப்பா அனுமதித்தால் வீட்டில் ஒரு குரங்கும் கூட அவனால் வளர்க்க முடியும். திராட்சைப் பழம் மாதிரி உருளும் அதன் கண்களில், தனக்கேதோ செய்தி இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.



எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த இடத்திலிருந்து கொஞ்சம் தள்ளி வந்து இன்னொரு மரத்தடியில் அவன் அமர்ந்து கொண்டான். அங்கிருந்து அந்தப் பாறையும் அதன்மீது அமர்ந்திருந்த குரங்குகளும் சற்றே நெருக்கமாகத் தெரிந்தன. சில விநாடிகளில் அந்தக் குரங்குகளின் மாநாடு முடிவடைந்து ஆளுக்கொரு திசையில் தாவிப் போய்விட்டன. ஒரு குரங்கு மட்டும் ஜக்குவை முறைத்துப் பார்த்துக் கொண்டு அங்கேயே நின்றது.

அவன் அதனைப் பார்த்து 'வா' என்று சைகை செய்தான். 'ரூர்ர்... ர்ர்' என்றது அது. மீண்டும் 'வா' என்றான். சட்டென்று அது தாவிக்குதித்து அவனிருந்த மரத்தடிக்கே வந்தது. அவன் கையில் பிரித்த பிஸ்கெட் பொட்டலம் ஒன்று இருந்தது. அதைச் சற்று தூரத்தில் போட்டு, அதனைக் காட்டித் தான் குரங்கை அழைத்துக் கொண்டிருந்தான்.

ஐந்தடி தூரத்தில் தன் எதிரே பிரத்தியட்சமாகி, சட்டமாக உட்கார்ந்துகொண்ட குரங்கை அவன் வியப்புடன் பார்த்தான். துளி பயமின்றி, அது கூப்பிட்டதும் அருகே வந்தது எப்படி, அதே பயமின்றி, தான் எப்படி அதன் எதிரே உட்கார்ந்திருக்கிறோம் என்று அவனுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. இன்னது செய்கிறோம் என்கிற உணர்வில்லாமலேயே, "ஹாய், ஐயம் ஜகந்நாதன், வாட்ஸ் யுவர் நேம்?" என்று அந்தக் குரங்கைப் பார்த்துக் கேட்டான்.

"ரூர்ர்... ர்ர்ர்" என்று மீண்டும் உறுமியது அது.

"பிஸ்கட் உனக்குத்தான். எடுத்துக்கோ"

ஆனால் அது பிஸ்கட் பொட்டலம் இருந்த திசையில் பார்க்கவே இல்லை. அவனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. சற்றும் எதிர்பாராத கணத்தில் அது வாய் திறந்து தமிழில் பேசப் போகிறதோ என்று அவனுக்குத் தோன்றியது. கடித்து விடுமோ என்று ஓரத்தில் ஒரு பயமும் இருப்பதை உணர்ந்தான். எழுந்து ஓடிவிடலாமா, இருந்து பார்க்கலாமா என்று தீர்மானிக்க முடியவில்லை. கடைசியில் ஒன்றும் பெரிதாக நடந்துவிட முடியாது என்று தனக்குள் முடிவு செய்து கொண்டு, "நீ அழகாத்தான் இருக்கே" என்று சொன்னான்.

அது மீண்டும் ரூர்ர் ... ர்ர் என்றது.

"உனக்கு நரசிம்மவர்மரைத் தெரியுமா?"

"ஹ்ர்ர்ர்ர்ர்ர்...!"

"எங்கப்பாவை?"

"......................"

"சிவகாமிக்கு டான்ஸ் ஆடத் தெரியுமாம். நிர்மலாவுக்கு என்ன தெரியும்னு உனக்குத் தெரியுமா? யார் அவள்னாவது தெரியுமா?"

இப்போது குரங்கு நடப்பதற்குத் தயார் நிலையில் எழுந்து நின்று கொண்டது.

"போகாதே. உக்கார். கொஞ்சம் பேசணும் உங்கிட்ட"

அவனைத் தேடிக்கொண்டு வந்த குட்டி மரத்தின் பின்னாலிருந்து இந்தப் பேச்சைக் கேட்டு வியப்பாகி அப்படியே நின்றுவிட்டிருந்தான்.

(தொடரும்)

அதை முதலில் திருத்தட்டும்

✉ ஆஹா! ரூ.50,000 பரிசா! எங்க ஊருக்கு இந்தப் போட்டி எப்போ வரும் என இப்பவே ஏங்க வைத்து விட்டீரே! (சொக்கா ரூ.50000 பரிசும் எனக்கே கிடைக்கணுமே!)

சென்னை - 25, வி. பரமசிவம்

✉ 'புதுவை அரசு மாநிலம் முழுவதும் பிச்சையெடுக்க அதிரடித் தடை விதித் திருக்கிறது' என்ற தகவல் புதுவைச் சிறப் பிதழ் மூலம் அறிந்தேன். சிறப்பிதழ் தயா ரித்தவர்களுக்குப் பாராட்டு!

வேலூர்-1, பா. சுகுணா

✉ அனைத்துப் பிரிவு மக்களுக்கும் முக்கியப் பிரதிநிதியாக இருக்கும் மாநில முதல்வருக்கு சிறப்பான ஆலோசனை தந்திருக்கிறது தலையங்கம். 1991களிலேயே பாபர் மசூதிக்கு எதிரான கரசேவை இயக் கத்தை ஆதரித்தவர் ஜெயலலிதா என்பதை யும் நினைவில் கொள்ள வேண்டும்.

சென்னை - 61, ஆர். நாகராஜன்

✉ ராமரே விரும்பாத காரியத்தைச் செய்து



கொண்டிருக்கும் இவர்கள், 'பொது சிவில் சட்டம்' நடைமுறையானால், அதையும் 'பொடா'வாக்கிக் குளிர் காய்வார்கள்!

பூவிருந்தவல்லி, கு.ப. இரகுநாதன்

✉ ராஜீவ் காந்தி காலத்துக்குப் பிறகு இவ்வளவு காலம் சும்மா இருந்துவிட்டு, திடீரென தலைமை நீதிபதி (உச்ச நீதிமன்றம்) செய்த சிபாரிசுக்காக, பொது சிவில் சட்டம் கொண்டு வர இருக்கிறோம் என்பது சரியல்ல. இந்த நாட்டில், எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் அதனால் பாதிக்கப்படுவது - பாதிக்கப்படப் போவது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அல்ல... ஆளுகின்ற ஆட்சியாளர்களுக்குப் பிடிக்காத வர்கள்தான்.

சென்னை - 28, வலங்கைமான் நஸீர்

✉ பொது சிவில் சட்டம் கொண்டு வருவதற்கு முன் வெள்ளையர்கள் நம்மை ஆண்டபோது போட்ட சட்டங்கள் இன்ன மும் திருத்தப்படாமல் அப்படியே இருக் கின்றன. அதை முதலில் திருத்தட்டும்.

திருநெல்வேலி, எஸ்.ஆர். ஸ்வாமி

✉ பத்மவாசனின் 'மழை நீர் சேமிப்பு' விளம்பரத்தில் ஓர் ஓவியனின் சமூகப் பிரக்ஞை ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

நெல்லை - 53, இ.சு. பாலசுப்பிரமணியன்

✉ 'தொலைந்த காலம்' கதையல்ல. நிகழ் காலத்தின் நடைமுறை. பருவக் கோளாறைக் காதலென்று உருவகப்படுத்தும், இரு பாலரையும் சிந்திக்கக் கொடுத்த டானிக், ஜி.ஆர். சுரேந்தர்நாத்துக்கு பாராட்டு!

குருசாமிபாளையம், எஸ்.ஏ. அங்கமுத்து

✉ 'கண்ணீர்ப் பூக்கள்' செய்தியைப் படித்தேன். நாம் அன்பு கொண்டோருக்கு நமது அன்பைத் தெரிவிக்கப் பரிசுகள் வழங்குவது அதுவும் ஸ்ரீ அன்னை மீது பக்தி கொண்டவர்கள் அன்னைக்குக் காணிக்கை யாகப் பூக்கள் வைத்து வணங்குவதைத் தடை செய்தது, வருத்தமே தந்தது.

சென்னை - 44, கி. முத்தையன்

ஓ! அதுதான் சிக்கலா?



டாக்டர்
எஸ். அஷோக்

'குடல் ஓட்டை ஏன்?' என்ற போன வாரக் கேள்விக்கு, முதலில் பதிலைத் தந்துவிட்டு, ஒரு கேஸ் ஹிஸ்டரி சொல்கிறேன் :

குடல் ஓட்டை : குடலில் ஓட்டை போடுவது, செரிமானமின்மை, வயிற்றுப் போக்கை ஏற்படுத்துவது, அறுவைச் சிகிச்சை வரை இழுத்து விடுவது என எல்லாவற்றுக்குமே காச நோய்க் கிருமிகள் முழு முதற்காரணமாக அமைகின்றன. டைபாயிடு ஜுரம் வந்து, அலட்சியம் காரணமாக, முற்றிப் போனாலும், சிறு குடலில் ஓட்டை விழ வாய்ப்பிருக்கிறது.

காச நோய் உடம்பில் எந்த உறுப்பைத் தாக்கியிருந்தாலும், சிகிச்சை முறை ஒன்றேதான். வயிறு சம்பந்தப்பட்ட காச நோய்க்கும் இரத்தப் பரிசோதனை, திசுப் பரிசோதனை செய்து கண்டறியப்பட்டு, வீரியமிக்க, பக்க விளைவுகளற்ற மருந்துகளால் குணப்படுத்தி விடலாம்.

காச நோயின் ஆரம்ப நிலை என்றால் மருந்துகள் மூலமே குணமாகிவிடும். முற்றிய நிலை என்றால் குடல் அறுவைச் சிகிச்சை மட்டுமே பயனளிக்கும்.

"டாக்டர் என்னை நினைவிருக்கா?" என்று சின்ன சிரிப்புடன் என்னை நெருங்கிக் கேட்டார் அந்தப் பெண்மணி.


"முகம் ஞாபகமிருக்கிறது. பெயர் நினைவில் இல்லை" என்று சமாளித்து வைத்தேன்.

"நான்தான் சரோஜா. ஆறு மாசத்துக்கு முன்னால், எனக்கு ஆபரேஷன் செஞ்சீங்களே..." என்று நினைவுபடுத்தினார்.

அட! அந்தப் பெண்ணா இவர்?

நல்ல வாளிப்பாக, சதை பிடித்து, ஆரோக்கியமாக இருக்கும் இந்தப் பெண், ஆறு மாதத்துக்கு முன் என்னைப் பார்க்க வந்த சந்தர்ப்பம் நினைவுக்கு வந்தது. கன்னமெல்லாம் ஒட்டிப் போய், கண்களில் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக, பரிதாபமாக இருந்தார் சரோஜா.

"உடம்பு மெலிஞ்சுகிட்டே போகுது. என்ன சாப்பிட்டாலும் உடனே வாந்தியாயிடுது. சாயங்காலமானா ஜுரம் அடிக்குது. மூச்சு



7
வணக்கத்துக்குரிய வயிறே...

இரைக்குது. எப்பவும் களைப்பா இருக்கு" போன்ற புகார்களுடன் வந்திருந்தார்.

மலேரியா, டைஃபாயிடு, தைராய்டு கோளாறு என என்னென்னவோ வியாதிகளுக்குச் சிகிச்சை செய்து பார்த்துவிட்டு, ஒன்றும் பலனில்லாமல் என்னிடம் வந்திருந்தார்.

அவரைப் பரிசோதித்தபோதே, என்ன பிரச்னை எனப் புரிந்து விட்டது. ஆனாலும் பரிசோதனைகளின் ரிஸல்ட்டுக்காகக் காத்திருந்தேன்.

ரிஸல்ட் வந்தது. நான் பாஸாகியிருந்தேன். எஸ்! நான் நினைத்த மாதிரியே, சிறு குடலும் பெருங்குடலும் இணையும் இடத்தில் காசநோய்க் கட்டி!

சிறு குடலின் பின்பகுதியான இலியத்திலிருந்து மலக்குடல் வரை இருக்கும் பெருங்குடலின் நீளம் மூன்று அடி முதல் ஐந்தடி வரை. சிறுகுடலைப் போலவே பெருங்குடலும் மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது. ஏறு குடல், குறுக்குக் குடல், இறங்குக் குடல்.

சிறு குடலின் நீளத்தில் நான்கில் ஒரு பாகம்தான் பெருங்குடல் என்றாலும், வேலையும் பொறுப்பும் சிறுகுடலைப் போலவே அதிகம்தான். சிறு குடலில் செரிமானமானப் பொருள்கள், பெருங்குடலுக்கு வரும்போது, அதிலுள்ள தண்ணீர், சோடியம் குளோரைடு போன்றவற்றை உறிஞ்சுவது, பொட்டாசியம் பைகார்பனேட், வைட்டமின் கே, மியூகஸ் (சளி) ஆகியவற்றை உற்பத்தி செய்வது என எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கிறது.

"என்ன ஸார், உலக உருண்டையைப் பார்த்தபடி பெருமூச்சு விடறீங்க... ஃபாரின்ல படம் நல்லா ஓடுமான்னு யோசிக்கிறீங்களா...?"

"ஊஹூம், வெளிநாட்டு ஷூட்டிங்குக்கு செலவழிச்ச பணமாவது திரும்பக் கிடைக்குமான்னுதான்...!"

- உ. ராஜாஜி



தண்ணீர் மற்றும் அயனிகளின் சரிசம நிலையைப் பாதுகாப்பதே பெருங்குடலின் முக்கியச் செயலாக்கம். தன்னிடம் வந்து விழும் உணவுச்சத்துப் பொருள்களிலிருந்து தொண்ணூறு சதவிகிதம் வரை உறிஞ்சி எடுத்துக் கொண்டுவிடுகிறது.

சராசரியாக ஒரு நாளைக்கு முக்கால் லிட்டர் முதல் இரண்டு லிட்டர் வரை உணவுக் கூழும், 200 எம்.இ.க்யூ வரை சோடியம் மற்றும் குளோரைடும் நமது இரைப்பையில் உணவாகச் செல்கிறது.

இடைச் சிறுகுடலுக்கு வரும்போது, பலவித சுரப்பு நீர்களுடன் சேர்ந்து எட்டரை லிட்டர் அளவுக்கு இது உயர்ந்துவிடுகிறது. ஆறு லிட்டர் வரை சிறுகுடலும், ஒன்றரை லிட்டர் வரை பெருங்குடலும் உறிஞ்சிக் கொண்டு விடுகின்றன. மிச்சமிருக்கும் ஒரு லிட்டர் திரவம்தான் குடலிலிருந்து வெளியேறும் மலத்தில் காணப்படுகிறது. மலம் இளகி இதமாக வழுக்கிக் கொண்டு வெளியேற பெருங்குடல் செய்யும் உபாயம்தான் மிச்ச மீதி நீரை விட்டு வைப்பது.

இதெல்லாம் நல்ல ஆரோக்கியமாக இருக்கும் நபரின் பெருங்குடலின் செயல்பாடுகள். இதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு, உறிஞ்சும் தன்மையில் குறைபாடு உண்டானால் வயிற்றுப் போக்கு உண்டாகிறது.

இந்த அனுபவம் எல்லோருக்கும் ஏற்படக் கூடியதுதான்.

திடீரென்று ஒரு ஃபோன்! கல்லூரிக்குச் சென்றிருக்கும் உங்கள் மகனோ, மகளோ கூப்பிடுகிறார். "அம்மா! என்னோட ஹால்டிக்கெட், செல்ஃபோன், பணம் வைச்சிருந்த பர்ஸ் காணாமல் போயிடுச்சம்மா.." அவ்வளவுதான், அடுத்த விநாடி, வயிற்றைக் கலக்கி, மலம் கழிக்க வேண்டிய அவஸ்தையாகி, பாத்ரூமைத் தேடி ஓட வேண்டியிருக்கும். இதுதான் பெருங்குடல் அசைவியக்கத்தின் சூட்சமம்!

பெருங்குடல் அசைவியக்கம் செக்மென்டல் கான்ட்ராக்ஷன்ஸ், மாஸ் மூவ்மென்ட்ஸ் என பல நிலைகளில் அமைந்திருக்கிறது.

மனித மனம், கவலை, பயம், ஏக்கம், பகை உணர்வு, கோபம் போன்றவற்றால் பாதிக்கப்படும்போது, குடலின் அசைவியக்கமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. மன அழுத்தம், மனக் களைப்பு உள்ளவர்களுக்கும், உணர்ச்சி வசப்படுபவர்களுக்கும் மலச்சிக்கல் தொந்திரவு உண்டாவதும் இதனால்தான்.

'டாக்டர்... எனக்கு அபான வாயு அடிக்கடி பிரிகிறது. என் உடல் நலம் சீர் கெட்டு விட்டதா?' என்று கவலையோடு கேட்டிருக்கிறார் ஒரு வாசகர். அவருக்கான பதில் அடுத்த இதழில். காத்திருங்க.

அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டியில் 2,500/- ரூபாய் ஆறுதல் பரிசு பெறும் சிறுகதை.

அன்புள்ள அக்கா

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

ஆறு ஐம்பதுக்கு வந்து சேர வேண்டிய நெல்லை எக்ஸ்பிரஸ், வழக்கம் போல ஏழு ஐம்பதுக்கு சாவகாசமாய் எழும்பூர் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. ரயிலை விட்டுக் கீழே இறங்கி, இரண்டு பக்கமும் பார்த்தான். கூட்டம் கரைந்து கொண்டிருந்தது. அக்காவையோ அத்தானையோ காணோம். காலையில் ஆஃபீஸுக்குப் போக வேண்டியவர் அத்தான். ஸ்டேஷனுக்கு வந்திருப்பார், ரயில் ஒரு மணி நேரம் லேட் என்றறிந்ததும் வேறே வழியில்லாமல் கிளம்பிப் போயிருப்பார். அது சரி, இப்போ இவன் அண்ணா நகருக்குப் போய்ச் சேருவது எப்படி? எந்த பஸ், எங்கே ஏற வேண்டும், எங்கே இறங்க வேண்டும் என்கிற விவரங்களெல்லாம் தெரியாது. தெரிந்தாலும், அம்மா சுட்டுக் கொடுத்த முறுக்கு டின்னின் கனத்தைத் தூக்கிக் கொண்டு, பஸ் நெரிசலில் ஏறி இறங்குவதென்பதெல்லாம் இயலாத காரியம். மெட்ராஸ் பஸ் கண்டக்டர்களின் விருந்தோம்பலையும் கனிவையும் அக்கா சொல்லிக் கேட்டிருக்கிறான்.

ஆட்டோவில் அக்கா வீட்டு வாசலில் பந்தாவாய்ப் போய் இறங்கலாம் என்றால், அண்ணா நகருக்கு எவ்வளவு கேட்பான் என்று தெரியவில்லை. ஆட்டோக்காரர்களும் ஏமாற்றுவார்கள் என்று அக்கா சொல்லியிருக்கிறாள்.

கவனம். திருநெல்வேலிப் பையன் ஒருவன் மெட்ராஸில் வந்து ஏமாந்தான் என்கிற பழிச் சொல், நெல்லைச் சீமைக்கு வந்து விடக் கூடாது.

தன்னுடைய பெட்டியை ஒரு கையிலும் முறுக்கு டின்னை மறு கையிலும் சுமந்து கொண்டு, ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து, ரொம்ப புத்திசாலித்தனமாய், 'மீட்டர் திருத்தப்பட்டது' என்று எழுதியிருந்த ஆட்டோ ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஏறிக் கொண்டு "அண்ணாநகர் போங்க" என்றான்.

எழும்பூர் சிக்னல் வரைக்கும் ஆட்டோவில் மீட்டர் போடப்படாததை யுணர்ந்து, ''மீட்டர் போடலியா?'' என்றான்.

''மீட்டர் வேல செய்யல சார்'' என்றொரு அலட்சியமான பதில் வந்தது.

''மீட்டர் திருத்தப்பட்டது''ன்னு எழுதியிருக்கீங்க?''

''நாம திருத்தலாம் சார், அது திருந்தணும்ல?''

சிரிப்போடு கலந்து வந்தது டிரைவரின் பதில்.

அவருடைய சாதுர்யமான பதிலை ரசிப்பதா அல்லது, தான் ஏமாந்து விட்டதை நினைத்துக் குமுறுவதா என்று இவனுக்குத் தெளிவாக வில்லை.

''மீட்டர் போட்டா நாப்பது ரூவா ஆகும். ஒரு பத்து ரூவா போட்டு அம்பதாக் குடுங்க.''

பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அண்ணா நகரில் அட்ரஸைக் கண்டு பிடித்து வாசலில் இறங்கிக் கொண்டபோது, அத்தான் ஸ்கூட்டரை உதைத்துக் கொண்டிருந்தார். இவனைப் பார்த்ததும், உதைப்பதை நிறுத்திவிட்டு புன்னகைத்தார்.

''ரொம்பக் கஷ்டப்பட்டியா டேய்? காலைல எக்மோருக்கு வரத்தான் கௌம்பி



னேன். ஓங்கக்காதான் வேண்டாம்னுட்டா. எந்தம்பி திருநெல்வேலிச் சண்டியராக்கும், அவன் கண்டு பிடிச்சு வந்துருவான், நீங்க போக வேண்டாம்னுட்டா."

ஆட்டோ டிரைவரை அத்தானுடைய கஸ்டடியில் விட்டுவிட்டு, பெட்டியையும் முறுக்கு டின்னையும் சுமந்து கொண்டு இவன் உள்ளே பிரவேசித்தபோது அக்கா வெளியே வந்தாள்.

அவளுடைய முகம் நிறைந்த சிரிப்பைப் பார்த்தபோது இவனுக்குப் பொத்துக் கொண்டு வந்தது.

முறுக்கு டின்னையும் பெட்டியையும் பொத்தென்று கீழே வைத்தான்.

"அத்தான் ஸ்டேஷனுக்கு வர்றேன்னா ராம். நீ வேண்டாம்னுட்டியாமே?"

"ஹேய், ரிலாக்ஸ் யங் மேன், கொஞ்ச நாள்ல எஞ்சினியராகப் போற (எதுகையைக் கவனிச்சியா?) இன்னும் நீ டிபன்டண்ட் டாகவா இருக்கறது? நீயாவே எப்படியாவது வந்து சேர்ந்துருவங்கற நம்பிக்கையில தான் அத்தான அனுப்பல. கோபமா?"

தன்னைவிட வளர்ந்திருந்த தம்பியின் தலைமுடியை எட்டிச் செல்லமாய்ச்

சிலுப்பி விட்டாள்.

வாசலில் அத்தானின் குரல் கேட்டது.

"சாயங்காலமா வாரேன். டேய், எத்தன மணிக்கு இன்டர்வியூ?"

"மத்யானம் மூணு மணிக்கு அத்தான்."

"சரியான சம்மர்ல மெட்ராஸுக்கு வந்து சேந்துருக்க. ஆல் த பெஸ்ட். நா வாரேன்."

அத்தான் போன பின்னால், டிஃபன் சாப்பிட்டு விட்டு, அக்காளும் தம்பியும் ஊர்க் கதைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

அப்புறம், இந்த இன்டர்வியூவைப் பற்றிப் பேச்சு திரும்பியது.

"இன்னும் ரிஸல்ட்டே வரல, அதுக்குள்ள என்னடா இன்டர்வியூ?" என்றாள் அக்காள்.

"இது நல்ல கம்பெனிக்கா. விட்டா கிடைக்காது" என்றான் இவன்.

"இருக்கட்டுமே, படிச்சி முடிச்சிட்டு ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ வாழ்க்கையை அனுபவிக்காம, இது என்னடா காலேஜை விட்டு வெளியே வர்றதுக்கு முன்னாடியே வேலை? நெல்லு வித்த காசு அப்பா மூட்டை மூட்டையாக் கட்டிப் பரண்மேல போட்டு வைச்சிருக்காகல்ல? அதுல ஒரு மூட்டையத் தூக்கிக்கிட்டு ஒரு ஆல் இண்டியா டூர் போய்ட்டு வரலாம்ல நீ?"

"நீ ஒண்ணுக்கா, இந்த முறுக்கு டின்னைத் தூக்கியே கையொடிஞ்சிப் போச்சு!"

"பேச மட்டும் கத்துக்கிட்ட. இந்த மெட்ராஸ்ல தண்டையார்ப்பேட்டையிலயோ திருவான்மியூர்லயோ கொண்டு போய் விட்டா அங்கேயிருந்து தனியா அண்ணா நகருக்கு வந்து சேர உனக்குத் தெரியுமா? எக்மோர்லயிருந்து வந்து சேரவே மூணு கிலோ மெலிஞ்சு போய்ட்ட!"

"சும்மா நக்கல் பண்ணாதக்கா, செய்துங்கநல்லூர்லயிருந்து திருநெல்வேலிக்கு வந்து, திருநெல்வேலியிலேயிருந்து தன்னந்தனியா வந்திருக்கேன், திருவான்மியூர்லயிருந்து வரமாட்டேனாக்கும்?"

"அதெல்லாம் சுத. செய்துங்கநல்லூர்க்காரங்களுக்கெல்லாம் திருநெல்வேலிதான் பட்டணம். உண்மையான பட்டணம் ஒங்களுக்கெல்லாம் தெரியவே தெரியாது."

"நீ என்னமோ மெட்ராஸ்லயே பொறந்து வளந்தவ மாதிரிதான்."

"இல்லாமயிருக்கலாம். ஆனா நா மூணு வருஷமா இங்க ஸெட்டில் ஆயிட்டேன். இப்ப நா ஒரு கம்ப்ளீட் மதராஸி. நீயும் ஒரு இரண்டு மாசம் மூணு மாசம் மெட்ராஸ்ல தங்கு. ஊரெல்லாம் ஜோரா சுத்திப் பார். மதராஸியா மாறு. அப்புறம்..."

"அப்புறம்?"

"வடக்கக் கௌம்பு. பாம்பே, டெல்லி, ஆக்ரா, கல்கத்தா, ஜெய்ப்பூர் எல்லாம் சுத்திப் பார். தாஜ்மஹால் பாத்திருக்கியா நீ?"

அக்காவின் கேலியான குரலுக்குப் பதில் சொல்லாமல் குழாயடியில் ஒரு பக்கெட்டை வைத்துவிட்டு, இவன் பெட்ரூமுக்குள் புகுந்து கொண்டான். ஆடைகளைக் களைந்து, லுங்கி கட்டிக் கொண்டு கையில் ஒரு புஸ்தகத்தோடு ஜன்னலை ஒட்டியிருந்த கட்டிலில் சரிந்தான்.

"வீட்ல எஃப்.எம். தொல்லை தாங்க முடிய லைடா."

"எந்த நேரமும் எஃப்.எம். ரேடியோவை அலரவிட்டு உன் படிப்பைக் கெடுக்கறாங்களா?"

"சேச்சே! நான் சொல்ற எஃப்.எம். வந்து ஃபாதர், மதர்! சதா படிபடின்னு ஒரே தொல்லை!

— கமலா கந்தவேல்

கையில் காஃபிக் குவளையோடு அக்கா அந்த அறைக்குள் நுழைந்தபோது, இவன் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

"படிக்கப் போறேன்னு பராக்குப் பாத்துட்டிருக்க?" என்று சீண்டினாள் அக்கா.


"அப்படிச் சொல்லு. ப்ளேன் பாக்கறியாக்கும்? இந்த ஏரோப்ளேன் பாக்கற புத்தி போகவே போகாதே ஒங்களுக்கு!"

"ஏரோப்ளேன் பாக்கற புத்தி" என்று அக்கா குத்திக் காட்டியது இந்த எதிர்கால எஞ்சினியரின் தன்மானத்தைத் தொட்டது.

முகத்தை இறுக்கிக் கொண்டு புஸ்தகத்தால் மூடிக் கொண்டான்.

அக்கா வந்து புஸ்தகத்தை விலக்கினாள், சிரித்தவாறு.

"அதனால என்ன தம்பி, ப்ளேன் பாக்கறது வெக்கப்பட வேண்டிய விஷயமில்ல. வானத்துல சத்தங்கேக்கற போது அண்ணாந்து பாக்கத்தான் தோணும். அது தான் இயற்கை. இந்த மெட்ராஸ் மனுஷங்க, இயந்திர மனுஷங்க, அனாவசியமான கட்டுப்பாட்டோட போலி வாழ்க்கை வாழ்ந்



துட்டிருக்காங்க. ப்ளேன் பறக்கறதப் பாக்கறது அழகு. பறவைகள் பறக்கறது ஓர் அழகு. அதையெல்லாம் ரசிக்க நாம பக்குவப்படணும்டா. சலீம் அலி கேள்விப் பட்டிருக்கியா? பறவைகளுக்காகவே வாழ்க்கையை அர்ப்பணிச்சவர். மனிதன் இல்லாமப் பறவை வாழலாம், ஆனா பறவைகள் இல்லாம மனிதன் வாழ முடியாதுன்னு சொன்னவர். நம்ம பாரதியார் சொல்லலியா, காக்கை குருவி எங்கள் ஜாதின்னு? இப்ப கூட பாண்டிச்சேரில சிவகணபதின்னு ஒரு பறவைப் பிரியர் இருக்கார்னு பத்திரிகைல வந்ததே பாத்தியா?"

"பாக்கல."

"பாக்காட்டிப் பரவாயில்ல. நா என்ன சொல்றேன்னாடா, வாழ்க்கையில பாக்கறதுக்கு, ரசிக்கிறதுக்கு எவ்வளவோ இருக்கு. அதுக்கெல்லாம் இது தான்டா டைம். நீ இன்டர்வியூக்குப் போவ, அப்புறம் வேலைக்குப் போயிருவ, பணம் சம்பாதிக்கிறதுலயே குறியா இருப்ப. அப்புறம் சவுதிக்கோ, ஸ்டேட்ஸுக்கோ போகணும்னு ஆசைப்படுவ. உனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பாங்க. கொழந்த பெத்துக்குவ. அதுகளுக்குப் பால் டின் வாங்கணும், நாப்பி வாங்கணும், அப்புறம் ஸ்கூல்ல போடணும்... இப்படியே காலம் ஓடிரும். ஓர் அருமையான வசந்த காலத்த நெரந்தரமா இழந்துருவ."

"இப்ப என்னக்கா சொல்ற, இந்த இன்டர்வியூ அட்டண்ட் பண்ண வேணாங்கறியா?"

"அப்படித்தான் வைச்சுக்கோயேன். நீ ஃபஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணப் போற. ராங்க் வாங்கினாலும் வாங்குவ. உன்னைத் தேடி எத்தனையோ இன்டர்வியூ வரும். ஆனா இந்த வசந்தகாலம் வருமா?"

"சரி, ஆள விடு, நா குளிக்கல, இன்டர்வியூக்குப் போகல. போதுமா?"

"அட மண்டு, உன்னக் குளிக்க வேண்டாம்னா சொன்னேன்? குளி. பக்கெட் நிறைஞ்சிருக்கும் பார். குளிச்சிட்டுக் கிளம்பு."

வெளி வராண்டாவில் பக்கெட் நிரம்பியிருக்கிறதா என்று பார்த்தான். சென்னை சொட்டு நீர்க் குழாய் தயவில் முக்காலுக்கும் கொஞ்சம் அதிகமாகவே நிரம்பியிருந்தது. பாத்ரூமுக்குள்ளே டவல், சோப் எல்லாம் வைத்து விட்டு பக்கெட்டை எடுக்க வெளியே வந்தவன், சடன் பிரேக் போட்டு நின்றான். பக்கெட்டின் விளிம்பில் கால் பதித்து காகம் ஒன்று தண்ணீர் அருந்திக் கொண்டிருந்தது. அதன் தாகம் தணிந்ததும், 'கா' 'கா'வென்று கரைந்த தன் இனத்தை அழைத்தது. அதன் அழைப்பை ஏற்று இன்னும் இரண்டு காகங்கள் வந்து சேர்ந் தன.

தண்ணீர் பருகிவிட்டு அவையும் கரைய, இன்னும் சில காகங்கள் வந்து தாகந் தணிந்தன. 'காக்கைக் கரவாக் கரைந்துண்ணும்' மட்டுமல்ல, காக்கைக் கரவாக் கரைந்து பருகும் கூட.

ஓசைப்படாமல் ஒரு ஸ்டூலை எடுத்து போட்டுக் கொண்டு, அந்தக் காகங்கள் கலைந்து விடாத தொலைவில் உட்கார்ந்து கொண்டான். அந்தக் கறுப்புப் பறவைகள் நீரைப் பருகுகிற அழகைப் பார்த்துக் கொண்டிருந்தான். இவனுடைய உடலைக் கழுவ சேகரிக்கப்பட்ட தண்ணீருக்கு, சில ஜீவராசிகளின் கோடைத் தாகத்தைத் தணிக்க விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தபோது, சின்னதாய் ஒரு சந்தோஷம்.

"என்ன தம்பி, குளிக்கலியா, இன்டர்வியூவுக்குக் கிளம்பலியா?" என்று பின்னாலிருந்து அக்காவின் குரல் கேட்டது.

அக்காவை அண்ணாந்து பார்த்து, உதட்டில் விரல் வைத்தான்.

"ஸ்ஸ். மெதுவாப் பேசு அக்கா. அது கலைஞ்சிரும். இந்த வேகாத வெயில்ல ஒவ்வொண்ணுக்கும் எவ்ளோ தாகம் பார்!"

அக்கா மெல்ல குனிந்தாள். தம்பியை நோக்கித் தணிந்த குரலில் கிசுகிசுத்தாள்.

"குளிக்கலியா?"

"இல்ல."

"இன்டர்வியூக்குப் போகலியா?"

"இல்ல."

சிரித்தபடி அக்கா, தம்பியின் தலைமுடியை இரண்டு கைகளாலும் சிலுப்பி விட்டாள், மிகச் செல்லமாய்.

இந்த முறை சிரமப்படாமல், ரொம்ப சுதந்திரமாய்....

“சொல்லு தலை! அடுத்த படம் 'மஹா'வா? 'ஜனா'வா? 'ஆஞ்சநேயா'வா? வெற்றிப்படமாக்கிக் காட்டறோம்..." என்று அஜீத்குமாரின் ரசிகர்கள் ஆர்வக் கூச்சல் போட்டுக் கொண்டிருக்க... அஜீத்தோ சைலன்டாக, தாய்லாந்து கார் பந்தயத்தில் கலந்து கொண்டு, ஆறாவது இடத்தைப் பெற்று பெருமையுடன் திரும்பியிருக்கிறார்.

"சர்வதேச அளவில் நடைபெற்ற இந்த 'பீரா ரேஸ் டிராக்' கார் பந்தயத்தில் போட்டி மிகக் கடுமையாக இருந்தது. மொத்தம் பதினெட்டுப் பேர் கலந்து கொண்ட இந்தப் போட்டியில், நான் ஆறாவது இடத்தைப் பிடித்ததை, முதலிடத்தையே பிடித்தது போல் உணர்கிறேன்" என்றார் தலை முடியை ஸ்டைலாகக் கோதியபடி...



"என்ன அஜீத்! திடீர்னு டிராக் மாறிட்டீங்க?" என்று கேட்டால், ரேஸிங் ஆசை ஆரம்பித்த கதையைச் சொன்னார்.

"எங்கப்பாவோட முதலாளி விமல் ஷா, ரேஸ் பிரியர். பிட்டில் சாயர் அண்ட் கம்பெனியின் நிர்வாக இயக்குநரான இவர், வருஷா வருஷம் சோழவரம் ரேஸில் கலந்து கொள்வார். அப்போ, நாங்க ஆழ்வார்பேட்டையிலே குடியிருந்தோம். அந்த வீட்டு காம்பவுண்டு ரொம்பப் பெரிசா இருந்ததாலே, முதலாளியோட ரேஸ் காரையெல்லாம் அங்கேதான் நிறுத்தி யிருப்பாங்க. தினமும் மெக்கானிக்குகள் வந்து பாகங்களையெல்லாம் கழற்றி, பூட்டி, ஓட்டிப் பார்த்து, நல்ல கண்டிஷன்லே இருக்கான்னு சோதனை பண்ணுவாங்க. நான் எப்பவும் அவங்கக் கூடவே பழியா உட்கார்ந்துகிடப்பேன். இன்ஜின் ஹெட்டிலேயிருந்து கார்பனைச் சுத்தம் செய்யறது, நட்டுகளைக் கழற்றி, ஸ்க்ரூ மாட்டறதுன்னு சின்னச் சின்ன வேலையெல்லாம் நானாவே செய்ய ஆரம்பிச்சேன். அப்ப ஆரம்பிச்ச காதல்தான். அப்புறம் ரேஸ் கார்களைப் பற்றி புத்தகங்கள் வாங்கிப் படிக்க ஆரம்பிச்சேன். கார் பந்தயத்தில் கலந்துக்கிறதுக்கு லட்சக் கணக்கில் செலவாகும்னு தெரிஞ்சதும் என் ஆசை அப்படியே அணைஞ்சு போச்சு.

"சரி, கார் ரேஸ்தானே காஸ்ட்லி. மோட்டார் பைக் பவர் ரேஸிங் செய்யலாமே... அதுவும் ஸ்பீடு ஸ்போர்ட் தானேன்னு அதுல கலந்துக்க ஆரம்பிச்சேன். அதுக்கும் எக்கச்சக்கமா பணம் தேவைப்பட்டது. உடனே ஒரு ஏற்றுமதி நிறுவனத்தில் வேலை செஞ்சுக்கிட்டே, பந்தய ஆசையையும் துரத்த ஆரம்பிச்சேன். அப்புறம் நடிகன் ஆனதும், ஷாலினி மனைவியானதும் உங்களுக்கே தெரிஞ்சதுதான்" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தார்.

அஜீத் படப்பிடிப்புகளுக்குச் செல்லும் போது, காவாஸாகி 2x12R நின்ஜா, யமஹா F2R 400 பைக்குகளைத் தாமே ஓட்டிச் செல்கிறார். அதுமட்டுமல்ல... அவரது பந்தயக் கார்களில் 'வில்லன்', 'மஹா' படங்களின் லோகோ இடம் பெற்றிருக்கிறது. இந்திய மூவண்ண நிறமும் 'மஹா' லோகோவும்

டிராக் மாறிப்







வரையப்பட்ட ஹெல்மெட் கூட, அஜீத்தே ஸ்பெஷலாக வடிவமைத்ததுதானாம். மோட்டார் ரேஸைப் பொறுத்தவரை, அஜீத்துக்கு எல்லாமே த்ரில்லிங்கான விஷயம்தான் என்றாலும், அவருக்குச் சோகம் தரும் விஷயமும் இருக்கிறது.

''ஆர்டன் சென்னா' என்பவர், மிகப் பெரிய கார்ப் பந்தய வீரர். நான் அவருடைய பரம விசிறி. பத்து வருஷத்துக்கு முன்னாலே, கரெக்டா என்னோட பிறந்த நாள் அன்னிக்கு அவர் இறந்துட்டாரு. அவரோட திடீர் மரணம் என்னை ரொம்பவே பாதிச்சிருச்சு. அவர் பயன்படுத்தியது போன்ற தொப்பி, மினியேச்சர் ஹெல்மெட், ஆடைகள், மாதிரி வடிவம் கொண்ட கார்கள், போஸ்டர்கள் என நிறைய சேகரித்து வைத்திருக்கிறேன். என் மனைவிக்கு என்னுடைய ஆர்வம் தெரியும் என்பதால், தேடித்தேடி வாங்கி வந்து, என்னுடைய பிறந்த நாளன்று பரிசளிக்கிறார்'' என்றார்.

கார் ரேஸ் காதலிலிருந்து இலேசாக மீண்டு, ஷாலினியின் காதல் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

"ஷாலினியுடன் நட்பு ஏற்பட்டு, பேச ஆரம்பித்த நாட்களில் கூட, நான் அதிகமாக மோட்டார் ரேஸ் பற்றித்தான் பேசியிருக்கிறேன். நான் கார் பந்தயங்களில் கலந்து கொள்வது குறித்து ஷாலினிக்கு ஆரம்பத்தில் ரொம்பவே பயம்தான். ''எதுக்கு ரிஸ்க்?'' என்று சொல்லிப் பார்த்தார். ஆனால் என்னுடைய பேச்சு, மூச்சு, வாழ்க்கையின் சுவாரசியம் எல்லாமே ரேஸிங்தான் என்று அவர் தெரிந்து கொண்டதும், என்னைத் தடுப்பதில்லை. மாறாக, உற்சாகமூட்டவே செய்கிறார்" என்றார்.

போச்சு!



அஜீத்தின் ஆசை?

''மறுபிறவி என்ற ஒன்று இருந்தால், நிச்சயம் F1 டிரைவராக சாதனை செய்யவே ஆசை."

— அனு

நன்றி: சொஸைட்டி

புதுவை
சிறப்புப்
பக்கம்


புலால் மறுக்கும்

* சத்சித்தாமுத்து அடிகளாரின் தியானக்குகையை உள்ளடக்கிய நினைவலாயம்





"மீனு மீனேய்!" என்ற கூவலைக்கேட்டு ஒரு தலை முறையாகிவிட்டதாம் இந்த கிராமத்தில். அடுத்த கிராமத் தில் மீன் விற்க, இந்த ஊர் வழியே செல்கிறவர்கள்கூட, வேகவேகமாய் மீன் கூடை கட்டிய மிதிவண்டியை மிதித்து விடுகிறார்கள். கிராமத்திலிருந்த ஒரே ஒரு ஆட்டு மாமிசக் கடைக்கு, நிரந்தரமாய்ப் பூட்டு விழுந்து நீண்ட காலமாகிவிட்டது. இங்கே நோய் வாய்ப்பட்டு மாடுகள் இறந்துவிட் டால், மாட்டின் தோலை உரித்துக் கொண்டு மாமிசத்தை வெட்டவெளி யில் போடும் வழக்கமிருந்தது. இப்போது இறந்த மாட்டின் தோலை உரிக்க அனுமதியில்லை. ஏன் தெரியுமா? அந்த கிராமத்து எல்லைக்குள் பறவைகளோ, நாய்களோ கூட மாமிசம் உண்ண வேண்டாம் என்று முடிவெடுத்து விட்டார்கள்! புதுவை-தமிழக எல்லையில் இருக்கும் கம்பளிக்காரன் குப்பம்தான், புலால் மறுக்கும் அந்த புதுமை(ன்ல) கிராமம்.



ஓர் ஊரில் ஒருவரோ அல்லது பலரோ அசைவம் சாப்பிடாமல்

இருக்கலாம். ஒரு கிராமமே மாமிசத்தை மறுக்கிறதென்றால், அங்கே ஞானோதயப் புரட்சி அல்லவா ஏற்பட்டிருக்க வேண்டும்! ஊரின் முக்கியஸ்தர்களில் ஒருவரான எஸ்.



• கம்பளிக்காரன்குப்பம் கிராமம்



• எஸ்.வெங்கடாசலம்

புதுமை கிராமம்

வெங்கடாசலம், ஊரின் அசைவம் டு சைவம் திரும்புமுனை பற்றிப் பேச ஆரம்பித்தார்.

"இராமநாதபுரம் மாவட்டம் மானாங்குடி எனும் கிராமத்தில் அவதரித்தவர் தவத்திரு சத்சித்ரமுத்து அடிகளார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெரிதும் விரும்பப்பட்ட ஒரு சில குருமார்களில் இவர் முக்கியமானவர்.

"எங்கள் கிராமத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்திருந்த வீரப்ப முதலியார், அடிக்கடி வள்ளலாரைச் சந்தித்து, அவரது மாணவர் போலவே வாழ்ந்தவர். அவரது மகன் வெற்றிவேல் என்பவருக்கு ஆன்மிகத்தின் பால் நாட்டம் ஏற்பட்டு, ஞானிகளைத் தேடி அலைந்தபோது, இறுதியில் சித்ரமுத்து அடிகளாரைத் தமது குருவாகக் கண்டறிந்திருக்கிறார். வெற்றிவேல், பின்னாளில் தமது பெயரை 'அருள்பிரகாசம்' என்று மாற்றிக் கொண்டு சுவாமிகளைப் பின் தொடர்ந்து செல்ல, ஒரு கட்டத்தில் தமது சொந்த ஊரான கம்பளிக்காரன் குப்பத்துக்கு சுவாமிகளை அழைத்து வந்திருக்கிறார். எங்களுக்கெல்லாம் ஊர்க் காரணம் தெரியாது என்றாலும், 'கம்பளிச்சாமி என்ற ஞானிகள் தியானித்த இடமிது' என்று சித்ரமுத்து அடிகளார் இங்கே வந்தவுடனேயே சொல்லியிருக்கிறார்கள். அதன்பிறகு பலகாலம் இங்கே தங்கிய ஸ்வாமிகள், பூமிக்கடியில் குகை ஒன்றை உருவாக்கி அதனுள் நாற்பத்து எட்டு நாட்கள், தண்ணீர் கூட அருந்தாமல் தியானித்து விட்டு பிறகு வெளியே வந்து தரிசனம் தந்தார். அதன்பிறகு இங்குள்ள மக்களுக்கு ஜீவ காருண்யத்தையும், புலால் மறுப்பையும் போதிக்கத் தொடங்கிவிட்டார். அப்போதே பல குடும்பங்கள் புலால் உணவைத் தவிர்த்து, உறுதி எடுத்துக் கொண்டிருக்கின்றன. அடிகளார் இங்கிருந்து புறப்படும் முன்பு 1951ல் அவர் கையால் இந்த மண்டபத்தில் ஏற்றப்பட்ட விளக்கை அணையா தீபமாக பாதுகாத்து வருகிறோம்." என்கிறார்.

புலால் உணவை ஒட்டுமொத்த கிராமமும் மறுத்து வரும் நிலையில், வீம்புக்காக இறைச்சி வாங்கி வந்து உண்கிற சிலரும் கிராமத்தில் இல்லாமல் இல்லை என்று வருந்துகிறார் கம்பளிக்காரன் குப்பத்தைச் சேர்ந்த அசைவம் துறந்த இளைஞர் நாகராஜன்.

- ஸ்ரீசக்கரம்

படங்கள் : டி.ஜி. சண்முகம்

காட்சி: 58

மாலை / இரவுப் பள்ளிக்கூடத்துக்குள்.

பாத்திரங்கள்: சிறுவர்கள், செல்வம், தெய்வநாயகி, ரேணுகா.

அதே பழைய ஓலை வேய்ந்த இரவுப் பள்ளிக்கூடம். பெஞ்சுகள். ஒற்றைக் கரும் பலகை. துடைக்கும் துணி. ஒற்றை நாற்காலி. ஒரு மேசை. மேசை மேல் நிறைய நோட்டுப் புத்தகங்கள்.

வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது. செல்வம் வகுப்பெடுத்துக் கொண்டிருக்கிறான். தெய்வநாயகி, அங்கு தென்படுகிறாள். நீர் நிரப்பப்பட்ட, தம்ளரை மேசை மேல் வைத்து விட்டுச் செல்கிறாள். வகுப்புக்கு அடுத்த பக்கம் இருக்கும் மறைப்புப் பகுதிக்குள் சுத்தம் செய்கிறாள். பெருக்குகிறாள்...

காட்சி தொடங்கும்போது ஒருவன் படிக்கிறான்.

சிறுவன் 1: நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் இது நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம்...

செல்வம்: நாம் இருக்கிற இடம், வீடு, நாடு, இதெல்லாம் நம்முடையது, இது நமக்குத்தான் சொந்தம்னு நமக்குத் தெரியாதா? இதையெல்லாம் ஒருத்தர் நமக்குச் சொல்லணுமா? சொல்ல வேண்டிய நிலைமையில் தான் நாம் இருந்திருக்கோம். அதாவது வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்ட காலத்துல, இந்தியர்கள் அப்படித்தான் நினைச்சாங்க. ஏதோ இந்த தேசம், வெள்ளைக்காரர்களுக்குத்தான் சொந்தம். அதனாலதான் அவன் நம்மை ஆண்டுகிட்டு இருக்கான்னு நம்பினாங்க. அது உண்மை இல்லேன்னு சொல்ல வேண்டிய நிர்பந்தம், பாரதிக்கு இருந்தது. நாடுன்னா, மண் மட்டும் இல்லை. நம்ம மொழி, நம்ம கலாசாரம், நம்ம உரிமை, நம்ம சுதந்திரம்.

சிறுவன் 2: *விநாயகத் தேவனாய்,*
வேலுடைக் குமரனாய், நாராயணனாய்
நதிச்சடை முடியனாய்
பிறநாட்டிலிருப்போர் பெயர் பல கூறி
அல்லா, எகோவா எனத் தொழுது
இன்புறும் தேவரும்தானாய்...

செல்வம்: பாரதியாரோட முக்கியமான தத்துவம் இது. கடவுள் ஒண்ணுதான். ஒரு சக்திதான். அந்த ஒரு கடவுளைத்தான், சிலர் கணபதின்னு சொல்றாங்க. சிலர் முருகன், சிலர் சிவன், சிலர் பெருமான், சிலர் இயேசு, சிலர் அல்லா... ஆக, கடவுள் ஒருவர்தான். இதுல என்னத்துக்கப்பா சண்டை. ரெண்டு மூணு, நாலு கடவுள் இருந்தாதானே, எது பெரிசுன்னு கேள்வி வரும்? அதனால, கடவுள், மதச் சண்டை வேணாம்...

சிறுவன் 3: அப்பமுன்னா, எங்க ஊர்ல் எதுக்குங்க ஐயா, கிறிஸ்தவங்க, முஸ்லீம்ங்க, இந்துங்கன்னு இத்தனை மதம். எல்லாம் ஒண்ணுதானா? அப்பமுன்னா, கோவில், மாதாக்கோவில், அல்லாக்கோவில்னு எதுக்கு இவ்வளவோ கோயிலுங்க? எங்களுக்குக் குடி இருக்க வீடு இல்லை. இவ்வளவு இடங்களை அந்தக் கோயிலுங்க அடைச்சுக்கிட்டு இருக்கு ஐயா.

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

செல்வம்: அப்படிச் சொல்ல முடியாது. கோயில்கள், சமுதாயக் கூடமா, கலாசாரம் தொடர்பான இடமா, கச்சேரி நடனம் நடக்கிற இடமா இருந்திருக்கு. அதனால, அவ்வளவு பெரிய இடம் தேவைதான். நமக்கு இடம் இல்லைங்கறது, நம்மூர் அரசியல் பண்ற கோளாறு. அதுக்கு நம்ம முன்னோர்கள் என்ன பண்ணுவாங்க? வானத்துல இருக்கிற போது, அதுக்குப் பேர் தண்ணீர். பெய்தா மழை. அது குளத்துல விழுந்தா குளத்துத் தண்ணீர். ஆற்றுல ஆற்றுத் தண்ணீர், கடல் தண்ணீர், அருவித் தண்ணீர். ஆனா, தண்ணீர் ஒன்றுதானே? மதங்கள்ள, பெரிசு

பிரபஞ்சன்



சிறுசு கிடையாது. எல்லாம் ஒன்றுதான். ஒரு மதக்காரன் அதிகமா இருக்கிறாங்கிறதாலே, அவன் மதம் பெரிய மதம் ஆகாது. இந்தியாவுல இருக்கிறவங்க யார் ஆனாலும், எந்த மதக்காரங்க ஆனாலும் எல்லாரும் சமம் தான். இந்தியா, எல்லோர்க்கும் தான் சொந்தம். இந்த மனோபாவம்தான் இந்தப் பாட்டுல முக்கியம்.

(ரேணுகா, பழங்கள் நிறைந்த பையுடன் உள்ளே நுழைகிறாள்)

ரேணுகா: நான் தொந்தரவா இல்லியே...

தெய்வநாயகி: *(கிண்டல் பாவத்துடன்)* இப்போதானே வந்திருக்கீங்க. தொந்தரவா இல்லையாங்கறது போகப் போகத் தானே தெரியும்.

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

செல்வம்: பள்ளி, முடியற நேரம்தான்.

ரேணுகா பழங்களைச் செல்வத்திடம் தருகிறாள்.

செல்வம்: இது எதுக்கு?

ரேணுகா: சாப்பிடத்தான்.

செல்வம்: எதுக்கு வீண் செலவு?

ரேணுகா: பெரிய காரியம் பண்றீங்க. எங்களால ஆனது...

தெய்வநாயகி: அக்கா... உங்களாலதான், பள்ளிக் கூடம் பிழைச்சது. இல்லேன்னா, ரொம்பக் கஷ்டமாகி இருக்கும். செல்வத்துக்கு வேற போக்கிடம் இருந்திருக்காது.

ரேணுகா: அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. நல்லதுக்குத் தொந்தரவு வரும்.

ஆனா, மெல்ல மெல்ல நீங்கிடும்.

தெய்வநாயகி: நீங்குது. ஆனா, மெல்ல, மெல்லன்னா, அது வரைக்கும் நல்லவங்க பிழைச்சுக்கிடக்கணுமே.

ரேணுகா: என்ன பண்றது, தெய்வா? தீமை, ரொம்ப வலிமையா இருக்கு. நன்மை, நோஞ்சானா இருக்கே.

செல்வம்: அல்லது பொறுமையா அதீத பொறுமையா இருக்கு, நன்மை. திரௌபதி வஸ்திராபகரணம் நடக்கிற வரைக்கும் பொறுமையா இருக்கே.

ரேணுகா: ஆனா, அந்த அம்மாளோட மானம் காப்பாற்றப்பட்டதா இல்லையா?

செல்வம்: நிர்வாணத்தை மட்டும் காப்பாற்றி இருக்கலாம். ஆனா, அதுதான் உடம்பா? அது மட்டும்தான் மானமா? சபைக்கு மத்தியில வைச்சு, ஒரு நீசன் துணியை உரியற சந்தர்ப்பம் வரைக்கும் நன்மை அடங்கி, மௌனமாப் போக வேணுமா? இதுதான் கேள்வி.

தெய்வநாயகி: இத்தனைக்கும் அவ, யாருடைய மனைவி? தர்மம் தவறாதவன், வில் வித்தையில நிகர் இல்லாதவன், பலத்துல சமானம் இல்லாதவன் இவர்களோட மனைவி. அவளுக்கே இந்தக் கொடுமை.

தெய்வநாயகி: எனக்கு என்ன தோணுதுன்னா, இந்த மாதிரி ஆட்களோட மனைவியா இருக்கிறதே அவளோட பிரச்னைதான்னு. தனியா, இந்த மனிதர்களோட சார்பு இல்லாத திரௌபதியா இருந்திருந்தா, துணிஞ்சு சண்டை போட்டிருப்பா... உயிரை விட்டிருப்பா.

செல்வம்: இப்பவும் அதுதான் நடந்திருக்கு, தெய்வா. பாஞ்சாலியோட உயிர் கௌரவர் சபையில போயிடுச்சு. ஆனா, மானத்துக்கு வேற பொருள் கொடுக்கிறதுன்னு வியாசர் நினைச்சிருப்பார். பத்து அயோக்கியர்கள் சேர்ந்து, ஒரு பெண்ணை நிர்வாணப் படுத்தினா, அவள் உயிர் போகணுமா? அவசியம் இல்லை. மானம் அழிக்கிறவனோட உயிரைப் போக்கிடறது தான் மானம்னு திரௌபதி முடிவுக்கு வந்திருக்கா. அது சரி. இப்பவும் அது பொருந்தும். போலீஸ்காரனும், சண்டைக்கு வந்த ராணுவக்காரனும் பல சமயங்கள்ளே பாலியல் பலாத்காரம் பண்றான். அதனால அந்தப் பெண்கள் உயிரை மாய்க்கக்கிடணுமா? பாகிஸ்தான் பிரியறபோது, இரண்டு பக்கத்திலயும் ஏராளமான அட்டூழியம் நடந்துச்சு. அப்போ, நம் தலைவர்கள், கற்புக்குப் புதிய பொருள் கொடுப்போம்னு சொன்னாங்க.

தெய்வநாயகி: எல்லாக் காலத்திலயும், வன்முறைன்னா, பெண்கள்தான் கடைசிப் பலின்னு ஆகிப் போச்சு.

செல்வம்: உங்க வீட்டுக்காரரைப் பார்க்கணும், ரேணுகா.

ரேணுகா: எதுக்கு?

செல்வம்: நன்றி சொல்லணும்.

ரேணுகா: நன்றி என்னத்துக்கு?

செல்வம்: இந்த இடத்தைக் காலி பண்ண வேண்டாம்னு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினாரே, அதுக்காக.

ரேணுகா: என்ன, செல்வம், புரியாமப் பேசறீங்க? உங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததும், காலி பண்ண வைக்கவும் காரியம் பண்ணவரே, என் கணவர்தான். ஏதோ காரணத்தால, இப்போ, மனம் மாறி விட்டிருக்கார். இதுக்கு என்னத்துக்கு நன்றி. அவரை நீங்க பார்க்க வேண்டாம்.

> "பொதுக்குழுவுல வெளி நடப்பா? ஏன்?"
>
> "அயோத்தி ராமர் கோவில், பெண்கள் இட ஒதுக்கீடு, காஷ்மீர் பிரச்னை, பொது சிவில் சட்டம், சேது சமுத்திர திட்டம் எல்லாம் 2050ம் வருஷத்துக்குள்ளே முடிக்கணும்னு தலைவர் தீர்மானம் கொண்டு வந்தாராம். அதை எதிர்த்துத் தான்..."
>
> — ஜாங்கிரிதாஸ்

தெய்வநாயகி: ரேணுகா அக்காவுக்கு நன்றி சொன்னா போதாதா? அவங்க தானே இதுக்குக் காரணம்?

ரேணுகா: இல்ல. வேற ஒண்ணு. அதை விளக்கமா பேசவேண்டாம். செல்வம், நீங்க இப்போதைக்குத் தப்பிச்சீங்க. தொடர்ந்து என் பேச்சு எடுபடும்னு சொல்ல முடியாது. நீங்க அடுத்த சில மாசங்கள்ளே வேற இடம் பார்த்துக்கிறது நல்லது.

செல்வம்: அதுதான் சரி. நானும் அது பற்றி யோசனை பண்ணிக்கிட்டு இருக்கேன். பார்ப்போம்.

காட்சி: 59

மதிய நேரம். நீதி மன்றத்துக்கு வெளிப்பகுதி

பாத்திரங்கள்: சுசீலா, அவள் அம்மா,

கண்ணன், கீதா.

சுசீலா, நீதிமன்றத்திலிருந்து வெளி வருகிறாள். சண்முகமும், தன் நண்பர்களுடன் வெளியே வருகிறான். அவன் மகிழ்ச்சியாக இருப்பவன் போல் காட்டிக் கொள்கிறான். சுசீலாவுக்கு முன், தான் பாதிக்கப்படவில்லை என்பதைக் காட்ட அவன் விரும்புகிறான். நீதி மன்றத்தின் வெளியே கண்ணன், கீதா, சுசீலாவின் அம்மா ஆகியோர் நிற்கிறார்கள். சுசீலா வெளியே வந்ததும், அவள் அம்மா, அழத் தொடங்குகிறாள்.

சுசீலா: எதுக்கு இப்போ அழறே? என்ன நடந்து போச்சு? நான் சந்தோஷமா இருக்கேன். நீ புறப்படு... நான் பின்னால வந்து சேர்றேன். கண்ணன் ஒரு ஆட்டோ பிடிச்சு அம்மாவை அனுப்பி வைச்சுடு.



(கண்ணன் அந்த அம்மாவுடன் போகிறான்)

கீதா: என்ன ஆச்சுக்கா?

சுசீலா: விவாகரத்து ஆச்சு.

(மௌனம்)

கீதா: அக்கா. வருத்தமா இருக்கா?

சுசீலா: (தலையசைக்கிறாள்)

இல்ல, கீதா. விவாகரத்து ஆனதுல வருத்தம் இல்லை. சண்முகம் மனைவிங்கிற அவமானம், இந்த நிமிஷம் தொட்டு எனக்கு இல்லை. அது நிம்மதி. ஆனா, இந்த மாதிரி மனுஷனுக்குப் பொண்டாட்டியா வாழ நேர்ந்ததே, அதை நினைச்சா அவமானமா இருக்கு.

(அதே சமயம், சண்முகம், தன் நண்பர்களுடன் அட்டகாசமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு நகர்கிறான். இப்படிச் செய்வது, சுசீலாவைப் புண்படுத்தும் என்று அவன் நினைக்கிறான். கண்ணன் திரும்புகிறான்.)

கண்ணன்: அம்மா, அழுதுகிட்டுதான் போறாங்க.

சுசீலா: அம்மா அழறதுக்குக் காரணமே தேவையில்லை. அழணும். (சிரிக்கிறாள்.)

கண்ணன்: அவங்களுக்குத் துக்கம் இருக்காதாக்கா?

சுசீலா: எதுக்கு துக்கம்?

கண்ணன்: மகள் விவாகரத்து, அம்மாவுக்குச் சந்தோஷமா இருக்குமா?

சுசீலா: மகளுக்கு இப்படிப்பட்ட புருஷனைத் தேடிப் பிடிச்சுக் கல்யாணம் பண்ணி வைச்சோமேன்னு துக்கப்பட்டா நியாயம். இந்தப் பேய் என்னை விட்டு விலகிடுத்துன்னு சந்தோஷம் இல்ல படணும். எனக்குக் காபி சாப்பிடணும் போல இருக்கு. வாங்க...

(மூவரும் நடந்து, ஓர் உணவு விடுதிக்குப் போய் அமர்கிறார்கள்.)

காபிக்குச் சொல்கிறான் கண்ணன்.

சுசீலா: (தலைகுனிந்து இருந்தவள் நிமிர்ந்து...)

கடைசி நேரத்திலும் என்னை அவமானப்படுத்திட்டார், அந்த ஆள்...

(தொடர்ந்து அவள்...)

நான் ஏதோ கெட்டவள்னு என்ன என்னமோ சொன்னார்.

கீதா: அக்கா. அவர் உங்களுக்குச் செய்ததைச் சொன்னீங்களா?

சுசீலா: ஆரம்பத்துல நீதிபதி அம்மாக்கிட்ட ஒரு முறை சொன்னேன். அப்புறம், எனக்கே இது அவமானமாப் போச்சு. அவமானம், ஒழுக்கக் கேடுகளைத் திருப்பிச் சொல்றதும், நினைக்கிறதும் கூட அவமானமாத்தானே இருக்கு. அப்பப்பா... இப்ப நிம்மதியா இருக்கு.

(காபியை அருந்துகிறாள்)

கண்ணன்: இப்ப, அந்த ஆள், என்ன கலாட்டா பண்ணிட்டுப் போறார் பார்த்தியா? அடுத்து எந்தப் பெண் ஏமாறப் போறாளோ? அதை நினைச்சாத்தான் சங்கடமா இருக்கு.

கீதா: இவனுக்கும் பெண் கிடைக்கும். பணம், சீர், ஸ்கூட்டர் அல்லது பணம், இன்னொரு கட்டில், பீரோ எல்லாம் கிடைக்கும்.

சுசீலா: நகை?

கீதா: ம். அதுவும் தான். நீங்க போட்டுக்கிட்டுப் போன நகையெல்லாம் என்ன ஆச்சு?

சுசீலா: போன அன்னைக்கே, என் மாமியார் நகைகளையெல்லாம் வாங்கி வைச்சுக்

கிட்டா. விசேஷம்னா, கொடுப்பா. அப்புறம் வாங்கி வச்சுக்குவா... வரும்போது, எல்லாம் அந்த அம்மாகிட்டவே தங்கிடுச்சு... அதைப் பத்தி என்ன, கீதா இதெல்லாம் எனக்கு இழப்பாவே தோணலை. எனக்கே தெரியாமே, ஒரு வாழ்க்கையை, எனக்குத் தெரியாத ஒரு மனுஷன்கிட்ட ஒப்படைச்சுட்டு, அப்புறம் விழிச்சுக்கிட்டு, வெளியே வந்த என் முட்டாள்தனத்தை நினைச்சாத்தான் வெட்கமா இருக்கு.

கீதா: இதுல யாரோட தப்பும் இல்லைக்கா. நம்ம கல்யாண அமைப்பே அப்படி இருக்கு. பெண்களோட கல்யாணம் கிட்டத்தட்ட லாட்டரிச் சீட்டு மாதிரி தானே? விழுந்தா சந்தோஷம். இல்லேன்னா, ரத்து. ஆக மொத்தத்திலே, நஷ்டம் நமக்குத்தான்.

சுசீலா: நஷ்டம் என்ன நஷ்டம். எதையும் விட்டதா நினைச்சாதானே, நஷ்டம். கெட்ட கனவு, விடிஞ்சா மறைஞ்சுடும். எனக்கு விடிஞ்சதா நினைக்கிறேன்.

(வெளியே வருகிறார்கள். அவர்களுக்கு முன்னே தெரு நீள்கிறது.... நடக்கிறார்கள்.)

கண்ணன்: கீதா, ஒருத்தரோட ஒருத்தர், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமே, நிபந்தனை இல்லாமே நேசிக்க முடியாதா?

கீதா: முடியும். முடியாம என்ன கண்ணன்? தன்னையே சுட்டுக்கிட்டுச் செத்தானே, வாஞ்சிநாதன், அது நேசம் இல்லையா? செக்கிழுத்ததும், தூக்குல தொங்கினதும் நேசம்தானே? லைலாவுக்காகப் பைத்தியம் ஆனதும், நேசம்தானே காரணம். முடியும்.

சுசீலா: தேசத்துக்காக. சரி, கட்டிக்கிட்டு, இனி எல்லாம் நீதான்னு வர்ற மனைவி கிட்ட நேசம் வேணாம்? இவ ஒரு மனுஷின்னுகூட நினைக்காம மனுஷங்களாலே எப்படி இருக்க முடியறது?

கண்ணன்: முடியுதேக்கா. பரிபூர்ணமா அன்பு செலுத்தற மனசுக்குள்ள இது மாதிரி வக்ரமும் இருக்க முடியும். வெள்ளரிக்காயில் கசப்பு இருக்கு. பழங்கள்ளே புளிப்பு இருக்கு. நல்லது சாத்தியம்னா, கெட்டதும் சாத்தியம்தாங்கா...

(அவர்களுக்கு முன் பாதை நீண்டு போகிறது. இருட்டு. இருட்டைத் தெரு விளக்குகள் விரட்ட முயல்கின்றன.)

(தொடரும்)

* நன்றி : நக்கீரன்



'பழி தீர்த்துக் கொண்டதா போலீஸ்!' கட்டுரையில் ('கல்கி' 10.8.03) ''ரௌடி வீரமணிக்கு திருந்த ஒரு வாய்ப்பு அளித்திருக்கணும்'' என்று சொல்லியிருந்தார் எம்.பி. நிர்மல். அது பற்றி வாசகர்களின் கருத்துகளைக் கேட்டிருந்தோம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில கடிதங்கள் இங்கே தரப்படுள்ளன.

- ஆர்

திருந்த ஒரு வாய்ப்பு?

வாசகர் விமர்சனம்

கொலை, கொள்ளை உள்பட கொடுமையான குற்றங்களின் மூலமாக, மூன்று தலைமுறைக்கு வேண்டிய அளவு பொருளீட்டிய பிறகு ஒரு நபர் திருந்தி வாழ அனுமதிக்கப்பட்டால், வேலையின்றி வாடும் கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு இது நல்ல தொழிலாகக் காட்சியளிக்கும் என்பதை நிர்மல் கவனத்தில் கொள்ளவில்லை.

- பா. லோகநாதன், சென்னை

வெட்டு, குத்து, கொலை, கட்டப் பஞ்சாயத்து, ஆள் கடத்தல் ஆகியவற்றின் மூலம் தமிழகத்திலேயே மோசமான ரௌடியாகக் கோலோச்சிய வீரமணிக்குக் காலம் தந்த நியாயமான தீர்ப்புத் தான் துப்பாக்கிச் சூடு.

மனிதனுக்கு நல்லது கெட்டது எது என்பதைப் பிரித்தறியும் சக்தியை இயற்கை அளித்திருக்கிறது.

இவற்றையெல்லாம் தவற விட்டுவிட்டு, சட்டம் கழுத்தை நெறிக்கும்போது, ஒரு மனிதனுக்கு ஞானோதயம் பிறக்கிறது என்றால், நம்பும்படியில்லை.

கொள்ளைக் கொலைகாரியாயிருந்து, பின் பொது மன்னிப்புப்பெற்று, எம்.பி.யாகி, சுட்டுக் கொல்லப்பட்ட பூலான்தேவியின் செயலிலாவது ஓரளவு நியாயமிருந்தது. ஏனெனில் அவளும், அவளுடைய குடும்பத்தினரும் பெரும் பணக்காரர்களால், மிராசுதாரர்களால் துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஆனால், வீரமணியின் அடாத செயல்களில் என்ன நியாயமிருக்கிறது?

- சாலை உமர், சென்னை

ரௌடியே ஆனாலும் அவனும் ஒரு மனிதன்தானே? அவன் மீதுள்ள குற்றங்களுக்காக அவனை நீதி மன்றத்தில் விசாரித்து விட்டல்லவா, தண்டனை வழங்க வேண்டும்? காவல் துறை, அவசரம் காட்டியது ஏனோ?

- ராஜா ராமலிங்கம், பெங்களூர்

வீரமணி என்ன தேசத் தியாகியா?

விஞ்ஞானியா? இந்த மாதிரி ரௌடிகளுக்கு எம்.பி. நிர்மல் போன்றவர்கள் பரிவு காட்டுவது விந்தையிலும் விந்தை. வீரமணி திருந்துவதுபோல் நடித்திருக்கலாம். இன்றைய அரசியல்வாதிகள்கூட, ரௌடிகளாகத் திரிந்து, பின்பு சொந்த, பாதுகாப்புக்கு கட்சி ஆரம்பித்து அரசியல்வாதி வேஷம் போடுவதைப் போல, வீரமணியும் 'சமூக சேவை' என்ற போர்வை போர்த்தி, ரௌடி ராஜ்ஜியத்தை மறைக்கத்தான் நிர்மலை நாடியுள்ளான்.

உண்மையில் திருந்த நினைத்திருந்தால் கோர்ட்டில் சரண் அடைந்திருப்பானே! அதை ஏன் செய்யவில்லை?

- சாந்தா நாராயணன், கடலூர்

நேற்றுவரை பயங்கர சமூக விரோதியாக கருதப்பட்ட வீரமணி போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரே காரணத்தால், இப்போது போதி மரத்தடி புத்தராகச் சித்திரிக்க முயற்சி நடக்கிறது. மனித உரிமை மீறல் வீரமணியின் சாவுக்கு மட்டும்தானா? வீரமணியால் சாகடிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு இல்லையா? மக்கள் விரோத, சமூக விரோத சக்தி ஒன்று, என்கவுண்டரில் பலியானதற்கு எம்.பி. நிர்மல் போன்ற சமூக சேவையாளர்கள்கூட வருத்தம் தெரிவிப்பது, வியப்பாக மட்டுமல்ல, வேதனையாகவும் இருக்கிறது.

- பிரகதீஸ்வரி இராஜப்பன், அறந்தாங்கி

வீரமணி திருந்தியிருந்தால் வால்மீகி ராமாயணம் கிடைத்திருக்காது என்றாலும், அவனது கடைசி விருப்பப்படி, ஒரு சிறந்த நீச்சல் வீரன் தமிழ் நாட்டிற்குக் கிடைத்திருக்கலாம். பல அரசியல்வாதிகள் மற்றும் போலீஸ்காரர்களின் பகடைக்காயாக இருந்து, பின்பு பாகற்காயாகத் திரிந்து, கடைசியில் பாடையில் இறந்துபோன வீரமணிக்கு, நிர்மல் சொன்னதுபோல ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கலாம். இனியாகிலும் திருந்தி வாழ ஆசைப்படுபவர்கள் யார் யாரெனக் கண்டறிந்து, அவர்கள் வாழ்வுக்குத் திருப்பு முனையாக விளங்குமா காவல்துறை? இல்லை 'மாமூல்' வாழ்க்கை பாதிக்கப்படும் என்றெண்ணி, என்கவுண்ட்டர் சாவுகளில் கின்னஸ் சாதனை படைக்குமா?

- கிருஷ்ண. ராஜ்கோபால், சென்னை

பதவிக்கும் பணப் பெட்டிக்கும் ஆசைப்பட்டு கொள்கைக்கே சமாதி கட்டுவோரை ஆதரிப்பதைவிட, சூழ்நிலையால், வறுமையால் - சமூக விரோதிகளாகி, பின்னர் திருந்தி வாழ நினைப்போருக்கு ஒரு வாய்ப்பளிப்பதில் தவறேதுமில்லை.

பல ரௌடிகளைத் திருத்தி நல்வழிப்படுத்தியிருப்பதாக நிர்மலே கூறுகிறார்.

மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு சட்டம், துணையாக இருக்க வேண்டுமே தவிர, சுமையாகவோ, தடையாகவோ இருக்கக் கூடாது.

- க. தியாகராசன், குடந்தை

தங்களுக்கு ஆதாயம் கிடைக்கும் வரை ரவுடிகளை ஆதரிப்பதும்... தங்களுக்கு ஆபத்து என்னும்போது சுட்டுத் தள்ளுவதும் காவல்துறையின் கலாசாரம் ஆச்சே... மனிதனாக வாழ ஆசைப்பட்ட வீரமணிக்கு ஒரு வாய்ப்பு வழங்கி இருக்கலாம்.

- ஜெயப்பிரகாஷ், பொள்ளாச்சி



''கள்ளச் சாராய கபாலியை புது இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்கு அழைச்சிட்டு வரச் சொல்லி வாங்கு வாங்குன்னு வாங்கிட்டாராம்.''

''ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி ஏன் வாங்கணும்...? வீட்டுலயே அவன் கொடுத்துடுவானே!''

- சீர்காழி வி. ரேவதி

சித்திர திருவிளையாடல் புராணம்

பல வண்ணப்படங்களுடன் - தமிழ் வசனத்துடன்

430 பக்கங்களில் – 18 செ.மீ. X 25 செ.மீ. அளவில்

விலை ரூ. 300/– முன்வெளியீட்டுச் சலுகை விலை ரூ. 200/–

ஓவியம் :
எஸ். ராஜம்

வசனம் :
இரா. அரங்கசாமி

பொறுப்பாசிரியர் :
டாக்டர் நா. மகாலிங்கம்

பதிப்பித்து வெளியிடுபவர்
அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்

விற்பனைக்கு விடுப்போர்
வர்த்தமானன் பதிப்பகம்

ஆலவாய் அண்ணலின் அற்புதத் திருவிளையாடல்கள் !

காப்பியங்களைக் கற்றுக் கருத்துக்களை உள்ளத்தில் இருத்துதல் கடினம் ! ஆனால் ஓவியங்கள் வாயிலாகக் கண்ணில் தோன்றும் காட்சிகள் உள்ளத் தடத்தில் கல்வெட்டாக நிலைத்து எளிதில் பயன் தரும்.

அரியவை அரியவை என மக்கள் பேசும் அரிய செயல்களை எல்லாம் இறைவன் விளையாட்டாக எளிதாகச் செய்து காட்டுகிறார் என்பதை விளக்குவதே திருவிளையாடல் புராணம்!

“காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி” என்ற மாணிக்கவாசகப் பெருமானின் கூற்றுக்கு இணங்க முழுமுதற் கடவுளாகிய சோமசுந்தரப் பெருமான் செய்தருளிய செயற்கரும் செயல்களை “விளையாட்டு” என்று கூறி வருவது பண்டைக்காலம் தொட்டு வழங்கி வரும் ஒரு மரபாகும். இதே கருத்தை உமாபதி சிவாசாரியரும் “ஏற்ற இவை அரன் அருளின திருவிளையாட்டாக இயம்புவார்கள்” என்று கூறுகின்றார்.

அடியவர்க்காக - எளியவர்க்காக இறைவன் கூலியாளாக வருவதும், மண் சுமப்பதும், பிரம்படி படுவதும், பொற்கிழி தருவதும் சிந்திக்கத்தக்கன. எத்தகைய உயர் நிலையினராயினும் அந்நிலையிலிருந்து இறங்கி வந்து எளியவர்க்கு உதவ வேண்டும் என்ற உண்மையை இறையனாரின் திருவிளையாடல்கள் உணர்த்துகின்றன!

பல நூறு பக்கங்களாகப் பரந்து விரிந்து கூறத்தக்க கருத்துக்களை, மிக உயர்ந்த சித்திரங்களின் வாயிலாக இந்நூல் விளக்குகிறது!

இந்நூலினைத் தபாலில் பெற : சலுகை விலை ரூ. 200/– மற்றும் பதிவுத் தபால் + கட்டுச் செலவு ரூ. 40/– சேர்த்து ரூ. 240/–யினை மட்டும் (M.O./DD) 27–8–2003 க்குள் அனுப்பி பெயரினைப் பதிவு செய்து கொள்க. 4–9–2003 லிருந்து பணம் வந்த வரிசைப்படி, நூலானது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

நேரில் பெற : எமது அலுவலகத்தில் ரூ. 200 மட்டும் செலுத்தி (27–8–2003 க்குள்) முன் பதிவு செய்து ரசீது பெற்றுக் கொள்க. ரசீதில் குறித்த தேதியில் நூலினைப் பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை. ஞாயிறு விடுமுறை

முகவரி : வர்த்தமானன் பதிப்பகம், 40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017.
(உஸ்மான் சாலை - கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

முக்கிய குறிப்பு : Cheque (Local உள்பட) ஏற்கப்படமாட்டாது. M.O./DD அனுப்புவோருக்கு நூல்கள் தபாலில்தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது.

பித்ரு காரியம் என்பது வீணான காரியம் என்று நினைக்கலாமா...? அதை சாஸ்திரம் எவ்வளவு தூரத்துக்கு எளிமைப் படுத்தித் தருகிறது என்பதைப் பார்த்தோம். நம் சந்ததிகளெல்லாம் பிற்காலத்தில் நல்ல முறையிலே வளர வேண்டுமானால், இந்த பித்ரு தேவதைகளின் அனுக்ரஹம் வேண்டும். ஆகவேதான் ஓஹோ என்று இல்லா விட்டாலும், கிரமமான முறையிலே இந்த பித்ரு தேவதைகளை நாம் நடத்த வேண்டும்.

மேலும், இந்தப் பித்ரு தேவதாராதனம் மூலம் ஆராதிக்கப்படக்கூடியவன் யார் என்று கேட்டால், பகவான் நாராயணன் தான் என்று சொல்லப்படுவதனாலே, நாம் பித்ரு காரியங்களை பக்தி சிரத்தையோடு செய்தல் வேண்டும்.

ராமாயணத்திலே ஜாபாலி என்பவர் அயோத்யா காண்டத்திலே வருகிறார்... நிரீச்வர வாதம் பண்ணுகிறார்: "அப்பாவாவது, பிள்ளையாவது! யார் அப்பா? யார் பிள்ளை...? இங்கே வைக்கிற பிண்டம் அங்கே எப்படிப் போகும்?" என்று கேட்டார். ஸ்ரீ ராமனையே



பார்த்துக் கேட்டார் அவர்!

எள்ளையும் தீர்த்தத்தையும் கட்டை விரலினால் விட்டால், அது எங்கே போகிறது என்பது இப்போது கேள்வி...

இங்கேயிருந்து ஒருத்தர் மூட்டை கட்டிக் கொண்டு கிளம்புகிறார். பிள்ளையிடமும் மருமகளிடமும் சொல்லி விட்டுப் புறப்படுகிறார். விமானத்தில் இரவு பதினொரு மணிக்குப் போய் டெல்லியில் சேர்ந்து விட்டார். சேர்ந்த பிற்பாடு, அங்கேயிருந்து ஃபோன் பண்ணுகிறார்.

குறையொன்றுமில்லை 4



'சௌக்கியமாக வந்து சேர்ந்து விட்டேன்' என்கிறார்.

மறுநாள் அதிகாலை, பிள்ளை சாப்பிட உட்கார்ந்தார். எப்போதும் அப்பா பக்கத்திலே உட்கார்ந்து சாப்பிடுகிற வழக்கம். இவர் என்ன பண்ணினார்... பக்கத்திலேயே ஓர் இலையைப் போட்டார். எல்லா பதார்த்தங்களையும் அதிலே வைத்துப் புரோக்ஷணம் பண்ணினார்...

"ராஜதானியிலே இருக்கிற எங்கள் அப்பாவை உத்தேசித்து, இது மொத்தத்தையும் இங்கே சமர்ப்பிக்கிறேன். இது மொத்தம் டெல்லியிலே போய், அங்கே பூரணமான ஆனந்தத்தை அவருக்குக் கொடுக்கட்டும்..." என்றார். உடனே அது மொத்தம் டெல்லிக்குப் போய் விடுமா...?

பூலோகத்தில், இரண்டாயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள இடத்துக்கு நம்மாலே அனுப்ப முடியவில்லை... அவ்வளவு ஏன், பக்கத்து வீதிக்கு அனுப்ப முடியுமா?

– இந்த மாதிரியெல்லாம் சாஸ்திரமே அழகாக வகை வகையாகக் கேட்கிறது. ஜாபாலி என்கிற பாத்திரம் மூலம் ராமாயணத்தில் கேட்கிறது.

இதற்குப் பதில் என்ன...?

நமக்கு ஒரு விஷயத்தில் ஞானம் இல்லை என்றால், அது இல்லை என்று சொல்லிவிட முடியுமா? நமக்கு ஞானமில்லாது போனால் என்ன, இன்னொருத்தருக்கு அந்த ஞானம் இருக்கிறதே!

ஆகவே, தெரியாத ஒன்றை இல்லை என்று சொல்கிற அதிகாரம் யாருக்கும் கிடையாது.

நாம் மனிதர்களாகப் பிறந்ததாலேயே எல்லா

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சக்தியும் நமக்கு வந்து விடுமா...?

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்ய வாய்
கொப்பளிப்பக்
குறுவெயர்ப் புருவம் குழலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதின
போது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந்து இறங்கிச் செவி
ஆட்டகில்லாவே.

_ பகவான் வேணுகானம் பண்ணுகிறான். அந்த சமயத்திலே பக்ஷி கணங்களெல்லாம் அப்படியே உபன்யாஸத்திலே வந்து உட்காருகிற மாதிரி எதிரே வந்து உட்கார்ந்து விடுமாம்; வேணுகானத்தைக் கேட்குமாம். மாடுகளெல்லாம் இருக்கிறது பாருங்கள் _ பசுமாடுகள்... எதிரே படுத்துக் கொண்டு பகவானுக்கு எதிரில் ஒரு காலை நீட்டிக் கொண்டு, செவியாட்டாமல் அமைதியாய் இருக்கின்றன.

பசுக்கள் எப்போதும் காதை ஆட்டிக் கொண்டே இருக்கும். ஆனால் பகவான் வேணுகானம் பண்ணுகிறபோது, அப்படியே காதை ஆட்டாமல் வைத்துக் கொண்டிருக்குமாம்... எந்த க்ஷணம் போய் விடுமோ அந்த ரஸம் என்று அப்படியே வைத்துக் கொண்டிருக்குமாம்.

காதை ஆட்டுவது என்பது பசுவுக்கு இயற்கையாக அமைந்திருக்கிறது. பசுவைப் போல நம்மால் காதை ஆட்ட முடியுமா...? நம்மைக் காட்டிலும் பசு மட்டம்தானே! ஆனால், நாம் காதை ஆட்ட வேண்டுமானால், இரண்டு கைகளையும் இப்படிப் பிடித்துக் கொள்ள வேண்டும்; பிடித்துக் கொண்டு, கைகளால்தான் காதை ஆட்ட முடியும்!

கொஞ்சம் நாள் யோக சாஸ்திரத்திலே கை தேர்ந்தால், ஒரு பதினைந்து வருஷம் சிரமப்பட்டால், அந்த நரம்பை மாத்திரம் அசைக்க முடியுமேயொழிய, பசு காதை ஆட்டுகிற மாதிரி நம்மால் ஆட்ட முடியாது!

காதை ஆட்டுவதற்காகவாவது பிரயத்தனப் படலாம்; ஆனால், இன்னொன்றை நம்மால் செய்ய முடியவே முடியாது! பசு இருக்கிறதே... அது தவிடைச் சாப்பிடுகிறது; வைக்கோலைச் சாப்பிடுகிறது; புண்ணாக்கு சாப்பிடுகிறது; ..... இதையெல்லாம் சாப்பிட்டுவிட்டு, சர்வோப்ய ஜீவமான க்ஷீரம்

> "மாப்பிள்ளை ரொம்பவும் குழந்தைத் தனமான ஆளு..."
> "எப்படிச் சொல்றீங்க...?"
> "பொண்ணுக்கு நகை போட வேண்டாம்... அதுக்குப் பதிலா 'பிஸ்கட்டா' குடுத்துடுங் கன்னு சொல்றாரு!"
>
> _ ஜே. தனலட்சுமி

_ பாலைக் கொடுக்கிறது. பசு சாப்பிடுவது மொத்தத்தையும் நாம் சாப்பிட்டால், பசுவினிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய பால் நம்மிடத்தில் கிடைக்குமா...! அதற்கு அதிகாரி பசுதான்! பசுதான் கொடுக்க முடியும்.

'சதமானம் பவதி' என்று அக்ஷதை போட்டார் ஒருத்தர். அவர்தான் போட வேண்டுமோ? நாமே நமக்குப் போட்டுக் கொள்ளக் கூடாதா என்று கேட்பது போல் தான் இது! நாமே நமக்குப் புண்ணாக்கு போட்டுக் கொண்டு பால் வழங்க முடியுமா! அதே மாதிரி தான், வேதாந்தத்தை நன்கு உணர்ந்தவர்கள்தான் இன்னொருத்தரை ஆசீர்வாதம் பண்ண முடியும். _ அவருக்குத்தான் அருகதை உண்டு.

எல்லாவற்றுக்கும் எல்லாரும் அதிகாரி ஆகிவிட முடியாது.

இதைத்தான் குலார்ணவம் என்கிற கிரந்தத்திலே ஈசுவரனே சொல்கிறார்! சுவாமி தேசிகன் எடுத்துக் காண்பிக்கிறார் இதை... இப்படிப் பல விஷயங்கள் சாஸ்திரத்தில் உண்டு.

ஸ்பரிச தீக்ஷா என்பது பறவைகளுக்கு உரியது. நல்ல காற்று அடிக்கிறது... மழை பெய்கிறது. தாய்ப் பறவையினாலே வெளியிலே போக முடியவில்லை. குஞ்சுகளெல்லாம் கத்துகிறது. தாய்ப் பறவை என்ன பண்ணுகிறது.....? குஞ்சுகளையெல்லாம் இறக்கையினாலே சேர்த்து அணைத்துக் கொள்கிறது. அணைத்துக் கொண்ட உடனேயே, குஞ்சுகளுக்கெல்லாம் பசி போய் விடுகிறது. ஸ்பரிச தீக்ஷா என்பது இதுதான். இந்த மாதிரி நம் கிருஹத்திலே குழந்தை அழுததானால், அதைக் கட்டி அணைத்துக் கொண்டால், அழுகை ஜாஸ்தியாகிவிடும்! நமக்குக் கொடுக்கவில்லையே அந்த தீக்ஷையை.

அடுத்து த்ருக் தீக்ஷா... ஜலத்திலே இருந்து வெளியிலே எடுத்துப் போட்டு விட்டோமானால் மீன் துடிதுடித்து மாண்டு விடுகிறது... அந்த மாதிரி அல்ப பிராணி அது. ஆனால், மீனுக்கு இருக்கிற சக்தி



நமக்கு இருக்கிறதா...? தாய் மீன் இப்படி வரும், சேய் மீன் அப்படி வரும்... இரண்டுக்கும் இடையிலே இடைவெளி இருக்கும். இரண்டும் ஒன்றை ஒன்று பார்க்கும்... பார்வையினாலேயே பசியைப் போக்கி விடும் மீன் ஜாதி! அந்த மாதிரி சக்தி நமக்கு இருக்கிறதா....?

ஆழ்வார்பேட்டையில் ஓர் ஆமை குட்டி போடுகிறது. குட்டி ஆமையைக் கொண்டு போய் அடியேன் என்னுடைய கிருஹத்திலே கிணற்றிலே போட்டுவிட்டேன். தாய் ஆமை இங்கே இருக்கிறது; குட்டி அங்கே இருக்கிறது.... தாய் ஆமை சுற்றிச் சுற்றிப் பார்க்கிறது... குட்டியைக் காணோம். உடனே அது கண்ணை மூடிக் கொள்கிறது. மூடிக் கொண்டு, தன் குட்டி எங்கு இருந்தாலும் அதற்குப் பசி நீங்கட்டும் என்று ஸ்மரண மாத்திரத்திலேயே பசியைப் போக்குகிறது. ஆமைக்குப் பகவான் இப்படியொரு சக்தியைக் கொடுத்திருக்கிறான். நம்மாலே முடியுமா?

ஆமை, பறவை, மீன்... இவையெல்லாம் நம்மைக் காட்டிலும் மட்டமானவை. மனிதனுக்கு அதிகமான சக்தியை பகவான் கொடுத்தாலும் இவையெல்லாம் இல்லையே!

ஆமை ஸ்மரண மாத்திரத்தில் பசியைப் போக்குகிறதே, அந்த மாதிரி நாமும் பக்தி சிரத்தையினாலே இங்கே பிண்டப் பிரதானம் பண்ணினால், ஏன் பித்ரு லோகத்துக்குப் போய் அது திருப்தி அளிக்காது. அவ்வாறு நிச்சயம் அளிக்கும் என்கிற பூரண விச்வாசம் நமக்குவேண்டும்.

இன்னொரு கேள்வி இங்கே எழும்... தந்தை சரணாகதி பண்ணி, வைகுண்டத்துக்குப் போய்விட்டார். அங்கே நித்ய சூரிகள் கோஷ்டியிலே நின்று கொண்டிருக்கிறார். இங்கே இவர் - மகன் - சிராத்தம் பண்ணுகிறார். இந்த சிராத்தமானது, நித்ய சூரிகளிடையே இருக்கிற அப்பாவுக்குப் போய்ச் சேர்ந்து திருப்தி அளிப்பதாவது! வைகுண்டத்திலே கூட பிண்டம் இருந்தால்தான் திருப்தி அடைய முடியுமா? இப்படிச் சொன்னால், அது வைகுண்டத்திலே இருக்கிற ஆனந்தத்துக்கே இழுக்கு அல்லவா! ஆகையினாலே இன்னொன்றை அந்த வைகுண்டவாசம் எதிர்பார்க்கலாமா...?

இந்த இடத்திலே அவருக்கு – அப்பாவுக்கு ஆனந்தத்தை அளிக்கிறது என்றால் அப்படி அர்த்தம் கொள்ளலாகாது.

பித்ரு தேவதைகள் – ருத்ரான், வசுக்கள் ஆதித்யாள் என்று இருக்கிறார்கள். பித்ரு காரியத்தில், நாம் அப்பா - அம்மா பேரைச் சொல்லி, கோத்திரத்தைச் சொல்லி, அன்றைய தினம் பித்ரு காரியம் பண்ணினால், அந்தக் காரியத்தினால் திருப்தி அடைபவர்கள், நமக்கு அப்பா - அம்மாவாக இருந்துவிட்டுப் போனவர்கள் அல்ல... பித்ரு லோகத்தில் இருக்கக் கூடிய பித்ரு தேவதைகள் திருப்தி அடைகிறார்கள். அவர்களுடைய அனுக்கிரஹத்தினாலே நம்முடைய சந்ததிகள் மேன்மையுறுகிறார்களேயொழிய, வைகுண்டத்திலே இருக்கிற அப்பாவுக்குப் போய்ச் சேருவது இல்லை நமது பித்ரு காரியம்!

தாய் - தந்தைக்குக் கர்மா பண்ணின உடனேயே சம்பந்தம் அறுபட்டுப் போகிறது. பிதா - புத்ர சம்பந்தம் அப்புறம் ஏது?....

பிறகு அவன் செய்யும் பித்ரு காரியங்கள் எல்லாம் பித்ரு தேவதா ஆராதனம்.

பித்ரு தேவதைகளை ஆராதிக்க வேண்டும் என்பது தொண்ணூற்றாறு விதமான சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதனாலே, பீஷ்மருடைய திவ்யமான தினத்தில் அதைச் செய்யச் சொல்லியிருக்கிறது. பீஷ்மாச்சார்யார் உயர்ந்த கதியை அடைந்தார். சில சமயம், பித்ரு தேவதைகள் உயர்ந்த கதியை அடையாமல், எங்கேயாவது அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பார்கள். 'நம் வம்சத்தில் ஒருவன் உதித்து, பித்ரு காரியம் பண்ண மாட்டானா?' என்று கஷ்டப்பட்டுவார்கள்.

அப்படி ஒருவன் தோன்றி, பண்ணுகிற போது அவர்களும் உயர்ந்த கதியை அடைவார்கள்.

ஆகவேதான் பீஷ்மர் முக்கியமான தினத்தில் பித்ரு காரியம் பண்ணவேண்டும் என்கிறது. பித்ருக்கள் பரம சந்தோஷம் அடைந்து அனுக்ரஹம் பண்ணுவார்கள். பீஷ்மருக்குக் கிடைத்த உயர்ந்த முக்தி அவர்களுக்கும் கிடைக்கும்.

(வளரும்)

இவ்வாண்டின் சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற கொங்கணா சென் சர்மா, திரைப்பட விருது விழா ஒன்றில் கலந்து கொள்வற்காக சென்னைக்கு வந்திருந்தார். அவரைச் சந்திப்பதைவிட வேறென்ன பிரமாதமான வேலை?

மிஸ்டர் அண்டு மிஸஸ் ஐயர் படத்தில் நடித்தபோது, உங்களுக்கு தேசிய விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?

இல்லை; விருதை எதிர்பார்த்து நான் நடிக்கவில்லை. ஆனால் விருது கிடைத்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்.

படத்தில் நீங்கள் தமிழ்ப் பெண்ணாக நடித்தீர்களே! தமிழ் தெரியாத உங்களை அந்தக் கேரக்டரில் நடிக்க உங்கள் அம்மாவும் டைரக்டருமான அபர்ணாசென் எப்படித் தேர்ந்தெடுத்தார்?

என் அம்மாவிடம் கேட்க வேண்டிய கேள்வி. ஆனாலும், என்னுடைய திறமையைப் பற்றி முற்றிலுமாகத் தெரிந்தவர் அவர்; அந்தக் கதாபாத்திரத்தை உருவாக்கிய வரும் அவர்தான். நான் அதற்குப் பொருத்தமாக இருப்பேன் என்று அவர் நினைத்ததால்தான் என்னையே நடிக்க வைத்தார்.

உங்கள் நடிப்பில் நல்ல பக்குவம் இருந்ததே! உங்களுக்கு நடிப்பில் முன் அனுபவம் உண்டா?

மிஸ்டர் அண்டு மிஸஸ் ஐயர் எனது மூன்றாவது படம். இதற்கு முன் இரண்டு வங்காளப் படங்களில் நடித்திருக்கிறேன்.

உங்கள் அம்மாவின் இயக்கத்தில் நடிப்பதற்கும், மற்றவர்களின் இயக்கத்தில் நடிப்பதற்கும் ஏதாவது வித்தியாசம் உணர்கிறீர்களா?


ஓ...எஸ். அம்மாவுடன் பணிபுரியும் போது புரிந்து கொள்ளுதல் பெட்டராக உள்ளது. அதுதான் என் திறமையை மிகச் சிறப்பாக வெளிக் கொண்டு வந்ததோ என்னவோ!

மிஸ்டர் அண்டு மிஸஸ் ஐயர்' படத்தில் நடித்த மறக்க முடியாத காட்சி எது?

படத்தின் கடைசிக் காட்சி. ராகுல் போஸிடமிருந்து விடை பெறும் காட்சி. நான் கண் கலங்க கையசைத்து விடை பெற வேண்டும். ஆனால், என் கையில் உள்ள என்னுடைய குழந்தை அவரைப் பார்த்துச் சிரிக்க வேண்டும். அந்தக் காட்சியைப் படம் பிடித்தபோது, கேமராவுக்குப் பின்னால் நின்று கொண்டு, அம்மாவும் மற்றவர்களும்



“‘அம்மா’ மாதிரி ஆகணும்”



கொங்கணா சென் சர்மா பேட்டி

நிறைய வித்தை செய்து குழந்தையைச் சிரிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அதையெல்லாம் பார்த்தபோது எனக்கு சோகம் வராமல், சிரிப்புதான் வந்தது. ஆனால் குழந்தையோ சிரிக்காமல் சதி செய்தது... ஒரு வழியாக அந்தக் காட்சியை எடுத்து முடித்தபோது, எல்லாரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்.

தமிழ்ப் படங்களில் நடிக்க விருப்பம் உண்டா?

வழக்கமான கிளாமர் ஹீரோயினாக நடிக்க ஆர்வமில்லை. சீரியஸ் படங்களாக, பரீட்சார்த்த ரீதியிலான படங்களாக இருந்தால் ஆர்வம் உண்டு. தமிழ் எனக்குச் சுத்தமாகத் தெரியாது. அதேசமயம், நான்தான் என் கேரக்டருக்கு டப்பிங் பேச வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். எனவே நான் தமிழில் நடித்தால், நானே பேச விரும்புகிறேன்.

மூன்றாவது படத்திலேயே தேசிய விருது கிடைத்து விட்டதே! அடுத்தது என்ன?

தேசிய விருது என்பது நடிப்புக்குக் கிடைக்கும் ஒரு பாராட்டு. அவ்வளவுதான். அதுவே நடிப்புலகின் முடிவில்லை. தொடர்ந்து நடிக்க விரும்புகிறேன். ஆனாலும் அம்மாவைப் போல பேசப்படும் இயக்குநராக வேண்டும் என்பதே என் லட்சியம்.

ஹை! தமிழ்நாட்டுக்கு யார் வந்தாலும், வந்தவுடனேயே அம்மா புராணம் பாடுவதைத் தவிர்க்க முடியாது போலிருக்கே!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
படங்கள்: **யோகா**

சறுக்கல் குட்டீஸ்



மாலை ஐந்து மணி ஆனால் போதும்... புதுவை இந்திராகாந்தி ஸ்டேடியம் பிஸி ஆகி விடுகிறது. இளம் தாய்மார்கள், தங்கள் மூன்று நான்கு வயதுக் குழந்தைகளுடன் பரபரப்பாகச் சென்று கொண்டிருப்பதைப் பார்க்க முடியும்.

'ஸ்டேடியத்தில் இவர்களுக்கென்ன வேலை?'' என்ற ஆர்வம் நம்மை தொற்றிக் கொள்ள பின்னால் சென்று பார்த்தால், எல்லா குட்டீஸ்களும் பாஸ்கெட் பால் திடலை நோக்கித்தான். பத்து குட்டீஸ்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கினால் கூட பாஸ்கட் பால் கூடையை எட்ட முடியாதே என்று ஆச்சரியத்துடன் பார்த்தபோது, இளம் தாய்மார்கள் தத்தம் குட்டீஸ்களுக்கு, கலர்கலரான தலைக்கவசம், முட்டிக் கவசம் போட்டு காலில் சக்கரங்களைக் கட்டி பாஸ்கட் பால் கான்க்ரீட் தளத்தில் இறக்கி விட்டார்கள். அவர்கள் சர்...ருக்கிக் கொண்டு போவதைப் பார்த்ததும் தான் "அடடா இது ஸ்கேட்டிங் பயிற்சியல்லவா'' என்று நமக்கு மின்னல் வெட்டியது.


இரண்டு வயதிலிருந்து முப்பத்தைந்து வயது வரை இங்கே ஸ்கேட்டிங் கற்றுக் கொள்கிறார்கள். மாதக் கட்டணம் நூற்று ஐம்பது ரூபாய் மட்டுமே!

"ஸார்... சதர்ன் ஸ்டேட்ஸ் முழுக்கப் பார்த்தால் கூட நாங்க கொடுக்கிற பயிற்சி சூப்பர்'' என்று சொல்கிறார் பயிற்சியாளர் அமரேந்திரா. ஆனால் வசதி குறைந்த குழந்தைகள் ஸ்கேட்டிங் பயிற்சி செய்ய முடியுமா என்ற சந்தேகம் உண்டாகிறது. காரணம், சக்கரங்களின் விலை. நீண்ட காலம் உழைக்கக் கூடிய தரமான சக்கரங்களின் விலை, சராசரியாக ஆயிரம் ரூபாய்.

இங்கே சர்...ருக்கிக் கொண்டிருக்கும் ஜவஹர், பிரசாந்த் ஆகிய பொடிசுகள் அடுத்த சில மாதங்களுக்குள் பெல்ஜியம் சென்று போட்டிகளில் சர்...ருக்கப் போகிறார்கள். அதெல்லாவற்றையும் விட அமரேந்திரா சொன்ன மற்றொரு விஷயம், ஸ்கேட்டிங் கொழுப்பைக் குறைக்குமாம்! நம் அரசியல்வாதிகளுக்குக் கொஞ்சம் ஸ்கேட்டிங் சொல்லித்தரலாமே!

— ஸ்ரீநி

படம் : டிஜி



ஸ்ரீ டிராவல்ஸ்

194 - a. முதல் மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
Ph:28516799, 28513109, 28513122, 55870482
E-Mail:sritrave@satyam.net.in Web:www.sreetravels.com

ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அற்புதமான தசரா விடுமுறை கால விசேஷ சுற்றுலாக்கள்

5 பேர் அல்லது அதற்கு மேல் உள்ள குழுவினருக்கு அனைத்து வசதிகளும் கொண்ட பிரத்தியேக சுற்றுலாக்கள். (உங்கள் ஊரில் இருந்தே நீங்கள் விரும்பும் தேதிகளில்)
சிம்லா - குலு - மணாலி - கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் - காத்மாண்டு - போக்ரா - முக்திநாத் - அலகாபாத் - வாரணாசி - கயா - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - டில்லி - ஜெய்ப்பூர் - ஆக்ரா - அந்தமான் தீவுகள் - லட்சத்தீவுகள். (45 நாட்களுக்கு முன்பே முன்பதிவு அவசியம்) ராஜஸ்தான் சுற்றுலா.

4 அல்லது 5 நாட்கள் கொண்ட குறைந்த காலச் சுற்றுலாக்கள்

ஹைதராபாத் - அவுரங்காபாத் - ஷீரடி: மைசூர் - மெர்க்காரா - விசாகப்பட்டினம் - அரக்கு பள்ளத்தாக்கு - போரா குகைகள்: கொச்சி - ஆலப்புழா: பூனா - மகாபலேஷ்வர்: கொடைக்கானல் - மூணாறு: ஊட்டி - மூணாறு: கோவா

ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அருமையான தசரா விடுமுறை காலச் சுற்றுலாக்கள் ஹிமாசல சுற்றுலா

1. சென்னை - ஆக்ரா - சண்டிகார் - சிம்லா - குலு - மணாலி - டில்லி - சென்னை.
பயண நாட்கள்:12 புறப்படும் தேதி: **26.09.03** பயணத்தொகை ரூ. **6,900/-**

2. சென்னை - கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் - காத்மாண்டு - போக்ரா - வாரணாசி - சென்னை.
பயண நாட்கள்: **15,** புறப்படும் தேதி: **27.09.03** பயணத்தொகை: **13,700/-**
(பிராட்நகர் - காத்மாண்டு - வாரணாசி விமானப் பயணங்களுடன்) கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் மட்டும். பயண நாட்கள்: **10** பயணத்தொகை ரூ. **6,500/-**

3. சென்னை - போர்ட்பிளேயர் - சென்னை
பயண நாட்கள்: **8,** புறப்படும் தேதிகள்: செப்டெம்பர் **12, 19, 26.** அக்டோபர் **3, 19, 17.**
பயணத்தொகை: **13, 900/-**

4. சென்னை - திருச்சி - கொழும்பு - கண்டி - திரிகோண மலை - நுவரெலியா - கதிர்காமம் - சென்னை.
பயண நாட்கள்: **6** நாட்கள், புறப்படும் தேதிகள்: **27.9.03, 11.10.03**
பயணத்தொகை ரூ. **18,900/-**

ராஜஸ்தான் சுற்றுலா

சென்னை - ஜெய்ப்பூர் - பீகானேர் - ஜெய்சல்மார் - ஜோத்பூர் - உதய்பூர் - மவுண்ட் அபு - சித்தர்கள் - ஆஜ்மீர் - புஷ்கர் - சென்னை.
பயண நாட்கள்: **13** புறப்படும் தேதி: **19.10.03** பயணத் தொகை: **9,500/-**

அனைத்து இடங்களிலும் தரமான ஓட்டல்களில் தங்கும் அறைகள், தென்னிந்திய சைவ உணவு மற்றும் 2 x 2 இருக்கை கொண்ட பேருந்துகள்.

விடிந்தும் விடியாத



ரேவதி பாலு

"ஏய்! ஓங்கொப்பன் வர்ற நேரமாச்சுடா! அவன் கண்ணுல படாம சீக்கிரம் எங்கினாச்சும் போய் மொடங்கிங்கடா!" பஞ்சவர்ணம் அபயக் குரல் கொடுத்தாள்.

நோட்டுப் புத்தகங்களைப் பரப்பி வைத்து கொண்டு வீட்டுப் பாடங்களைச் செய்து கொண்டிருந்த ஒன்பதாவது படிக்கும் மதி என்கிற மதியழகனும், ஐந்தாவது படிக்கும் செல்வியும், சட்டென்று எல்லாவற்றையும் ஏறக்கட்ட ஆரம்பித்தனர்.

தினமும் வேலையிலிருந்து திரும்பும் போதே குடித்து விட்டு வரும் வேலு, எதை சாக்கு வைத்து வம்புக்கிழுப்பான் என்றே சொல்ல முடியாது.

போன வருட முழுப்பரீட்சையின் போது ஒரு நாள் இரவு, செல்வியும் மதியும் அடுத்த நாள் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தார்கள்.


படிப்பு மும்முரத்தில் வேலு உள்ளே நுழைந்ததை இருவரும் கவனிக்கவில்லை.

வேகமாக அருகே வந்த வேலு, "இன்னாடா? அப்பன் நொழஞ்சதியே பாக்காத மாதிரி பாவ்லா பண்ணிக்கினு குந்திக்கினுகிரே? திமிரா?" என்று காலாலேயே மதியை ஒரு எத்து எத்தினான்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலால் நிலை தடுமாறி மதி கீழே உருள, செல்வி நடுநடுங்கிப் போய் ஆயா பஞ்சவர்ணத்தின் மடியில் ஒண்டிக் கொண்டாள்.

"ஓங்கொப்பன் படிக்காதவன். நீ படிக்கிறேன்னு ஒனக்கு ஆணவண்டா!" என்று கத்திக் கொண்டே, சட்டென்று கைக்குக் கிடைத்த ஒரு நோட்டுப் புத்தகத்தைக் குறுக்காகக் கிழித்துப் போட்டான் வேலு.

"நாளைக்கிப் பரீட்சைப்பா!" என்று கதறிக் கொண்டே நோட்டுப் புத்தகங்களைக் காப்பாற்ற முயன்ற மதிக்கு இன்னொரு உதை பரிசாகக் கிடைத்தது.



வேலு இன்னொரு நோட்டைத் தள்ளாடிக் கொண்டே எடுக்க முயல, தன் மடியிலிருந்த செல்வியைத் தள்ளி விட்டு விட்டு பஞ்சவர்ணம் ஓடி வந்தாள்.

"பசங்க படிக்குற நோட்டுப் புத்தகத்தை எடுக்காதடா! அவனாச்சும் படிச்சு உருப் படட்டும்!" என்று கத்திக் கொண்டே அவ னருகில் ஓட, அப்போதுதான் 'வூட்டு வேலை' முடிந்து வீடு வந்த பெரியநாயகி, பதறிப்போய் தரையில் கிடந்த நோட்டுப் புத்தகங்களை வாரி எடுத்தாள்.

"அப்போ.. ஒம்புள்ள உருப்படாதவன், சோமாறி, கேனப்பயன்னு சொல்லுற நீ, இல்லே?" என்று வேலு பாய்ந்து வந்து பஞ்சவர்ணத்தின் தலைமுடியைப் பிடித்து உலுக்க,

"வுடுய்யா அத்தைய!" என்று பாய்ந்து வந்தாள் பெரிய நாயகி.

"ஒரு நாளைப் போல இப்பிடி குடிச் சுட்டு வந்து கலாட்டா பண்றியே, ஒனக்கு அந்த பாழும் தெய்வந்தான் கூலி குடுக் காதா?" என்று பெரிய நாயகி வசைமாரி பொழிய, வேலு பஞ்சவர்ணத்தை விட்டு விட்டு பெரிய நாயகியின் தோளை முரட்டுத்தனமாகப் பற்றினான்.

சட்டென்று பெரிய நாயகி சுதாரித்துக் கொண்டாள்.

"நாள் மூச்சூடும் ஓழச்சிப்புட்டு வர்றே இல்லே? ஏன் வீணா கத்திக்கினு கெடக்குற? வா! ஆக்கி வச்சதை துண்ணுப்புட்டு அக்கடான்னு படுப்பியாம்!" என்று குரலை இறக்கி நயமாகப் பேச ஆரம்பித்தாள்.

பஞ்சவர்ணம் ஓடிப்போய் கும்பாவில் சோற்றைப் போட்டு எடுத்துக் கொண்டு வந்தாள்.

"என் ராசா, வா! வந்து துண்ணு!" என்று பிரியமாக மகனை அழைத்தாள்.

வயிறு நிறைந்து விட்டால் வேலு மேற்கொண்டு கலாட்டா பண்ணாமல் படுத்து விடுவான். பிறகு விடியும்வரை தொந்திர வில்லை என்பது அவர்கள் கணக்கு.

வேலு ஒரு கை தேர்ந்த டிங்க்கர். அருகில் இருக்கும் ஒரு சின்னப் பட்டறையில் வேலை.

காலை ஏழரை மணிக்கு நாஷ்டா பண்ணிவிட்டுக் கிளம்பினால், பட்டறையிலிருந்து வீடு திரும்ப இரவு எட்டு மணியாகிவிடும்.

நாள் முழுவதும் கடின உழைப்பு. இரவு கொஞ்சம் குடித்தால்தான் உடம்பு வலி மறந்து தூங்க முடிகிறது என்று தான் திருமணமான புதிதில் சொல்லிக் கொண்டிருந்தான் வேலு. பெரிய நாயகியும் ஒன்றும் அல்லோ அயலோ இல்லை. சொந்தத் தாய் மாமனின் மகள் தான்.

"ஊருல குடிக்காதவன் எவன் இருக்கான் சொல்லு? குடிச்சா கூட இவன் ஒழுங்கா வூட்டுக்கு வந்திர்றானில்ல? ராவிக்கு வெளியே தங்கறதில்லேல்லே? நீ அத்தே யோசிச்சுப் பாரு!" என்றுதான் பஞ்சவர்ணம் தன் மருமகளுக்கு அடிக்கடி ஆறுதல் சொல்வாள்.

பெரியநாயகியும் சுபாவத்தில் சண்டைக்காரி இல்லைதான். ஆனால் சாதாரணமாகவே முரட்டுத்தனமும் கோபமும் மிகுந்த வேலு, குடித்ததும் மிருகமாவே மாறிப் போவதைத்தான் அவளால் தாங்கவே முடியவில்லை.

'குடிச்சிட்டு இவுங்கொப்பன் ஆடாத ஆட்டமா?' என்று வேலுவைப் பார்த்து அவ்வப்போது தனக்குத் தானே முனகிக் கொண்டாலும், மருமகளும் பேரப்பிள்ளைகளும் படும் பாடு கண்டு நொந்துதான் போவாள் பஞ்சவர்ணம்.

பாதி சம்பளம்தான் வீட்டுக்குத் தருகிறான். மீதிச் சம்பளம், ஓவர்டைம், போனஸ் எல்லாம் குடிக்கே என்று எழுதி வைத்தாகிவிட்டது.

குழந்தைகள் பிறந்த பிறகு வீட்டுச் செலவுக்குக் காசு பற்றாமல், பெரிய நாயகி நாலு வீடுகளில் 'வூட்டு வேலை'க்குப் போக ஆரம்பித்திருக்கிறாள்.

அதில் ஒரு வீடு பக்கத்துத் தெருவில். கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போகிறார்கள். அவர்கள் வந்த பிறகு இரவு ஏழு மணிக்குப் போய் பாத்திரம் துலக்கிக் கொடுக்க வேண்டும்.


அந்த வீட்டு வேலையை அவள் முடித்துக் கொண்டு வருமுன் வேலு வீட்டுக்கு வந்து விட்டால், அமர்க்களம் அதிகமாகி விடும்.

"எங்கேடி ஊர் மேய்ஞ்சிட்டு புருஷன் வூட்டுக்கு வந்த பொறவு நிதானமா வரே?" என்று அவள் நுழைந்ததுமே சண்டைக்கு அறை கூவல் விடுவான்.

அடுத்தபடியாக திடீரென்று "மீன் குழம்பு போடு" என்று ஆரம்பிப்பான்.

பெரியநாயகி, "நாளைக்கி ஆக்கிப் போடறேன். இன்னிக்கு கத்தரிக்கா கொழம்புதான் இருக்கு" என்று பதில் சொன்னால்,

"சம்பாதிக்கிற ஆம்பிளைக்கு வாய்க்கு வக்கணையாக ஆக்கிப் போட வக்கில்லாத நீ, இப்பவே வூட்டை வுட்டு ஓடிப்போ!" என்று எட்டி எட்டி உதைப்பான். கைக்குக் கிடைத்ததையெல்லாம் எடுத்து வீசி



— அம்பை தேவா

அடித்து, ஒரே ரகளை யாக இருக்கும்.

ஒரு நாள், வேலு 'நல்ல மூடில்' இருந்த போது,

''குடிக்கிறவங்களை மருந்து குடுத்து சொஸ்தம் பண்ணிடறாங்களாம் மாமா. நீ வர்றியா, நா ஆஸ்பத்திரிக்கு இட்டுக்கினு போறேன்?'' என்று பக்குவமாகக் கேட்டாள் பெரியநாயகி.

கேட்டதே தப்பாகிவிட்டது.

"யாரைப் பார்த்து குடிகாரன்றே?'' என்று 'பிலுபிலு'வென்று பிடித்துக் கொண்டான்.

அது குடிக்கிறவர்கள் செய்கிற தந்திர மாம். 'வூட்டு வேலை' செய்யற வீட்டு அய்யா சொல்லித்தான் பெரிய நாயகிக்குப் புரிந்தது.

அவர்களே முந்திக் கொண்டு கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணினால், எதிரணி எதுவும் கேட்காமல் பயந்து வாயை மூடிக் கொண்டு போய் விடுவார்கள் என்ற நினைப்பில் இப்படிச் செய்வார்களாம்.


என்றும் மாறாத கணவன், கண்களில் நிரந்தரமாகக் குடி கொண்டுவிட்ட மிரட்சி யுடன், தகப்பனை நெருங்கவே பயப்படும் குழந்தைகள், வயோதிகத்தோடு வருத்தமும் சேர்ந்து கொள்ள எப்போதும் புலம்பிக் கொண்டிருக்கும் மாமியார்!

பெரியநாயகிக்கு வாழ்க்கையே அலுத்துப் போனது.

அன்று உடம்பு முடியாமல் பெரிய நாயகி வீட்டிலேயே முடங்கிக் கிடந்தாள். வேலு பட்டறைக்குப் போயாகிவிட்டது. குழந்தைகள் பள்ளிக்குப் போய் விட்டார் கள்.

பஞ்சவர்ணம் எப்பவும் போல் 'போரிங்' பைப்பில் தண்ணீர் அடித்துக் கொண்டு வந்து குளித்துவிட்டு, நடு வீட்டில் காமாட்சி விளக்கேற்றிக் கும்பிட்டாள். ஊதுவத்தியைக் கொளுத்திக் கொண்டு வாசலுக்கு வந்து சூரியனுக்குக் காட்டினாள். சூரியனைப் பார்த்து இரு கைகளையும் விரித்து, மனதார ஏதோ பிரார்த்தனை செய்துக் கொண்டாள்.

"சாமி தான் நம்பளை இந்த வாட்டு வாட்டுதே? அத்தயேன் இப்பிடி வுழுந்து வுழுந்து கும்பிடறே?'' என்றாள் பெரியநாயகி எரிச்சலுடன்.



– தஞ்சை தாமு

பஞ்சவர்ணம் சற்று நேரம் ஒன்றும் பேச வில்லை. அந்த முதியவளின் கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

"அய்யே! இப்ப நா இன்னா சொல்லிட் டேன்னு நீ அழுவறே?'' என்றாள் பெரிய நாயகி.

"இந்த பய புள்ள அடிக்குற கூத்தில ரா வந்திச்சின்னாலே மனசில ஒரு அச்சம். இன்னிப் பொழுது நல்ல பொழுதா போகு மான்னு மனசு அடிச்சிக்க ஆரம்பிக்குது. அவன் ஒறங்கினான்னு தெரிஞ்சா தான் நாம்ப படுக்கவே முடியுது. அதிலும் நா வயசானவ. பாதி ராவுல முழிப்பு வந்திச் சின்னா அத்தோட அன்னைய ஒறக்கம் போச்சு. இந்த ராவு நீண்டுக்கிட்டே போவுதே, விடியவே விடியாதான்னு மனசில நெனப்பு ஓடும். காலையில வெளிச்சம் வந்து பொழுது விடிஞ் சிடுச்சின்னு தெரிஞ்சதும், 'இந்த மட்டும் நேத்திப் பொழுது ஒரு வழியா முடிஞ்சதே ஆண்டவனே'ன்னு மனசுல ஒரு ஆசுவாசம் வரும் பாரு... இந்த சூரியன் மட்டும் வராமல் போனா, நமக்கு இந்த விடிவு கூட இல்லியேன்னு நெனைக்கறப்போ...'' பேச்சை முடிக்க முடியாமல் அழுகையில் குலுங்கி யது பஞ்சவர்ணத்தின் உடல்.

அவள் முதுகை ஆதரவாக அணைத்துக் கொண்ட பெரியநாயகியின் முதுகும் துக் கத்தில் குலுங்கியது. ○



ஜல்லு மல்லு

—கதிர்



என்ன படிக்கிற?
காப்மேயரோட 'சுய முன் னேற்றம்' புக்!
அப்படி இதுல என்னதான் சொல்ல வராரு?
எதுலயும் பாசிடிவ் திங்கிங் வேணும்னு சொல்றாரு.
அதுக்கு எதுக்கு காப்மேயர்? நம்ம டைரக்டர் விக்ரமன்தான் அதை இருவத்தஞ்சு ரூபாய்க்கே விக்கறாரே.
என்னடா சொல்றே?
நீ மட்டும் விக்ரமன் படத்தைப் பாத்துட்டு வெளியே வரும்போது பாரு... உன் பிளட் குரூப்கூட பாசிடிவா மாறியிருக்கும்.
அப்படியா?
சொன்னா நீ நம்ப மாட்ட. இதே மாதிரிதான் போன வாரம் ஒருத்தன் விக்ரமன் படத்தைப் பாத்துட்டு ஆர்வக் கோளாறில் ஊறுகாய் பாக்கெட் வித்தே லட்சாதிபதி ஆயிட்டான்னா பாத்துக் கோயேன்!
ஆச்சர்யமா இருக்கே! எப்படி?
அந்த ஆள் அதுக்கு முந்தியே கோடீஸ்வரனா இருந்தவன் தானே!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka